@NewsRotary

/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

பிப்ரவரி 2018

Rotary




சர்வதேசத்தின் அடையாளம்

# ரோட்டரி சர்வதேச மாநாட்டிலிருந்து…




**RIPE** பேரி ரெஸ்ஸினும் அவர் துணைவி எஸ்தரும், கொரினா ஹுவாங் (வலது கோடியில்) மற்றும் தாய்வான் நாட்டு பிரதிநிதிகளுடன் சான் டியாகோ மாநாட்டில்.

# உள்ளே




**12** இந்திய கிரிக்கெட்டின் நாகரிக குரு மற்றும் ஐடியாவாலே பாபா

*பிரபல கிரிகெட் வீரர்கள் ஜகீர்கான் மற்றும் யுவராஜ் சிங்குடன் D 3131 மாநாட்டில் நடைபெற்ற பேட்டியின் உரையாடல்.*

**20** என்றுமே பணம் எனக்குப் பிரதான மில்லை

*ரோட்டரி நிதி அறங்காவலர் பால் நெட்செல்லுடன் நேர்காணல்.*





**32** தலைமைப் பண்பு தொடரட்டும்

*கோலாலம்பூர் மாநாட்டில் DGE மற்றும் GETS அமர்வில் RID ஜான் சி மாத்யூஸ் பகிர்ந்த மதிக்கத்தக்க குறிப்புகள்.*

**28** ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்குவதில் முதல் 9 இடங்களுள் 4 & 5ம் மண்டலங்கள்

*கோலாலம்பூர் மாநாட்டில் நடந்த TRF கருத்தரங்கத் தொகுப்பு.*

**35** கிராம மக்களுக்கு மாமோக்ராஃபி

*புற்றுநோயிலிருந்து பெண்களைப் பாதுகாக்க, RC அமராவதி மிட்டௌனின் முயற்சி.*

**36** எனது ரோட்டரி ஒரு ரோட்டரி

*நாட்டைச் சுற்றி புனே ரோட்டரியினர் மேற்கொண்ட கார் பேரணி.*



**48** பள்ளிக்கு செல்ல மிதிவண்டிகள்

*RC புனே சிவாஜிநகர் சிறுமிகளைப் பள்ளிக்குச் சொந்த சைக்கிளில் செல்ல செய்த உதவி.*

**70** உணர்வுப் பனிமூட்டம் விலகட்டும்

*பாதுகாப்பற்றத் தன்மையை அகற்றி உள்மன அமைதியை அனுபவிக்கக் கண்டறியும் முறை.*



**52** ஸ்தம்பிக்க வைக்கும் ஹம்பி

*விஜயநகரத் தலைநகரத்தின் சிறப்பில் மெய்மறந்து புது யுகத்தைக் காணலாம் வாருங்கள்!*


அட்டையில்: பன்னாட்டுக் கூட்டத்தில் பிற பேராளர்களுடன் D 3202 DGE EK உம்மர்.

நிழற்பட உதவி: மோனிகா லோஸின்ஸ்கா/RI

## உஷா சாபூவின் துணிவும் நேர்மையும் நிறைந்த கவனிப்புகள்

ஜனவரி இதழைப் பார்க்கும் போது பதிப்பின் தொடர்ச்சி, தேர்ந்தெடுத்த கருத்துகள், விளக்கம், வடிவமைப்பு அனைத்தும் என்னைக் கவர்ந்தன. தேவையற்ற செலவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ரஷிதா பகத்தின் எழுத்துகள் அற்புதம். இதை தான் ரோட்டரியினர் சங்கக் கூட்டத்தின் உள்ளும் புறமும் முணுமுணுக்கின்றனர். இக்கட்டுரை ஆசிரியரின் துணுச்சலை வெளிப்படையாகக் காட்டுகின்றது. உஷா சாபூவின் கருத்துகள் நினைவுக்கு விருந்தாக அமைந்தன. வார்த்தைகளைத் தாண்டி தேவையற்ற செலவுகளைக் கூட்டத்திலிருந்து நீக்கி எளிமையாக சேவை மனப்பான்மையுடன் செயலில் ஈடுபட வேண்டும். நமது சங்கம் சமூகச் சேவைக்காக இயங்குவதை மறக்கக் கூடாது. ஆசிரியருக்கும் அவரது குழுவிற்கும் வாழ்த்துகள்.

சி கே சர்தனா, RC போபால்
மிட்டௌன் - D 3040



PRIP ராஜேந்திர சாபூவின் மனைவி உஷா சாபூவின் 57 வருட சேவைகள் என்னைக் கவர்ந்தன. மாவட்டக் கூட்டங்களில் உள்ள தேவையற்ற செலவுகளையும் ஊதாரித்தனத்தையும் வெளிப் படையாக நேர்மையாக எடுத்து ரைத்திருக்கிறார். மேலும் இந்திய வீரர்களுக்கு இனிப்புகளை தீபாவளியின் முதல் நாள் வழங்கி சிறந்த சேவையாற்றியுள்ளார். 82 வயதில் மனித சேவையில் பேரார்வம் கொண்டுள்ளார். அதற்காகப் பாராட்டி பெருமைக் கொள்கிறோம்.

D ஹரிஸ்சந்திர ராமா
RC அனந்தபூர் - D 3160

## சுய பரிசோதனைக்கான நேரம்

ஜனவரி இதழில் வெளியான 'வெளிப்படையாகப் பேசினால்' கட்டுரையை எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டும். மேலும் மாவட்ட கவர்னருக்கான தேர்தலில், RIயினால் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டும், பணத்தின் சக்தியாலும் பெரிதான வாக்குறுதியாலும் போட்டியிடப் படுகிறதென்பது வருந்தத்தக்கது என்று PRIP ராஜேந்திர சாபூ கூறுகிறார். இதனால் ரோட்டரியினர் இந்தியாவில் செய்யும் சேவைகள் மறைக்கப்படுகிறது என்றார். மாவட்டத்திலும் அயல் நாட்டிலும் PETS, AGTS போன்ற திட்டங்கள் நடைபெற்றாலும், தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் பயணத்தில் நிதி நெருக்கடியைச் சந்திக்கின்றனர்.

இதனால் ரோட்டரியனர் தலைவர் மற்றும் செயலாளர் பதவியை ஏற்கத் தயங்குகின்றனர் பல மாவட்டங்கள் 500 பக்கங்கள் (சில நேரம் 2 பகுதிகள்) கொண்ட பெரிய விவரப்புத்தகங்களைப் பளபளப்பான தாள்களில் பதிப்பித்து ள்ளன. இதற்கு AG மற்றும் தலைவர்கள் விளம்பரம் திரட்ட தேவைப்படுகிறது. காகிதமற்ற இந்த யுகத்தில் இது பெரும் வீண். மாவட்டத்திற்கு நல்ல வலைதளத்தை உருவாக்கி தகவல்களை தரலாம். DDF மற்றும் TRF போன்ற நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை இல்லாததையும் நாம் கவனிக்க வேண்டும்.

R சிவராமகிருஷ்ணன்
RC திருவனந்தபுரம் நார்த் - D 3211



## நன்கு வடிவமைத்த தலையங்கம்

ஜனவரி இதழ் ஒரு மாயப்பெட்டியாக அமைத்தற்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். அதில் பல செய்திகள் நுட்பமாக வடிவமைக்கப்பட்டு மேல்நிலை ரோட்டரியினர் மனதில் பதிந்த செய்திகள் இருந்தன. நாம் புகாரை விரும்புவதும் கடிதத்தை எழுதி அனைவருக்கும் பகிர்வதும் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு பதில் இணையமல்லாத கண்ணியமான வழியில் தீர்வுக் காண வேண்டும். நேர்மையற்ற உறுப்பினர் எண்ணிக்கை, குறைவான பெண் உறுப்பினர் மற்றும் தேர்ந்த தலைவர்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை தர வேண்டும். 4 – வழி – தேர்வு என்பது ஏதோ ஒன்றாக இல்லாமல் அதை செயல்படுத்த வேண்டும் என்று RI தலைவர் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

V K பன்சால், RC டில்லி
அப்டௌன் - D 3012

RC ஜெர்சி சிட்டியுடன் எனது சங்கம் நடத்திய பன்னாட்டுத் திட்டம் அருமையானது. குளோபல் க்ராண்ட் திட்டம் குறித்த விரிவுரை, பள்ளிகளை அச்சங்கம் செயல்பெற்றவையாக மாற்றிய இந்தியாவின் பெருமைக்குரிய திட்டத்தில் கொண்ட அக்கறையைப் பாராட்டியது. இந்த பத்திரிகையை அக்கறையுடன் கொண்டு வந்த ரோட்டரி செய்தி குழுவிற்கு எனது நன்றிகள்.

ப்ரதீப் வாக்,
RC புனே சிவாஜி நகர் - D 3131

RI இயக்குநர் C பாஸ்கர் தெரிவித்த செய்தி — நமது பணி மூலம் சேவை செய்வோம் — என்பது விழிப்புணர்வாக அமைந்தது, குறிப்பாக சமீபத்தில் ஓய்வு பெறுபவருக்கு எஞ்சிய ஓய்வு காலத்தை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளும் முறையை கூறியது. சான்றாக 76 வயது கல்யாண சுந்தரம் தனது மொத்த வருமானத்தையும் ரூ.30 கோடியையும் அனாதைகளின் நலனுக்காக வழங்கியதைக் கூறலாம். ஜனவரி இதழில் எல்லா கட்டுரைகளும் குறிப்பாக உஷா சாபூவின் ஊதாரித்தனத்தைக் குறைக்க வேண்டும் என்பது, தலைமைக்கான 10 குறிப்புகள் ஆகியவை நல்ல வாசிக்கும் அனுபவத்தைத் தந்தன. இந்த இதழைத் தரத்தோடு நடத்தி வரும் ரோட்டரி செய்திக் குழுவிற்குப் பாராட்டுகள்.

M T பிலிப், RC திருவனந்தபுரம்
சபர்பன் - D 3211

KL மண்டல மாநாட்டில், GETS அமர்வு நன்கு திட்டமிட்டு PDG சாம் மோவாவின் தலைமையில் நடந்ததை எண்ணி மகிழ்கிறேன். அவருக்கும் நிகழ்ச்சியின் தலைவர் R தீனசந்திரனுக்கும் KL மாநாட்டிற்கு பெரும் வெற்றியைத் தந்ததற்காக நன்றிகள்.

என் ஜகதீசன்
RC எல்லூரு - D 3020

## சிறு சங்கங்களுக்குக் கூடுதல் வலிமை

திறமையான தலைவருக்குத், திட்டமிடல், கவனித்தல் மற்றும் சொந்த பங்களிப்பு என்ற மூன்று தகுதிகள் தேவை. ரஷிதா பகத் கூறும் இவற்றை வாசகர்கள் ஏற்பார்கள். கலைத்திறன் பெற்ற அவர் அற்புதமான படங்களை கவனித்தும் அதைப் பயன்படுத்தியும் சிறப்பாக பதிப்பித்துள்ளார். டிசம்பர் இதழின் பக்கப்படங்கள் இதற்குச் சிறந்த சான்று. RC பெங்களூருவில் 106 அரசுத் தொடக்கப்பள்ளியைப் புதுப்பித்து அவர்களுக்கு நவீன வசதிகளைத் தந்த சங்கத்திற்கு பாராட்டுகள். போலியோவை ஒழித்த ரோட்டரிக்குக் காசநோயைக் கையாள்வது கடினமானதல்ல என்ற Dr சௌமியா சுவாமிநாதனின் சிந்தனை (*காசநோய் ஒழிப்புச் சவாலை ஏற்போம்*) படிக்கக் கூடியதாகவும் செயலாற்றத் தூண்டுவதாகவும் இருந்தது.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் - D 3080

அகர்தளாவில் பல மாவட்ட மாநாடான *சேதுபந்தன்* குறித்த விவரங்களை திறம்படக் கூறியுள்ளீர்கள். இக் கட்டுரையின் படங்கள் பாலமாக செயல்படும். ஹொஸ்பெட் ரோட்டரியினரின் சமூகத்திற்காக கண் வங்கி, டயலிஸிஸ் நிலையம் அமைத்த அயராத உழைப்பும் பாராட்ட வேண்டியவை. சங்கம் நடத்திய நல்ல திட்டங்களை அதன் உறுப்பினராக நான் அறிவேன். அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.
சென்னையிலிருந்து தொலைவில் உள்ள ஆற்றல் மிக்க சிறு சங்கங்களைக் கவனிக்கும் முயற்சிகளை உங்கள் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது மிகச் சரியானது; பொருத்தமானது.

S ரங்கராஜன், RC திருநெல்வேலி
சபர்பன் - D 3212

எப்போதும் போல டிசம்பர் இதழுக்காக ஆர்வத்துடன் காத் திருந்தேன். அதில் பல்வேறு செய்திகள் இடம்பெற்றதையும் அறிந்தேன். ஆம், நாங்கள் 2 வருடங்கள் வாழ்ந்த வடகிழக்குப் பகுதியான ஷில்லாங் அற்புதமான இடம். உங்கள் நற்பணியை தொடருங்கள்.

காப்டன் தியோதர்
RC நாசிக் - D 3030

*சேதுபந்தன்* குறித்த பக்கக் கட்டுரை அருமை. ரவீந்திரநாத் தாகூர் அரங்கத் தில் நடைபெற்ற நிகழ்வின் சிறந்த படங்களை பக்க அட்டையாக அமைத்து "தாகூரின் பாத சுவடில்" என்ற கோஷத்தை அமைத்தது அதன் முக்கிய அம்சமாகும். தேசிய கீதத்தை தந்து நோபல் பரிசு பெற்ற அவர் குறித்த சுருக்கத்தை தந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

AL பெரியண்ணன் சண்முகம்
RC மதுரை மிட்டௌன் - D 3000

*ரோட்டரி நியூஸின் புதிய* 'பான் இந்தியா' என்ற மாற்று கொள்கை நேர்மறையாகவும் பெருமளவிலும் அமைந்துள்ளது. இதுவரை புறக் கணிக்கப்பட்ட சிறு சங்கங்களைப் பெருந்திட்டத்தில் ஈடுபட உற்சாகப்படுத்துகிறது. ஒவ்வொரு இதழிலும் உள்ள ரோட்டரியின் புதுமையான செயல்திட்டம் குறித்த கட்டுரைகள் உங்களை சுய பரி சோதனை செய்து கொள்ளலாம். உங்கள் யோசனைகளும் நம்பிக்கை களும் ரோட்டரியின் உண்மை தூது வர்கள். ரஷிதா பகத்தின் கட்டுரை காசநோய் ஒழிப்புச் சவாலை ஏற்போம் என்பது போலியோவை இந்தியா உள்ளிட்ட பல நாடு களிலிருந்து விரட்டிய ரோட் டரியினருக்கு சாதிக்கக் கூடியவையே என்று கூறியிருப்பது பாராட்ட வேண்டியது. இது காசநோயைக் கவனிக்க வேண்டிய தருணம்.

பேரா சிவ் சேத்தி
RC ஃபெரோஸ்பூர்
கன்டோன்மெண்ட் - D 3090

## RI தலைமையிலிருந்து வந்த திடமான செய்தி

டிசம்பர் இதழ் 'சான்றோர் ஒருமித்த கருத்துடையோர்' என்பதை சுட்டி க்காட்டியுள்ளது. RIன் மூன்று பிம்பங்களான தலைவர் இயான் ரைஸ்லி, இயக்குனர் C பாஸ்கர் மற்றும் அறக்கட்டளைத் தலைவர் பால் நெட்செல் ஆகியோர் 3 திட்டங்களில் கவனம் செலுத்தினர். இயக்குனர் C பாஸ்கர் நீரிழிவு நோயாளிகள் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளதால் நீரிழிவு சோதனை முகாம்கள் அந்தந்த மாவட்டங்களில் நடத்த வேண்டும் என்றார்.
RC ஜல்னா மிட்டௌன், D 3132, நீர்த் தூய்மைக்கான இரு சிறந்த திட்டங்களை (சுத்த ஜல், நவம்பர் இதழ்) வலியுறுத்தியுள்ளது. அனைத்து ரோட்டரியினரும் இந்தத் திட்டங்களை செயலாற்றி மாணவர்களும் கிராமத் தினரும் குடிநீர் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

GV சாயகவி, RC தவனகிரி
வித்யாநகர் - D 3160

தங்கள் மேன்மையான கருத்துக்களை எங்களுடன் rotarynews@rosaonline.org அல்லது rushbhagat@gmail.com என்ற E-mail ல் பகிர அழைக்கிறோம்.

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | P S Ramesh Babu |
| RI Dist 2982 | DG | Dharmesh R Patel |
| RI Dist 3000 | DG | P Gopalakrishnan |
| RI Dist 3011 | DG | Ravi Choudhary |
| RI Dist 3012 | DG | Sattish Singhal |
| RI Dist 3020 | DG | G V Rama Rao |
| RI Dist 3030 | DG | Dr K Sunder Rajan |
| RI Dist 3040 | DG | Dr Zamin Hussain |
| RI Dist 3053 | DG | Rajkumar Bhutoria |
| RI Dist 3054 | DG | Maullin Manubhai Patel |
| RI Dist 3060 | DG | Ruchir Anirudh Jani |
| RI Dist 3070 | DG | Parvinder Jit Singh |
| RI Dist 3080 | DG | T K Ruby |
| RI Dist 3090 | DG | Bagh Singh Pannu |
| RI Dist 3110 | DG | Vinay Kumar Asthana |
| RI Dist 3120 | DG | Ranjeet Singh |
| RI Dist 3131 | DG | Abhay Gadgil |
| RI Dist 3132 | DG | Vyankatesh Vithal Channa |
| RI Dist 3141 | DG | Prafull J Sharma |
| RI Dist 3142 | DG | B M Sivarraj |
| RI Dist 3150 | DG | J Abraham |
| RI Dist 3160 | DG | Madhu Prasad Kuruvadi |
| RI Dist 3170 | DG | Anand G Kulkarni |
| RI Dist 3181 | DG | M M Chengappa |
| RI Dist 3182 | DG | G N Prakash |
| RI Dist 3190 | DG | Asha Prasanna Kumar |
| RI Dist 3201 | DG | Vinod Krishnan Kutty |
| RI Dist 3202 | DG | Sivashankaran P M |
| RI Dist 3211 | DG | Suresh Mathew |
| RI Dist 3212 | DG | Chinnadurai Abdullah |
| RI Dist 3231 | DG | Jawarilal Jain K |
| RI Dist 3232 | DG | R Srinivasan |
| RI Dist 3240 | DG | Sunil Saraf |
| RI Dist 3250 | DG | Vivek Kumar |
| RI Dist 3261 | DG | Harjit Singh Hura |
| RI Dist 3262 | DG | Ajay Agarwal |
| RI Dist 3291 | DG | Brojo Gopal Kundu |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakhar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |

### Executive Committee Members (2017–18)

DG B M Sivarraj — RI Dist 3142
Chair – Governors Council

DG R Srinivasan — RI Dist 3232
Secretary – Governors Council

DG Abhay Gadgil — RI Dist 3131
Secretary – Executive Committee

DG Vivek Kumar — RI Dist 3250
Treasurer – Executive Committee

DG P Gopalakrishnan — RI Dist 3000
Member – Advisory Committee

## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road
Egmore, Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail : rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by Mukesh Arneja at Thomson Press (India) Ltd, Plot A-9, Industrial Complex, Maraimalai Nagar 603209, India and published by Mukesh Arneja on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

EDITOR'S
NOTE



# பெருமைக்குப் பின்னால்
# வலியும் கண்ணீரும்

பிரபலங்களை அதிலும் குறிப்பாக விளையாட்டின் உச்சத்தை அடைந்து எளிதாக விளையாடும் வீரர்களைக் காணும்போது அவர்களின் புகழை மட்டுமே கருத்தில் கொண்டு காயங்கள்,வலி, மன உறுதி, தீர்மானம், நீண்ட போராட்டம் முதலியவற்றைக் காண தவறுகிறோம். அதனால் தான் துள்ளலும் வெளிப்படையும் நிரம்பிய 2 இந்திய கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ் சிங் மற்றும் ஜகீர் கானை விக்ரம் சதயே புனே D 3131 மாநாட்டில் பேட்டிக் கண்டது அறிவுக்கண்ணைத் திறந்தது போல் அமைந்தது. யுவியின் நாகரிகப் பற்று மற்றும் ஆடை வடிவமைக்கும் பாணி வலியுறுத்தப்பட்டாலும், ஜகீர் கானின் தொழில்திறன் அவருக்குப் பல உணவகங்களிலும் ப்ரோஸ்போர்ட்ஸ் மையங்கள் துவக்கவும் உதவியுள்ளது. அத்துடன் ஜாக் (தன் சகத்தோழர்களால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்) யுவியைக் கழுத்துவலியிலிருந்தும் பல காயங்கள் / வலிகளிலிருந்து மீட்டு, 2011 உலகக் கோப்பைக்காக விளையாட அவரைக் கட்டாயப் படுத்தியது ஆகியவற்றின் மூலம் அவர்கள் இருவரின் ஆழ்ந்த நட்பை நம்மால் உணர முடிகிறது. பங்களாதேஷுடன் விளையாடும் போது தன் மணிக்கட்டு காயப்பட்டதை யுவராஜ் நினைவுக் கூர்ந்தார். அதற்கும் முன் 4–5 எலும்பு முறிவுகள் ஏற்பட்டு கழுத்திலும் உடலிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஜாக்கிடம் உடல் பிரச்சினைகள் பற்றி யோசனை கேட்டபோது, எதாவது மருத்துவரையோ மருந்தையோ பரிந்துரைப்பார் என எதிர்ப்பார்த்துள்ளார். ஆனால் அவர் *து வர்ல்ட் கப் ஜிதாயேகா* (இந்தியாவிற்காக நீ உலகக் கோப்பையில் வெற்றி பெறுவாய்) என்றார். உலகக் கோப்பைக்கு இன்னும் ஒரு வருடம்தான் உள்ளது என்றபோது நானும் அதைத்தான் கூறுகிறேன் என்று கூறியுள்ளார்.

நண்பனின் அறிவுரை வித்தியாசமானதென்றாலும் யுவராஜ் விளையாட முடிவெடுத்தார். உலகக்கோப்பையும் தொடங்கியது. வலியாலும் அழுத்தத்தாலும் பல இரவுகளில் அவர் தூங்கவில்லை. தான் திரும்பிச் செல்வதாக ஜாக்கிடம் கூறும்போது மீண்டும் விளையாடுமாறு கூறினார். உலகக் கோப்பையில் முதல் 50 ரன்களை எடுத்து, அடுத்த 3 ஐம்பதுகள் பிறகு ஒரு 100 மற்றும் 50 ரன்களையும் காலிறுதியில் பெற்றார்.

ஆனால் அவர் புற்றுநோயுடன் போராடி இந்தியக் கிரிக்கெட்டுக்கு திரும்பியது மிகத் தீவிரமானது. என்னால் பிழைக்க முடியுமா என்று அவரை யோசிக்க வைத்தது. இப்போரைக் கடந்த பிறகு மற்ற காயங்கள் அனைத்தும் க்ரோசின் சாப்பிட்டு சரி செய்து விடலாம் போல் இருக்கிறது என்று அவர் கூறும் போது பலத்த கைத்தட்டல்களைப் பெற்றார்.

விளையாட்டு உடற்பயிற்சியாளரிடம் கலந்துரையாடியும் சொந்த அனுபவத்திலும் ஜாக், இது போன்ற அனைத்து கட்டங்களிலும் விரைவாக எதிர்கொள்பவர் எளிதாக குணமடைவர் என்றுணர்ந்தார். 2008–09 தோற்பட்டை அறுவை சிகிச்சைக்குப் பிறகு தன் பணி முடிந்ததாகவே கருதினார். ஏனெனில் பந்து வீசும் போது 80 சதவீத முயற்சி தோள்பட்டையில் தான் இருக்கும். இது அவரை எதிர்மறையாக சிந்திக்க வைத்தது. அவர் தோள்பட்டையில் கை வைத்து ஆறுதல்களையும் நேர்மறை அதிர்வுகளையும் ஏற்படுத்தி அவருக்குப் பலன் தந்தது.

இவர்கள் நாட்டின் பிம்பங்கள்தான். அளவற்ற தைரியத்துடன் வலி, நோய், மரணத்தை எதிர் கொண்ட பலரை நம் சொந்த வாழ்விலும் நாம் சந்தித்திருக்கலாம். அவர்கள் கதாநாயகர்களாக வாழ்கிறார்கள். நாம் பாலினத்தையோ, கடவுள் அருள் பெற்றதாகவோ பேசி னால், அடுத்து நான் இந்திய மகளிர் கிரிக்கெட் குழுவின் காப்டன் மிதாலி ராஜைக் குறிப்பிடுவேன். செய்தியாளர், ''உங்களுக்குப் பிடித்த ஆண் கிரிக்கெட் வீரர் யார்?'' எனக் கேட்டபோது, ''நீங்கள் இதே கேள்வியை உங்களுக்குப் பிடித்த மகளிர் கிரிக்கெட் வீரர் யார்'' என ஆண் கிரிக்கெட் வீரரிடம் கேட்பீர்களா?'' என்று பதில் கூறினார். அது உணர்ச்சி பூர்வமாக இருந்தது.



ரஷிதா பகத்

RI தலைவர்
செய்தி



# ரோட்டரியின் ஆரம்ப காலம் நினைவு கூர்வோம்

அன்பார்ந்த சக ரோட்டரியினர்களே,

நூற்றிபதிமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மாதத்தில் நான்கு உறுப்பினருடன் ரோட்டரியின் முதல் சங்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டக் குறிப்புகளும் இல்லை, சேவை குறித்து யாரும் பேச வும் இல்லை. சங்கம் அடுத்த சில ஆண்டுகள் வரை சமூகத்தின் தேவைகள் குறித்து கவனம் செலுத்தத் தொடங்கவில்லை.

அந்தக் கூட்டம் உணவகத்திலோ, விடுதியிலோ நடைபெறவில்லை. மாறாக உறுப்பினரின் அலுவலகத்தில் நடந்தது. இன்று நாமறிந்த நிகழ்ச்சி நிரல், அறிவிப்பு, குழு அறிக்கை, பேச்சாளர்கள் அல்லது அடையாளப்பெயர்கள் எதுவும் அன்று இல்லை. இக்காலத்தில் நடைபெறும் பயனுள்ள தரமான கூட்டங்கள் போலல்லாமல் அந்தக் கூட்டங்கள் படுதோல்வி அடைந்திருக்கும். இது வரை நடைபெற்ற ரோட்டரி கூட்டங்களில் அதிக விளைவைத் தந்த கூட்டமும் அதுதான்.

1905ம் ஆண்டு பால் ஹாரிஸ் எதற்காக முயன்றாரோ ரோட்டரியனராகிய நம்மில் பலர் அதற்காகவே முயற்சி செய்கிறோம்: நட்பு, தொடர்பு, வீட்டுணர்வு. ஆனால் இன்று ரோட்டரி அக்கால ரோட்டரி உறுப்பினர்களால் வழங்காததை விட பல மடங்கு வழங்கியுள்ளது. இன்று 1.2 மில்லியன் உறுப்பினர்களுடன் வலிமையாக, சகக் குழுவினரோடு மட்டுமில்லாமல், நம் சமூகத்தைத் தாண்டிய பல அமைப்புகளிலும், உலகம் முழுவதிலும் நம் வீடு போலவே உணர்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன் அன்றைய பிப்ரவரி மாதத்தில் பால் ஹாரிஸ் கனவிலும் நினைத்துப் பார்க்காத வகையில் இன்று ரோட்டரி நம்மை இணை த்துள்ளது. உலகில் எங்கு நாம் சென்றாலும் அங்குள்ள ரோட்டரி நம்மை நம் வீட்டில் உள்ளதை போலவே உணர வைப்பதோடு மட்டுமல்லாமல் வித்தியாசத்தையும் ஏற்படுத்தும்.

முதல் கூட்டத்திலிருந்து இந்த நூற்றிபதிமூன்று ஆண்டுகளில், தொடக்க கால உறுப்பினர்கள் நினைத்ததை விட ரோட்டரி பன்முகத் தன்மையுடன் பெருமளவில் வளர்ந்துள்ளது.

இப்போது ஆண், பெண் என்று இரு பாலரும் உள்ள, பிற நாடு, மதம் ஆகியவற்றைச் சார்ந்த சேவையை நோக்கமாகவும், குறிக்கோளை பிரதிபலித்தும், சுய சேவை நிறைந்தும் உள்ள நிறுவனமாக முன்னேறிவிட்டோம். போலியோவை ஒழித்து உலகை மாற்றக் கூடிய நிறுவனமாக வளர்ந்து விட்டோம்.

ரோட்டரியை எதை நோக்கி வழிநடத்துவது என நம்மில் யாருக்கும் தெரியாது. அது நாம் அனைவரும் தொடர்ந்து பால் ஹாரிஸ் மற்றும் அவர் நண்பர்களால் எழுப்பப்பட்ட வலிமையான அஸ்திவாரத்தைக் கட்டுவதாகும். சேவையுடனான பந்தங்களை உருவாக்குவதும் வலிமை படுத்துவதும் மற்றும் ரோட்டரி மூலம் மாற்றத்தை உருவாக்குவோம்.

இயான் HS ரைஸ்லி
தலைவர், பன்னாட்டு ரோட்டரி

RI இயக்குனர்
செய்தி



# அமைதியை முன்னிறுத்தி மோதலைத் தவிர்ப்போம்

அன்பான ரோட்டரியினர்களே,

ரோட்டரி தொடங்கப்பட்ட பிப்ரவரி மாதம் நமக்கு முக்கியமானதாகும். இம்மாதத்தை அமைதி மற்றும் மோதல் தடுப்பு மாதமாக நாம் கொண்டாடி வருகிறோம். நண்பர்களே, முதலில் அமைதி என்றால் என்ன என்பதை நமக்குள் கேட்போம். மக்கள் தங்கள் மோதல்களை வன்முறை இல்லாமல் ஒன்று சேர்ந்து, வாழ்வின் தரத்தை உயர்த்துவது அமைதி. அனைவரும் நேர்மையான சமமான அடிப்படை உரிமைகளான உணவு, தூய நீர், வீடு, கல்வி, ஆரோக்யம் மற்றும் நிலையான வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றைப் பெறுவது அமைதி. அனைவருக்கும் இனம், நிறம், சாதி, சமயம், பால் போன்ற அடையாளத்தால் பாதிக்கப்படாமல் சமமாகப் பணிபுரியும் வாய்ப்பு ஏற்படுவது அமைதி.

பொதுவாக எதிர்மறையான பதிலுடன் மோதல் தொடர்புடையது. மோதல் ஏற்கனவே உள்ள சிக்கல்களை மேலும் அதிகரிக்கும் என்பதை நாம் உணரவேண்டும். 1982ல் முதல் முறையாக, உலகப் புரிதல் மற்றும் அமைதிக் குழு, புரிதல் மற்றும் அமைதியை நிலைநாட்டும் வழிகளை விவாதித்தது. அமைதிக்கான திட்டங்களுக்கு முன்பே ரோட்டரி தென்னமெரிக்காவில் நல்லெண்ணத்தை முன்னிறுத்தி சேவை செய்தது. சான்றாக பெரு மற்றும் சிலியில் பசிபிக் போருக்குப் பிறகு, ஏறக்குறைய 50 ஆண்டுகள் மோசமான நிலை இருந்தது. வர்த்தகம், தூது உள்ளிட்ட எந்தத் தொடர்பும் இல்லாமல் இரு நாடுகளும் இருந்தன. சிலி ரோட்டரியினர் கிறிஸ்மஸ் வாழ்த்தை பெருவில் உள்ள ரோட்டரியினருக்கு அனுப்பினர். பதிலுக்கு அவர்களும் புத்தாண்டு வாழ்த்து அனுப்பினர். இந்த எளிய செயலினால் இரு நாட்டிலும் நல்லுறவிற்கான கதவு திறக்கப்பட்டது.

க்ரான் சாகோ போரில், லா பாஸ், பொலிவியா மற்றும் அஸன்சியன், பராகுவா ரோட்டரி சங்கங்கள், அந்தந்த நாட்டுப் போர்க்கைதிகளை அர்ஜெண்டினா ரொட்டேரியனர் சிலருடன் சந்தித்தனர். செஞ்சிலுவை சங்கம் இதைப் பாராட்டி இந்த நாடுகளில் அமைதி ஏற்பட ரோட்டரி அமைதிக் குழு செய்யும் முயற்சிகளுக்கு உதவியது. தென்னமெரிக்க ரோட்டரியினர் போர்காலத்தில், ரோட்டரி அடிக்கடி செய்யும் இம்முயற்சி விரோதம் கொண்ட நாடுகளில் பயணிக்க, பாதுகாப்பான பாஸ்போர்ட் போல் உதவுவதாகக் கருத்து கூறினர்.

வியக்கத்தக்க பலவற்றை சேவைத் திட்டங்கள், அமைதிக் கூட்டுறவு மற்றும் உதவித்தொகை போன்ற பல வழிகளில் ரோட்டரி நிகழ்த்தியுள்ளது. எங்கள் உறுப்பினர்கள், ஏழ்மை, சமமின்மை, மன அழுத்தம், கல்வியின்மை சமமற்ற வள விநியோகம் உள்ளிட்ட மோதலுக்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து அதை அகற்ற செயல்படுகின்றனர்.

6ம் நூற்றாண்டு சீன தத்துவவாதி லாஉ ட்ஜுவின் வார்த்தைகளானசு 'இதயத்தில் அமைதி நிச்சயம் இருக்க வேண்டும்' என்பதை ரோட்டரியினர் பின்பற்ற வேண்டும். தன்னலமற்ற பணி மட்டுமே இதயத்திற்கு அமைதியை தரும். தேவைப்படுபவருக்கு உதவும் பண்பையும், நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் நலனுக்கான பணியையும் அது தரும்.

அமைதியை நிலைநாட்ட உழைத்து ரோட்டரியை உலகிற்குக் காட்டுவோம்: *மாற்றத்தை ஏற்படுத்துவோம்.*

C பாஸ்கர்
இயக்குநர், பன்னாட்டு ரோட்டரி



# உலக அமைதிக்காக பணியாற்றுவோம்

ரோட்டரியினர், ரோட்டரி தொடங்கப்பட்ட 113வது ஆண்டு தினத்தில், பிப்ரவரி 23ஆம் தேதி உலக அமைதி மற்றும் புரிந்துணர்வு தினமாகவும் கொண்டாடுவர்.

தொடக்க காலம் முதல் நமது நிறுவனம் அமைதியை மையப்படுத்தி வருகிறது. நாம் நமது நான்காம் நோக்கத்தை ஸ்காட்லாண்டில் உள்ள எடின்பர்க் ரோட்டரியில், 1921ம் ஆண்டு ஏற்படுத்தினோம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் யுனெஸ்கோ அமைவதற்கான விதைகள் விதைக்கப்பட்டபோது நாங்கள் லண்டனில் இருந்தோம். 1940ல் ஹவானாவில், 'விடுதலை, நீதி, உண்மை, சத்தியத்தின் புனிதம் மற்றும் மனித உரிமைகளின் மதிப்பு' ஆகிய தீர்மானங்களை கொண்டு வந்தோம். அதுவே ஐக்கிய நாடு களின் கட்டமைப்பாக அமைந்து 1948ம் ஆண்டு உலகளாவிய அறிவிப்பாக அமைந்தது.

ஐக்கிய நாடுகள் உருவாக்கத்தில் நமக்கும் ஒரு முக்கிய பங்குண்டு. 1945ல் சான் ஃப்ரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாட்டிற்கான பட்டயம் எழுதும்போது சுமார் 50 ரோட்டரியினர் பிரதிநிதிகளாக, நிபுணர்களாக, ஆலோசனையாளராகப் பணியாற்றினர்.

சுமார் 73 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று ரோட்டரியினர் ஐக்கிய நாடுகளின் அரசு சாரா நிறுவனம் எதிலும் உயர்ந்த ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். ஐக்கிய நாடு களின் நிறுவனங்களில் எண்ணற்ற ரோட்டரியின் அமைதிக்கான உறுப்பினர்கள் உள்ளனர். ஐக்கிய நாடுகளில் ரோட்டரியின் பிரதிநிதிகள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் அமைதிக்கான நமது பங்களிப்பைக் கருதி ரோட்டரி தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

இன்று ஒரு புதிய கூட்டணியை ஆஸ்திரேலியாவில் தொழில்நுட்ப தொழிலதிபர் ஸ்டீவ் கிலேலியா அவர்களால் நிறுவப்பட்ட பொருளாதார மற்றும் அமைதி நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ளோம். இந்த நிறுவனம் எட்டுத் தூண்களின் அடிப்படையில் நேர்மறை அமைதியினை வலியுறுத்துகிறது. அந்த எட்டுத் தூண்களாவன: நன்முறை அரசாட்சி, வலிமையான வணிகச் சூழல், நியாயமான வளங்கள் பங்கீடு, மற்றவர் உரிமையை ஏற்றுக் கொள்ளல், அயலாருடன் நல்லுறவு, தடையில்லாத் தகவல், மனித மூலதனத்தில் உயர்நிலை மற்றும் மிகக் குறைந்த ஊழல்.

இப்போது முதல் ஜூன் மாதம் வரை, உலகெங்கும் ஆறு நகரங்களில் ரோட்டரி தலைவர் இயன் ரைஸ்லி அவர்கள் தலைமை உரை ஆற்றும் அமைதிக்கான மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பு நமக்கு உள்ளது. rotary.org/presidential-conferences என்ற இணையத்தில் அது குறித்து அறியலாம். அமைதியை நிலைநாட்டும் அந்த எட்டுத் தூண்கள் குறித்து ஆராயும் நமது செயலில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

அமைதியை விரும்பும் முன்னணி அறிஞர்கள், பயிற்றுநர்கள், ரோட்டரியின் அமைதி உறுப்பினர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் அனைவரும், அமைதி மற்றும் சண்டைத் தடுப்பும் தீர்மானமும் குறித்த தொடருரை நிகழ்த்த சிகாகோ பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளோம். வரும் செப்டம்பரில் முதல் உரையை bit.ly/2j9cSUh என்ற இணையத்தில் பாருங்கள்.

நம் சகபங்காளிகளுடன் சேர்ந்து நம்மை உலகளாவிய சிந்தனையாளராக உயர்த்தியும் புரிதல், நல்லெண்ணம் மற்றும் உலக அமைதிக்காகவும் செயல்படுவோம்.

இப்பயணத்தில் நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்.



பால் ஏ நெட்ஸெல்
ரோட்டரி அறக்கட்டளைத் தலைமை

உங்கள் சங்க அமைதி பணியை என்னுடன் பகிர அழைக்கிறேன்.
Paul.netzel@rotary.org.

# Häcker
kitchen. germanMade.




| DELHI | MUMBAI | BENGALURU | KOCHI | COIMBATORE | CHENNAI | HYDERABAD | AHMEDABAD | LUDHIANA | JAIPUR | INDORE | THRISSUR | MANGALURU |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9313134488 | 9322987229 | 9740999350 | 9895058285 | 9500210555 | 9442081111 | 9700058285 | 9879538977 | 9815048222 | 9414058718 | 9425803599 | 7025991000 | 7899119955 |

**E-mail: info@hacker-kitchens.com**
**Website: www.haecker-india.com / www.haecker-kuechen.com**

# இந்திய கிரிகெட்டின் நாகரிக குரு மற்றும் ஐடியாவாலே பாபா

*ரஷிதா பகத்*

புனேவில் '*அத்யாய் 18*' என்ற D 3131ன் மாவட்ட மாநாட்டில் உணர்ச்சிப்பூர்வமான மற்றும் மகிழ்வான தருணமாக விக்ரம் சதயே எடுத்த இந்தியா கிரிகெட்டின் 2 பிரபல கிரிகெட் வீரர்கள் யுவராஜ் சிங் மற்றும் ஜாகிர் கானின் பேட்டி அமைந்தது. நல்ல நண்பர்கள் என்பதைத் தாண்டி இருவரும் தாங்கள் சந்தித்த உடல் ரீதியான சவால்களைப் பகிர்ந்தனர். முன்பு புற்றுநோயுடன் கடுமையாகப் போராடி விட்டுக்கொடுக்காமல் அதை வென்ற சிங், கானை விட அதிக சவால்களைச் சந்தித்துள்ளார்.

சதயே அவர்களால் நேர்த்தியாக சென்ற உரையாடல் கிரிக்கெட் வீரர்கள் குறித்த பல உண்மைகளையும் சக தோழர்களுடன் ஏற்பட்ட சுவாரஸ்யமானவற்றையும் வெளிப்படுத்தி மகிழ்வித்தது.

கான் (அல்லது ஜாக்) ஐ அவரது நண்பர்கள் தீவிர நாகரிக பற்றுடையவர் என்பார்கள். ''ஆடை அணிவதில் நிச்சயம்



என்னிடம் ஆலோச னைக் கேட்பார். *ஸ்டார் ஸ்போர்ட்ஸ்* வர்ணணையில் இப்பொழுது பொருத்தமான ஆடை அணிந்து வருகிறார். அதற்கு முன் அவர் என்னிடம் வந்து, 'இந்த ஆடை எப்படி இருக்கும்?' எனக் கேட்பார். நானும் ''ஜாக் இது வேண்டாமே'' என்பேன். எங்காவது வெளியே செல்லும் போது என் சட்டையையோ பெல்டையோ அணிந்து கொள்வார்,'' என்று யுவராஜ் கூறினார்.

உடனே அதை ஒப்புக்கொண்ட ஜகீர், ''நான் எப்போதாவதுதான் பெல்ட் வாங்குவேன். யுவி பல சிறந்த பெல்டுகளை வைத் திருப்பதால் கிட்டத்தட்ட என்னிடம் இருக்கும் எல்லா பெல்டுமே யுவியிடமிருந்து வாங்கியதாகதான் இருக்கும்,'' என்றார்.

## யுவி சிறந்த ஃபீல்டர்

அடுத்து யுவராஜிடம் ஃபீல்டிங் பற்றி சதயே, நடிகர் மிதுன் சக்கரவர்த்தி போல் டைவ் பண்ண எவ்வாறு கற்றுக்கொண் டீர்கள் எனக் கேட்ட போது யுவி, தான் ஜோன்டி ரோட்ஸை தனது 15–16 வயது முதல் கவனித்து வந்ததைத் தெரிவித்தார். ''அவர் எளிதாக டைவ் செய்வதைப் பார்த்து அதைப் போல் நானும் செய்ய ஆசைப்பட்டேன்.'' ஆனால் 16 வயதில், அவரது முதல் மேட்ச் சில தவறான ஃபீல்டிங்கால் சோபிக்கவில்லை. ''அதனால் நாளிதழ்கள் என்னை இந்தியாவின் நுழைவாயில், (Gateway of India) என்று அழைத்தனர். எனக்காக எதையும் செய்யும் என் தந்தை அதைப் படித்து தீவிரமாக

**நாளிதழ்கள் என்னை இந்தியாவின் நுழைவாயில், (Gateway of India) என்று அழைத்தனர். என் தந்தை அதைப் படித்து தீவிரமாக எனக்கு பயிற்சியளித்தார்.**

**யுவ்ராஜ் சிங்**



எனக்கு பயிற்சியளித்தார். குறைந்தது 50–100 பந்துகளையாவது பிடிக்க கற்றுக் கொண்டேன்.'' என்றார்.

மாறாக ஜாக் பாதுகாப்பான பந்து பிடிப்பவராகக் கருதப்படுகிறார். யுவி நியுசிலாந்தில் நடந்த போட்டியில் வலுவான காற்று வீசியதை குறிப்பிட்டார். ''ஜாக் பந்து வீசினார், பேட்ஸ்மேன் அடித்து பந்து மேலே சென்றது. அதை பிடிக்க, அவர் என்னுடையது என்றார். ஆனால் பந்து என்னிடம் வந்தது. உடனே 'உன்னுடையது' எனக் கூறினார். நான் தாவி பந்தைத் தொட்டு அதைக் கீழே விட்டு விட்டேன்,'' என்றார். மேலும் சிரிப்பிற்கு நடுவே ஜாக், ''இது மிகைப்படுத்தப்படாதது. வெலிங்டன் காற்று வலிமையாக இருக்கும் பந்து காற்றில் சுழலும். இது விளக்கக் கடினமானது, என்று கூறினார்.

## மன விளையாட்டு

இந்த நிகழ்வின் சிறந்த பகுதியாக மன விளையாட்டு அமைந்தது: எப்படி பந்து வீச்சாளர் நுட்பமாக கையாண்டு பேட்ஸ்மேனை தன் விருப்பத்திற்கேற்ப விளையாட வைக்கிறார் என்பது பற்றியது. சச்சின் டெண்டுல்கர் ஜாகீர் கானிடம் சிறந்த பந்து வீச்சாளர் பந்தைப் பேச வைத்து பேட்ஸ்மேனைத் தோற்கடிப்பார்,'' எனக் கூறியதைச் சுட்டிக் காட்டினார். சதயே இதை நீங்கள் எவ்வாறு செய்தீர்கள்? எனக் கேட்டதற்கு, கான், ''பேட்ஸ்மேனுக்கு எது கடினம் என யூகிப்பதுதான் மிகக் கடினம். சில நேரத்தில் சிறப்பாக பந்து வீசினாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்காது. எல்லோருக்கும் தெரிந்த பேட்ஸ்மேனின் பலவீனத்தை வைத்து விளையாடினாலும் பலன் கிடைக்க பயிற்சி வேண்டும்.'' என்றார்.

அவரது பயிற்சி, வீடியோக்களைப் பார்த்து பேட்ஸ்மேனின் காலசைவை ஆராய்வது முதல் தொடங்கும். அவரது கால்கள் நன்றாக அசைந்தால் அவர் அனைத்து விஷயங்களையும் கருத்தில் கொள்ளவில்லை என்று உணர்த்தும். அதற்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும். விக்கெட் எடுப்பது குறித்து நினைப்பதை வெளிக் காட்டாமல் இருக்க வேண்டும்.

நம்முடைய செயல்களை அதற்கேற்ற படி திட்டமிட வேண்டும். ஆனால் எந்த பந்து வீச்சாளரும் ஏற்கனவே பந்து சென்ற திசையை மீண்டும் குறி வைக்க மாட்டார்கள். ''எனவே நான் எல்லா விதத்திலும் விளையாடி நல்ல பலனை உறுதி செய்வேன்,'' என்றார்.

மாத்யூ ஹேடெனுடனான மன விளையாட்டு குறித்து கேட்கும் போது,



ஜாகிர் கான்

# ஐடியாவாலே பாபா

முழுமையாக குணமடைந்த பிறகு 2011 உலகக் கோப்பை குறித்த வினாவிற்கு யுவராஜ் அதற்கு முந்தைய ஆண்டில் பங்களாதேஷுடன் விளையாடும் போது தன் மணிக்கட்டு காயப்பட்டதை நினைவுக் கூர்ந்தார். அதற்கும் முன் 4-5 எலும்பு முறிவுகள் ஏற்பட்டு கழுத்திலும் உடலிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஜாகிடம் உடல் பிரச்சினைகள் பற்றி பேசி யோசனை கேட்டேன். நானும் ஏதாவது மருத்துவரையோ மருந்தையோ பரிந்துரைப்பார் என எதிர்ப்பார்த்தேன். ஆனால் அவர் இந்தியாவிற்காக நீ உலகக் கோப்பையில் வெற்றி பெறுவாய் என்றார். நான் அவரை அமைதியாக நோக்கி இது நல்ல நண்பன் தரும் யோசனை கிடையாது என்று நினைத்தேன்.

ஆனால் உலகக் கோப்பை ஆரம்பித்தது. யுவியின் உடல்நிலை சரியில்லாமல் போனது. வலியாலும் வருத்தத்தாலும் பல இரவுகள் தூங்காமல் இருந்தார். அவரது கழுத்து மிகவும் வலியைத் தந்தது. ஜாகிடம், பந்து வீச்சாளரை என்னால் பார்க்கக் கூட முடியாது; கேரி கிர்ஸ்டெனிடம் என்னால் விளையாட முடியாது எனக் கூறப்போகிறேன் என்றேன். ஆனால் அவரோ இப்போட்டியை விளையாடச் சொன்னார். என் கழுத்து வலிப்பதால் என்னால் முடியாது என்றேன். என் தலையில் பந்து விழும் அபாயம் உள்ளதையும் கூறினேன். அவரோ பிடிவாதமாக இல்லை, நீ மாட்சில் விளையாடு என்றார்.

யுவராஜ்: தேசிய கீதம் இசைக்கும் போது நிலை மோசமாகியது. உடல்பயிற்சி நிபுணரிடம் ஓடிச்சென்று சிகிச்சை பெற்று விளையாடினேன். பேட் செய்யும் போது கிரேம் ஸ்வான் பந்து வீசினார். அப்போது சிறிதளவு ஸ்பின்னரை விளையாட முடிந்தது. என் உடல் இதம் பெற்று என் கழுத்தும் கொஞ்சம் தேறியது. உலகக் கோப்பையில் முதல் 50 ரன்களை எடுத்து அடுத்த 3 ஐம்பதுகள், 100, 50 ரன்களை காலிறுதியில் பெற்றேன். எனவே ஜக்கின் யோசனைக்கு நன்றி.

சதயே: இந்நிகழ்விற்குப் பிறகு ஏதாவது ஜோதிடக் கணிப்பு தேவைப்பட்டால் நான்தான் ஜாகீர்கானின் மேனேஜராக இருப்பேன்.

யுவராஜ்: ஆம் அவரை ஐடியாவாலே பாபா என்றுதான் இந்தியக் குழு அழைக்கும். ஏனெனில் அந்த நிகழ்வுகளுக்குப் பின் என் வாழ்வு முழுவதும் அவர் கூறியதை நான் கவனிக்கின்றேன்.

கான், ''மக்கள் Sledging (விளையாட்டின் மீதான கவனத்தை திசைத்திருப்ப போட்டியாளர்கள் கையாளும் வார்த்தைகள்) பற்றி பேசுவார்கள், ஆனால் அது மட்டுமே செய்ய வேண்டிய காரியமில்லை. பேட்ஸ்மேனின் மனதைப் புரிந்து கொண்டு விளையாட வேண்டும். பன்னாட்டு கிரிகெட்டில் மாபெரும் அழுத்தமும் பொறுப்பும் உங்கள் முடிவைத் தடுக்கக் கூடும். எனவே நீங்கள் பேட்ஸ்மேனைத் தவறு செய்யும் அழுத்தத்திற்கு உள்ளாக்க வேண்டும். பல முறை பேட்ஸ்மேன்கள் தங்கள் தவறுகளால்தான் **'Out'** ஆகிறார்கள்.

பேட்ஸ்மேனை தவறு செய்ய வைக்கும் ஒரு வழி, பந்தை சரியான இடத்தில் வீசி பேட்ஸ்மேனின் பலவீனத்தைத் தொட வேண்டும். அவரிடம் எதையாவது பேசலாம். ''உதாரணமாக, கிரஹாம் ஸ்மித் எப்போதும் என் பந்தை அந்தந்த நேரத் திற்கேற்றபடி அணுகுபவர். ஏனெனில் நான் பலமுறை அவரைத் தோற்கடித் திருக்கிறேன். ஒவ்வொரு முறை விளையாடும்போதும் ஏற்கனவே அவர் என்னிடம் தோற்றதை நினை வூட்டுவேன். உங்கள் பலவீனம் எனக்குத் தெரியும், என்னைப் பார்க்க நீங்கள் விரும்பவில்லை என்று கூறுவேன். இதை நீங்கள் கூறினால் அவர் எதிர்மறை சிந்தனை பெற்று தவறு செய்வார்.''

மாத்யூ ஹேடெனை பொறுத்தவரை 2008 ஆஸ்திரேலியா தொடரில் முதல் போட்டி பெங்களூரிலும் இரண்டாவது போட்டி மொஹலியிலும் நடந்தது. கான் 4 இன்னிங்ஸில் 3 முறை ஹேடெனைத் தோற்கடித்தார். ''எனவே ஒரு திட்டமிட்டேன். ஹேடென் விளையாடும் விதத்தையும் தன்மையும் தெரிந்து கொண்டேன். அவர் எப்போதும் என்னை எதிர்த்து தாக்குவது போல் விளையாடுவார் என எனக்குத் தெரியும்.'' அடுத்த போட்டி பேட்ஸ்மேனின் சொர்கமான டில்லியில் நடந்த போது எப்போதாவது பந்து வீச்சாளருக்குக் கிடைக்கும் விக்கெட் கிடைத்தது. ''மொஹாலி போட்டி முடிந்ததும் அவர் என்னைத் தாக்குவதாக சைகை செய்தார். நானும் அவரது திறமை எனக்கு எதிராக இருப்பதால் அவரை வெல்வது கடினம் என்றே நினைத்தேன்.''

டில்லி போட்டிக்கு முன்பு, ஒரு நிகழ்வு இருந்தது. அதில் கானுக்குப் பிடித்த பேட்ஸ்மேன் பெயரைச் சொல்லும் வாய்ப்பு அமைந்தது. அதற்கு அவர் ஹேடெனைக் கூறினார். ஏனெனில் அவருக்கு பந்து வீசுவது மிகவும் சுலபம் என்று கூறினார். அடுத்த நாள் அவர் தான் முதல் பேட்ஸ்மேனாக வந்து 'நான் ஜாகீர் கானைத் தவிர எல்லா இந்திய பந்து வீச்சாளரையும் வென்று விடுவேன்,' என்றார். அவர் என் பந்தை விளையாடாமல் விட்டு விட்டார். அவர் 'நீ ஒரு எனக்குப் பெரிய விஷயமல்ல. எளிதாக உன்னைத் தோற்கடிப்பேன்' என்பதை நிரூபிக்கவே விரும்பி இருக்கிறார். அதனால் அந்த தாக்குதல் நடக்கவில்லை.

அடுத்து யுவராஜிடம் ''நீங்கள் ஜாக்குடன் விளையாட முடியுமா என்று கேட்டபோது, காட்டில் மயில் ஆடுவதை யாரும் பார்க்க முடியாது. ஜகீர் கான் என்னை உள்நாட்டு விளையாட்டில் பலமுறை தோற்கடித்தது யாருக்கும் தெரியாது,'' என்றார்.



DG அபய் காட்கில், RIPR PRID சவாலிக் ரட்டனாவிச்சுடன்.

அவருடைய பந்து வீச்சையும் விக்கெட் எடுக்கும் போது சீரான வெற்றி குறித்தும் கேட் டபோது யுவராஜ், ''நான் பாரம்பரியமாக இல்லாமல் தனிப்பட்ட முறையில் விளையாடுவேன். ஏனெனில் கெவின் பீட்டர்சனை சிலமுறை தோற்கடித்திருக்கிறேன். நான் பந்து வீசும் முறை அவருக்குப் பிடிக்காது, நான்

அவரை நோக்கி துண்டு களை (pie) வீசுவதாகக் கூறுவார். அதனால் என்னை பை-சக்கர் (pie-chucker) என்று அழைப்பார். உண் மையில் அது எனக்குப் பிடிக்கும்,'' என்றார். ''ஆனால் பந்து வீசுவதில் நான் எப்போதும் பகுதி நேரத்தினராகக் கருதுவேன். என்னை முழுப் பந்து வீச்சாளராகக் கருதும் நாளில் நான் தோற்பேன். எனவே என் வேலை, வாய்ப்பு வரும்போது பந்து வீசுவதை ரசிப்பது,'' என்று தொடர்ந்தார்.

## ஆறு சிக்சர்கள்!

யூவியிடம் அவர் T20 உலகக்கோப்பையில் ஒரு ஓவரில் அடித்த 6 சிக்ஸர்களைப் பற்றி கேட்டதற்கு, தான் அதற்கு முன் ஒரு மாட்சில் ஒரு ஓவரில் 5 சிக்ஸர்கள் எடுத்ததுப்பற்றியும் நினைவு கூர்ந்தார். அந்த நாட்களில் இங்கிலாந்துடன் கடும் போட்டி இருந்தது. நாங்கள் அவர்களுடன் பல போட்டிகளில் விளையாடி உள்ளோம். எனக்கு முன் தோனி பேட் செய்ய சென்றார். எனக்கு கடைசி 3 ஓவர்கள் மட்டுமே இருந்தன. ஆன்டிரிவ் ஃபிலிண்டாப் 2 பந்துகளை சிறப்பாக வீசினார், நான் இரண்டையும் பௌண்டரிஸ் அடித்ததால் அவர் ஆத்திரம் அடைந்தார்.

அப்போது அவரும் ஃப்ளிண்டாப்பும் கோபமாகப் பேசினர். 'அவர் மீண்டும் இது நடக்க முடியாது என்று ஏதோ கூற, நான் என்னுடைய பேட்டை உயர்த்தி என் பேட்டால் உன்னைத் தாக்குவேன் என்று சைகை செய்தேன். உண்மையில் அது கடுமையான உரையாடல். பிறகு அம்பையர் தலையிட்டு விளையாட்டைத் தொடரச் செய்தார். நான் வெறுப்புடன்தான் விளையாடினேன். ஆனால் சில சமயம் இது நன்மை தரும். அன்றும் அது போலவே நான் எல்லாப் பந்தையும் சிக்ஸ்ராக அடிக்க உதவியது,'' என்றார்.


யுவ்ராஜ் சிங்

## ஆங்கிலத் தொல்லைகள்

யுவராஜ் சிங் முன்பு தான் பல ரன்களைப் பெற்றாலும் ஆங்கிலம் பேசப் பயப்பட்டதைக் கூறினார். 2001ல் தென்னாப்பிரிக்கா சென்ற போது நாங்கள் சி றியவர்கள் என்பதோடு மோசமாக ஆங்கிலம் பேசுவோம். எங்கள் கையுறையில் பேடிங் (padding) தேவைப்பட் டது. உடற்பயிற்சியாளர், வீருவை (வீரேந்திரசேவாக்) எந்த கையுறைக்கு பேடிங் வேண்டும் எனக் கேட்டார். அவர் 2 நிமிடம் யோசித்து இரண்டிற்கும் என்றார். வேறொரு நேரத்தில் நியுசிலாந்தில் 'வீருவும் நானும் பர்கர் சாப்பிடும்போது ஒருவர் வந்து 'நீங்கள் வீரேந்திர சேவாகா?' எனக் கேட் டதற்கு அவர் 'யப்' (yup) என்றார். அடுத்து அவர் உங்களுக்கு நியுசிலாந்த் பிடித்திருக்கிறதா என்றதற்கும் வீரு 'யப்' என்றார். இதுபோல் பல சிக்கல்களை பின்னால் சமாளித்தோம்.

## மன வலிமை

ஜாகீர் கானிடம் அவரது தோள்பட்டை காயம் குறித்து கேட்டபோது, கிரிக்கெட் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தது போலிருந்த அதை தன் மனவலிமையால் தாங்கியதாகக் கூறினார். விளையாட்டு வீரர் காயங்களைத் தாங்கிக் கொள்வது பலவற்றை சமாளிக்க உதவும் என்றார். விளையாட்டு வீரருக்கு விளையாடுவதும் களத்தில் இருப்பதும் மிக முக்கியம். அடிக்கடி நீங்கள் நான் வேறுமுறையில் விளையாடினால் எனக்கு அடிப்பட்டிருக்காது என நினைப்பீர்கள். ஆனால் காயம் ஏற்பட்டது என்ற உண்மையை ஏற்றுக் கொள்வது மிக முக்கியம்.

சில ஆண்டு களாக விளையாட்டு உடற்பயிற்சியாளரிடம் கலந்துரையாடியும் சொந்த அனுபவத்திலும் நான் பெற்ற உணர்வு, 'இது போன்ற அனைத்து கட்டங்களிலும் விரைவாக எதிர்கொள்பவர் எளிதாக குணமடைவர்'' என்பதே. 2008 – 09ல் என் முதல் தோள்பட்டைக் காயத் திற்காக அறுவை சிகிச்சை செய்யும் போது என் பணி அத்துடன் முடிந்தது என்றே நினைத்தேன். ஏனெனில் என்னுடைய 80 சதவீத பந்து வீச்சும் தோள்பட்டை மூலமே நடக்கும். அது என்னை எதிர்மறையாக சிந்திக்க வைத்தது.

ஆனால் சிகிச்சைக்குப் பிறகு கிடைத்த மறுவாழ்வு மிக முக்கியமானது. அக் கட்டத்தில் என் கைகளைத் தோள்பட்டையில் வைத்து ஆறுதல் கூறி நேர்மறை அதிர்வுகளைப் பெற்றேன். வழக்கத்தை விட வேகமாக குணமடைந்தேன். இதை விளக்கமுடியாது என்றாலும் பயன் தரும்.

புற்றுநோயை எதிர் கொண்ட மனவலிமையைப் பற்றி கேட்டபோது, யுவராஜ், ''நம்புங்கள். அது எளிதல்ல. காயத்தை விட தீவிரமானது; என்னால் பிழைக்க முடியுமா என்பது குறித்தது. வாழ்வின் இறுதி கேள்விகள் தீவிரமாக இருக்கும். இப்போரைக் கடந்த பிறகு மற்ற காயங் கள் எல்லாம் க்ரோசி ன் போட்டு சரி செய்து விடலாம் என்ற அளவிற்கு சுலபமாக இருக்கும்.



இடது புறத்திலிருந்து : PDG *சுபோத் ஜோஷி, யுவ்ராஜ் சிங்,* PDG *வினய் குல்கர்ணி, ஜாகீர் கான்,* DG *அபய் காட்கில்.*

முதல் 6 – 12 மாதங்களுக்குப் புற்றுநோய் வந்ததை ஏற்றுக் கொள்வது மிகக் கடினமாக இருந்தது. மருத்துவர்கள் எதுவும் தெரியாமல் பொய் சொல்வதாகவே நான் கூறி வந்தேன். கடினமாக பயிற்சி, நல்ல உணவு, வாழ்முறை பெற்ற ஒரு விளையாட்டு வீரர் — எனக்கு எப்படி இவ்வாறு நடக்கும்? அதுவும் எனது பணியின் உச்சத்தில் இருக்கும்போது; 4 – 5 ஆண்டுகள் என் பணிகாலத்தை புற்றுநோய்க்குத் தந்தேன். அதிலிருந்து மீண்டும் களத்திற்கு வர முயற்சி செய்தேன். 'முயற்சியை விடக்கூடாது. நிச்சயம் திரும்ப வந்து அதிகபட்ச ரன்களை எடுப்பேன்' என முடிவு செய்தேன்.

## ரோட்டரியினருக்கு ஒரு விண்ணப்பம்

வாழ்வின் பெரும் சவாலான அனுபவத்தைக் கூறிய பிறகு அவர் புற்றுநோயாளிகளுக்குத் தொண்டு செய்ய தொடங்கினார். விழிப்புணர்வை ஏற்படுத்தி, புற்றுநோயைக் கண்டறிந்ததும் ஒருவர் பணத்திற்கு எங்கு செல்வது என்றுதான் கேட்பார். எனவே அரசு சாரா நிறுவனத்தைத் தொடங்கினார். ஆனால் இந்தியாவில் நிதி பெறுவது எளிதல்ல. பல பெருநிறுவனங்கள் சொந்தமாக தொண்டுக்களத்தைக் கொண்டுள்ளன. எனவே சில வருடங்களுக்குப் பிறகு ஏதேனும் தொழில் செய்து என் நிறுவனத்தைத் தக்க வைக்க நினைத்தேன். இயல்பாக ஃபேஷன் மீது கவனம் செலுத்தினேன். ரோட்டரியினர் *www.youwecan.com,* என்ற இணையத்தில் சிலவற்றை வாங்கி சிலருக்கு உதவுங்கள். எங்கள் பொருட்கள் தரமானதாகவும் இருக்கும். உங்களுக்கும் ஒருவர் வாழ்விற்கு உதவிய திருப்தியும் கிடைக்கும்.

## தரமும் ஆடம்பரமும்

பல நிலைகளில் பூனாவில் உள்ள அமானோரா க்ளப் ஹௌசில் விசாலமான சூழலில் செழிப்பான புல்வெளியும் மின்னும் நீரும் நிறைந்த மாநாட்டில் 1,900 நபர்கள் இந்த மாநாட்டிற்கு பதிவு செய்தனர். அனுப்பம்கெர், சேத்தன் பகத், சுவாமி சுகபோதானந்தா உள்ளிட்ட முக்கிய பேச்சாளர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு இசை நடனம், நாட்டுப்புற இசை நிகழ்ச்சி மற்றும் அந்த ஆண்டில் நடைபெற்ற சேவைத் திட்டங்கள் பற்றி விவரிக்கப்பட்டன. தாய்லாந்திலிருந்து RIPR ஆக முன்னாள் RI இயக்குனர் சோவாலக் ரட்டன்விச், ஆளுநர் அபய் காட்கிலை பாராட்டி, அவர் உலகம் முழுவதும் பல மாவட்ட மாநாடுகளில் பங்கேற்றதாகவும் ஆனால் பூனேவில் நடந்த இதுவே என்னை மிகவும் கவர்ந்தது, என்று கூறினார்.

# District Wise TRF Contributions as on December 2017

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | India | | | | |
| 2981 | 23,612 | 1,090 | 0 | 0 | 24,703 | 142 | 3.3 |
| 2982 | 29,879 | 70 | 2,725 | 0 | 32,674 | 141 | 5.2 |
| 3000 | 22,379 | 6,753 | 88,541 | 0 | 117,673 | 781 | 15.4 |
| 3011 | 59,725 | 284 | 39,598 | 0 | 99,607 | 156 | 5.1 |
| 3012 | 37,722 | 6,693 | 16,590 | 3,016 | 64,021 | 210 | 6.0 |
| 3020 | 19,744 | 5,036 | 19,950 | 42,478 | 87,209 | 65 | 1.5 |
| 3030 | 203 | 22,724 | 1,050 | 0 | 23,977 | 1 | 0.0 |
| 3040 | 448 | 0 | 26,185 | 0 | 26,634 | 16 | 0.7 |
| 3053 | 4,383 | 0 | 11,550 | 0 | 15,933 | 12 | 0.4 |
| 3054 | (1,414) | 102 | 162,650 | 0 | 161,338 | 6 | 0.1 |
| 3060 | 32,776 | 640 | 206 | 18,000 | 51,622 | 333 | 8.7 |
| 3070 | 21,766 | 148 | 24,219 | 789 | 46,923 | 95 | 3.2 |
| 3080 | 87,915 | 5,155 | 10,500 | 92 | 103,662 | 148 | 4.5 |
| 3090 | 508 | 0 | 0 | 0 | 508 | 2 | 0.1 |
| 3100* | 5,975 | 0 | 0 | 0 | 5,975 | 32 | 2.0 |
| 3110 | 61,022 | 2,543 | 60,631 | 0 | 124,196 | 152 | 4.0 |
| 3120 | 70,693 | 508 | 0 | 0 | 71,201 | 83 | 2.8 |
| 3131 | 165,368 | (4,400) | 169,045 | 58,094 | 388,107 | 485 | 9.5 |
| 3132 | 26,233 | 906 | 2,625 | 0 | 29,764 | 105 | 2.4 |
| 3141 | 229,740 | 11,585 | 177,910 | 4,000 | 423,234 | 522 | 10.2 |
| 3142 | 165,263 | 2,686 | 350 | (1,000) | 167,299 | 358 | 13.3 |
| 3150 | 44,019 | 11,357 | 9,050 | 61,000 | 125,425 | 235 | 6.6 |
| 3160 | 45,110 | 1,000 | 0 | 0 | 46,110 | 94 | 4.0 |
| 3170 | 21,182 | 7,765 | 17,707 | 0 | 46,654 | 267 | 5.0 |
| 3181 | 35,635 | 481 | 0 | 78 | 36,194 | 194 | 6.4 |
| 3182 | 32,528 | 0 | 20,843 | 0 | 53,372 | 313 | 10.0 |
| 3190 | 73,130 | 300 | 36,095 | 16 | 109,540 | 61 | 1.2 |
| 3201 | 60,468 | 2,421 | 111,195 | 15 | 174,099 | 129 | 2.5 |
| 3202 | 19,141 | 1,778 | 0 | 0 | 20,919 | 55 | 1.1 |
| 3211 | 46,046 | 0 | 0 | 43,846 | 89,892 | 59 | 1.4 |
| 3212 | 184,069 | 32,365 | 0 | 1,000 | 217,433 | 236 | 6.4 |
| 3231 | 61,317 | 462 | 61,250 | 16,000 | 139,030 | 63 | 2.5 |
| 3232 | 48,955 | 11,300 | 75,750 | 500 | 136,505 | 141 | 3.8 |
| 3240 | 56,061 | 225 | 0 | 555 | 56,840 | 200 | 6.8 |
| 3250 | 38,768 | 0 | 0 | 0 | 38,768 | 102 | 2.9 |
| 3261 | 23,769 | 100 | 0 | 0 | 23,869 | 90 | 3.8 |
| 3262 | 71,932 | 100 | 0 | 0 | 72,032 | 247 | 7.5 |
| 3291 | 34,900 | 24,973 | 56,306 | 3,077 | 119,256 | 37 | 1.0 |
| **India Total** | **1,960,968** | **157,148** | **1,202,522** | **251,556** | **3,572,194** | **6,368** | **4.6** |
| 3220 **Sri Lanka** | 21,949 | 10,092 | 0 | 1,217 | 33,258 | 129 | 6.8 |
| 3271 **Pakistan** | 28,277 | 31,706 | 0 | 0 | 59,983 | 66 | 4.6 |
| 3272 **Pakistan** | 8,472 | 577 | 0 | 1,000 | 10,049 | 13 | 0.5 |
| 3281 **Bangladesh** | 283,351 | 11,216 | 167,308 | 40,225 | 502,100 | 393 | 7.0 |
| 3282 **Bangladesh** | 62,296 | 1,401 | 500 | 1,000 | 65,198 | 297 | 7.9 |
| 3292 **Nepal** | 110,096 | 18,703 | 132,523 | 0 | 261,322 | 326 | 7.4 |
| **South Asia Total** | **2,475,410** | **230,843** | **1,502,853** | **294,998** | **4,504,104** | **7,592** | **4.8** |
| **World Total** | **57,284,679** | **19,738,940** | **7,646,328** | **11,855,762** | **96,525,709** | | |

** Non-districted*

*Source: RI South Asia Office*




ரஷிதா பகத்

# பன்னாட்டு ரோட்டரியின் ஆரோக்கியமான நிதி

ரஷிதா பகத்




கோலாலம்பூர் மண்டல மாநாட்டில் பன்னாட்டு ரோட்டரியின் முன்னாள் இயக்குனர் PT பிரபாகர் ரோட்டரியின் பன்னாட்டு வருவாய் குறித்து ஆராய்ந்து RI நிதிகள் ஆரோக்கியமாக இருப்பதாகவும், 2017 இறுதிக்குள் $29 மில்லியன் உபரியாகவே இருக்கும் எனவும் தெரிவித்தார்.

உறுப்பினர் சந்தாக்கள் தான் ரோட்டரியின் முதல் மற்றும் முக்கிய வருவாய், 2018 இல் உறுப்பினர் சந்தா ரோட்டரியின் மொத்த வருவாயில் 70 சதவீதத்தை அடையும் என்றார்.

முதலீட்டினால் நிகர வருமானம் எளிதில் செலவாகக்கூடியதால், ரோட்டரி மிகுந்த கவனத்துடனும் மிகச் சிறியத் தொகையையும் ஏற்கின்றது. கூடுதல் சங்கங்கள் மற்றும் நிகர வருமானங்கள், உறுப்பினர் சேவை மற்றும் திட்டங்களுக்காகவும், அதை செயல்படுத்தவும், இயக்குனர்கள் குழு செலவுத் தொகைக்காகவும் செலவழிக்கப்படுகிறது. இந்த நிதி, ஆண்டு நிதி அறிக்கைத் தயாரித்தல் போன்ற தேவைகளுக்கும் செலவழிக்கப்படுகிறது.

பன்னாட்டு மாநாடு, *தி ரொட்டேரியன்* ரோட்டரி பத்திரிகையின் சந்தா, இவான்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்தில் மற்ற அலுவலகங்களின் வாடகை வருமானம் போன்றவை நிதி பெற மூன்றாவது மூலமாகும்.

ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தைப் பராமரிப்பதும் செலவுகளை ரசீதுடன் ஏறக்குறைய ஒத்துப்போவதை உறுதிப்படுத்துதல் முதலிய பொறுப்புகள் இயக்குனர்கள் குழுவையே சேரும். எப்படி இருந்தாலும் ரோட்டரியின் விதிகளில் ஒன்று, மாவட்ட உறுப்பினர் திட்டத் திற்கான கட்டணம், போலியோ தொடர்பானவை மற்றும் ரோட்டரி அறக்கட்டளைப் பங்களிப்பு ஆகியவற்றிற்கு செலவிட அனுமதியளிக்கிறது. இந்த இருப்பு 'பொது உபரி நிதி' என்றழைக்கப்படுகிறது.

மேலும், மற்றொரு விதி, ரோட்டரி முந்தைய மூன்றாண்டுகளின் அதிகபட்ச செலவுத்தொகையில் 85 சதவீதத்தை இருப்பு வைத்திருக்க வேண்டும் எனவும் கூறுகிறது. RI குழுவின் இருப்புத்தொகையை இலக்காக அமைத்து, முந்தைய மாநாடுகளில் வருமானமீட்டி, இலக்கைத் தடை செய்யாமல் அதை எதிர்கால மாநாட்டிற்கு செலவிடலாம் என்று பிரபாகர் கூறினார்.

தேவைப்படும் முதலீட்டு வருமானத்தை, பழைய திட்டத்தை விட செலவைக் குறைத்து குழு முதலீட்டு நிதியைப் பராமரிக்கும். மேலும் அதிக நிதிகளும் ரோட்டரியின் எதிர்காலத்திற்காக முதலீடு செய்யப்படலாம். மேலும் பழைய செலவுகள் சீரமைக்கப் பட்டமையாலும் அதிக முதலீட்டாலும் 2017 இறுதிக்குள் ரோட்டரி, இலக்கைத் தாண்டி $29 மில்லியனை ஈட்டும் என்றார்.■

# என்றுமே பணம் எனக்குப் பிரதானமில்லை

ரஷிதா பகத்

அவர் ரோட்டரியில் 26 வயதில் இணைந்ததே சுவாரஸ்யமான கதை. ரோட்டரி அறக்கட்டளைத் தலைவர் நெட்செல், கலிபோர்னியா கல்வர் நகரத்தில் உள்ள YMCA வின் இளம் நிர்வாகியாக இருந்தார் ''நீங்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தால் ரோட்டரியின் பெரும் போட்டியாளராக கருத படுவீர்கள்,'' என்று கூறுகிறார். 26 வயது நிரம்பியதும் நகரத்தில் உள்ள பல சேவை சங்கங்கள் அவரை உறுப்பினராக இணைக்க விரும்பியபோது அவர் ரோட்டரியைத் தேர்ந்தெடுத்தார்.

ஏனெனில் அவரை அழைத்த அனைத்து சங்கங்களையும் கவனித்தபோது, நகரத்தின் முக்கிய தலைவர்கள் முடிவெடுப்பவர்களாக ரோட்டரியில் இருப்பதைக் கண்டார். மேலும் YMCAவின் உறுப்பினர்கள் பலர் ரோட்டரியில் இருந்தனர். ''ஆனால் ரோட்டரி YMCA நன்நெறியைப் போன்ற நான்கு வழியில் தேர்வை நடத்தினர். அது தொழில் மற்றும் சமூக சேவையின் மீது கவனம் செலுத்துவதாக அமைந்தது,'' என்றார்.

அறக்கட்டளைத் தலைவரான கதை சற்றே மாறுபட்டது. இளவயது முதல் லாபமற்றத் துறையை அவர் விரும்பினார். கோலாலம்பூர் மண்டல மாநாட்டில் உரையாடலின் போது காரணத்தைக் கேட்டேன். அவர், 'சிறுவயதில் ஒவ்வொரு ஆண்டும் விடுமுறை காலத்தை YMCA வில் கோடை கால முகாமில் கலந்து கொண்டு கழித்தேன்.' உயர்நிலை பள்ளியில் படிக்கும் போது YMCA அளித்த பகுதி நேரப்பணி வாய்ப்பைப் பெற்றேன். பிறகு அங்கிருந்த உயர்நிலை அலுவலர் என்னை முழுநேரமாக அந்நிறுவனத்தில் பணிபுரிய பரிந்துரைத்தார். அதற்காக என்னை சிகாகோவில் லாபமற்ற பணியாளருக்கான பள்ளியில் பயிற்சி மேற்கொள்ளக் கூறினர்.

அவரது மனைவி டியேனிற்கும் பிட்ஸ்பர்க் YMCA வில் இதே போன்ற அனுபவம் ஏற்பட்டது. அவரும் அந்தப் பள்ளியில் வந்து அவரைச் சந்தித்தார். லாபமற்ற நிறுவனத்தில் பகுதிநேரமாகப் பணிபுரிவது பயிற்சியின் ஒரு




வசந்தி தீனசந்திரன் TRF தலைவர் பால் நெட்செல்லை பூச்செண்டு கொடுத்து KL மாநாட்டில் வரவேற்றார்.




**எந்த நாடாக இருந்தாலும் நம் சமூகத்திற்காக சேவையாற்றி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.**

பகுதி. 'நான் 2 வருடங்கள் பாலிஷ் ப்யூர் டோரிகன் கம்யூனிட்டியில் பணிபுரிந்தேன். அது சிகாகோவின் வடப்பகுதியில் பிரிவுத் தெரு என்ற தெருவால் பிரிக்கப்பட்டது. அங்கு YMCA ஒரு பாதுகாப்பான துறைமுகம் போல நடுவில் இருந்தது. 2 சங்கங்களும் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டாலும் YMCAவிற்கு வரும்போது பாதுகாப்பாகவும் நடுநிலையிலும் இருப்பார்கள். இந்த அனுபவம் தேவைப்படும் மக்களுக்கு உதவும் முறையை வடிவமைக்க உதவியது,'' என்றார்.

பட்டம் பெறுவதற்கு முன்பே, நெட்செல் டியேனை 1963ல் சிகாகோவில் திருமணம் செய்து கொண்டார். பட்டம் பெற்ற பின் அவர், லாஸ் ஏஞ்சல்ஸ் YMCAவில் பணி புரிந்து தன் 25ம் வயதில் இளம் நிர்வாக இயக்குனரானார்.

பின்பு, YMCAவின் நிர்வாகத் துணைத் தலைவரான பிறகு உலகில் பெரிய YMCAவில் ஒன்றான லாஸ் ஏஞ்சல்சிற்குச் சென்றார். லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள உலகின் 5வது பழமையான மற்றும் பெரிய ரோட்டரி சங்கமான RC லாஸ் ஏஞ்சல்ஸில் இணைந்தார்.

நெட்ஜெலின் ஒட்டுமொத்த பணியும் லாபமற்றதாகவே இருந்தது, இளைஞர்கள் வெற்றியையும் செல்வத்தையும் சேர்க்க எண்ணாமலிருப்பது அசாதாரணமானது. அதனால்தான் அவர் லாபமற்றத் துறையைத் தேர்ந்தெடுத்தது என்னைக் கவர்ந்தது. அவரோ, ''நான் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டிய இளைஞன். செல்வத்தைச் சேர்ப்பது என்னுடைய இலட்சியமில்லை. ரோட்டரி, குழந்தையான என்னை இளைஞனாக்கியது. ரோட்டரியின் அடிப்படைத் தத்துவமான உங்கள் பணி மூலம் பிறருக்குச் சேவை செய்யுங்கள் என்பதே எனது இலட்சியமாகும், எனப் புன்னகைத்தார்.

1985ல் நெட்செல் – க்ரிக்ஸ்பி என்னும் கூட்டு நிறுவனத்தைத் தொடங்கினார்.



*RI தலைவர் இயான் ரைஸ்லி, RID C பாஸ்கர், TRF தலைவர் பால் நெட்செல் மற்றும் RID ஜான் மாத்யூஸ் கோலாலம்பூர் மாநாட்டில்.*

மேற்கு அமெரிக்காவில் உள்ள லாபநோக்கமற்ற நிறுவனங்களின் சிறந்த ஆலோசனை நிறுவனமாக இது விளங்குகிறது. பெரும் செல்வத்தைச் சேர்க்க இதைத் தொடங்கவில்லை ''பணம் எனக்கு பிரதானமில்லை. ஏனெனில் நான் மேலும் பல சேவைகளைச் செய்யவே விரும்புகிறேன். மேற்கு அமெரிக்காவில் உள்ள நம்மைப் போன்றோர்க்கு இந்நோக்கம் சிறந்த முறையில் வெற்றிப் பெறுவதாக அமையும்,'' என்கிறார்.

டியேனும் அவரும், தன் மகன் மற்றும் மகளுடன் நகரத்தில் வாழ்ந்து வந்தனர். கல்வர் நகரத்தில் கல்வி நிறுவனத்தை நடத்த பலமுறை கேட்டுக்கொண்ட போதும். 1970களில் கலிபோர்னியாவின் கல்வி முறை சிறந்ததாக இருந்தது,'' என்று கூறினார். 1972 வரை உலகின் பிற பகுதிகளை விட கல்வர் நகரத்தில் திரைப்படங்கள் படமாக்கப்பட்டன. ஆம் பாலிவுட் வரும் வரை,'' என்று நகைத்தார். ஏறக்குறைய கல்வர், நகரம் முழுதிலும் 'கான் வித் தி விண்ட்' என்ற படம் திரைப்படமாக்கப்பட்டது. 'விசார்ட் ஆப் ஓஸ்' என்ற படமும் இங்கு தான் படமாக்கப்பட்டது. இதன் மூலம் நீண்ட வரலாற்றைப் பெற்று இன்று வரை முக்கிய நகரமாகத் திகழ்கிறது,'' என்கிறார்.

கல்விக்குழுவில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு 4 வருடங்கள் சேவையாற்றினார். அவர் சிட்டிக் கௌன்சிலை நடத்த கேட்டுக்கொண்டதால் மறு தேர்தலை நடத்தி இரு முறை மேயாரானார். நெட்செல் அரசியலுக்கு வரக் கேட்டபோது ''காங்கிரசுக்காக உழைக்கலாம். ஆனால் எனக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை'' என்றார். என் நோக்கம் சேவை மட்டுமே. நம்மிடம் மிகப்பெரும் பொறுப்புள்ளதாக நான் இன்று வரை நம்புகிறேன் எந்த நாடாக இருந்தாலும் நம் சமூகத்திற்காக சேவையாற்றி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். 'நமக்கு சலுகையைத் தாண்டிய பொறுப்புள்ளது என்பதையும், அதை உயர் அதிகாரிகளும் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது என்றும் தொடர்ந்தார்.

மேலும் நெட்செல் ரோட்டரியிலும் அவர் RC லாஸ் ஏஞ்சல்ஸ், RC தலைவர் போன்ற பதவியைத் தேடவில்லை என்று தொடர்ந்தார்.



# நெட்செல் பார்வையில்:

## நிலையான தன்மை

மிக நெருக்கடியானது. ஏனெனில் நாம் அறிந்த ஒன்றில் பெருமளவு பணத்தை முதலீடு செய்யலாம். நான் மியான்மரில் அன்று RI தலைவராக இருந்த கல்யாணுடன்(பானர்ஜி) பணி புரிந்தபோது மியான்மரை ரோட்டரி உலகில் மீண்டும் கொண்டு வர விரும்பினார். RC லாஸ் ஏஞ்சல்ஸ் சங்க உறுப்பினர் கிராமங்களில் நீர் குறித்த திட்டங்களைச் செயல்படுத்தி அதற்காக இயங்கும் சக்தியாக இருந்தார். 2008 நர்கிஸ் சூறாவளிக்கு பிறகு ரோட்டரியினர் அங்கு உதவி செய்தனர். மியான்மர் அரசும் இயற்கைச் சீற்றத்தின் போது உதவும் அரசு சாரா நிறுவனங்கள் 12-18 மாதங்கள் மட்டுமே நிலைத்திருக்கின்றன. ஆனால் ரோட்டரி எல்லா நேரத்திலும் சேவையாற்றுகிறது என்றனர். இப்படித்தான் பல நாடுகளில் ரோட்டரி விளங்குகிறது. நீண்ட நாட்கள் இருந்து சேவை செய்வது நிலைத்த தன்மையின் மற்றொரு வடிவமாகும்.

ஆனால் சில பகுதிகளில் வழங்கப்பட்ட நிதித்திட்டங்கள், 3-4 வருடங்கள் செயல்பட்டு பிறகு அதை அப்படியே விட்டு விட்டதால் பயன்படாமல் போய் விட்டது. நீர் மற்றும் சுகாதாரம் அங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை. நிலைத்த தன்மை என்பது முதலிட்டை, லாபநோக்கற்ற சேவைநோக்கமுள்ள தொழில் நிபுணர்கள் வழி திரும்பப் பெறுவதும் ஆகும். தொலைநோக்குப்பார்வையை ஏற்கனவே கொண்டிருந்தது என்பதும் அதை பல நவீன வழிகளில் தொடர்வதையும் நான் அறிவேன்.

அதனால்தான் பிற நிறுவனங்கள் லாப நோக்கமில்லாமல் நன்கொடை வழங்க நினைக்கும்போது TRFஐ தேர்ந்தெடுப்பார்கள். ரோட்டரி நம் தன்னார்வத் தொண்டர்களால் வெளிப்படையான நிலைத்த தன்மை மற்றும் செலவிற்கேற்ற செயல்திறனால் நற்பெயர் பெறுகிறது.

## இந்தியாவில் CSR வாய்ப்பு

புனேவில் பிப்ரவரி 2017ல் நான் இந்த பெரும் வாய்ப்பைப் பற்றி வர்த்தக பிரிவில் உள்ள 25 நிர்வாக உறுப்பினர்களுடன் பேசினேன். அவர்களிடம் உரையாடி இந்திய ரோட்டரி மட்டுமே அவர்கள் சேர்ந்து சேவை பணியாற்ற சிறந்த நிறுவனம் என்று தெரிவிப்பதே எனது முக்கிய நோக்கமாகும். நமது வரலாறு மற்றும் போலியோவிற்கான அர்ப்பணிப்பு குறித்தும் நான் பேசினேன்.

## சிறந்த சேவை மையமாக தேர்வு

கடந்த 50-55 வருடங்களில் கையாண்ட பெருந்தொகை உட்பட 100 வருடங்களில் நாம் $4.3 பில்லியனை கையாண்டிருக்கிறோம். எனவே நமக்குத் தொண்டிற்கான வாய்ப்புகள் பல உள்ளன.

## 2025ல் 2025

$2 பில்லியன் 25 மில்லியன் 2025க்குள் எட்டுவது பெரிய இலக்காகும். ஆனால் அதில் பாதி தூரத்தை நாம் கடந்து விட்டோம்.

## எதிர்காலம்

ரோட்டரியின் எல்லா நிலை - சங்கத்திற்கான தலைமையில் பங்கு பெறும் ஆர்வமிக்க தருணம் இது. மாவட்ட மற்றும் பன்னாட்டு அளவில் அடுத்த 5-7 வருடங்களுக்கு இது இருக்கும். ஏனெனில்: இந்த உலகிலிருந்து போலியோவை அகற்றியபிறகு நம் கண்ணுக்கு எட்டிய அளவில் TRF தனது திறமையால் செய்யவேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து உயரும்.

## அடுத்த கவனிப்பு பகுதி

ஒருவேளை நமது அடுத்த திட்டம் நம் கவனத்திற்குட்பட்டவையாக இருக்கலாம். எனது எதிர்பார்ப்பு அமைதிக்காக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் செய்யும் அனைத்தும் அமைதி என்னும் ஒரு குடைக்குள் அடங்கும். நாம் ஆக்கப்பூர்வமான சேவைகளை செய்வோம். எதை செய்தாலும் முழு ஈடுபாடுடன் செய்வோம்.

**தங்கள் சொந்த முயற்சியில் பன்னாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் இந்தியர்களின் பேராற்றலை நான் பாராட்டுகிறேன்.**

நிறுவனத்திற்காக ஏதாவது செய்யாமல் ஒருவரால் உண்மையாக இருக்க முடியாது என்பதை அவர் நம்பினார். அதை நான் நிறுவனத்திற்கான சேர்க்கை விலையாகக் கருதுகிறேன். எப்போதுமே ரோட்டரிக்குத் தான் எனது முன்னுரிமை,'' எனக் கூறி, அதனால்தான் சமூக சேவைக்காக சிறிது நேரம் செலவிடுவதாகக் கூறினார்.

போலியோவிற்கு பிறகு என்ன? என்ற விடை தெரியாத கேள்வி 2007ல் எழுந்தது. ''சால்ட் லேக் சிட்டி மாநாட்டில், சியாட்டில் ரொட்டேரியனான சீனியர் பில் கேட்ஸ் மற்றும் பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் நிறுவனர் போலியோவைத் தாண்டி யோசிக்கும் நேரம் வந்தபோது, பெரிய அளவில் துணிவாக சிந்தித்தால்தான் செய்ய வேண்டியவற்றிற்கு எல்லையற்ற ஆற்றலைப் பெறவும் , ஏற்கனவே சாதித்ததற்கு நன்றி கூறவும் முடியும். எனவே நாங்கள் அதை எதிர்ப்பார்க்கிறோம். 36 மாத எல்லைக்குள் கடைசி போலியோ நோயாளியை அறிந்து போலியோவற்ற உலகத்தைக் கண்ட பிறகு நாங்கள் எங்களுக்கு யோசனைகளையும் உள்ளீடுகளையும் வழங்கும் ரோட்டரியினருடன் இணைந்து செயல்படுகிறோம்,'' என்றார்.



TRF *தலைவர் பால் நெட்செல் பன்னாட்டு மாநாட்டில்* (Intenational Assembly).

## ரோட்டரியும் இந்தியாவும்

K L மாநாட்டில் நெட்செல் இந்திய பயணம் ஒவ்வொன்றும் தமக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் வழங்கியது என்றார். அப்படி இந்தியாவின் சிறப்பு என்ன? அது ரோட்டரி உலகிற்கு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது?

''இது அத்தியாவசியமானது என நான் நினைக்கிறேன். முதலாவதாக, இது இந்திய ரோட்டரியினர் தரும் சக்தி.'' அதன் நவம்பர் 1997 மாவட்ட ஆளுனராக போலியோ குணப்படுத்தும் திட்டத்திற்காக மும்பை மற்றும் புனேவிற்கு வந்த இந்திய பயணத்தை நினைவுக் கூர்ந்தார். அனைத்து ''இந்திய ரோட்டரியனரும் எனக்குள் ஆழ்ந்து பதிந்தனர். தங்கள் சொந்த முயற்சியில் பன்னாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் அவர்களின் பேராற்றலை நான் கண்டேன். நான் ரொட்டேரியனாக இல்லை என்றால் தொழிற்பயிற்சி திட்டம், பள்ளி மற்றும் சுகாதார அக்கறை, இரத்த வங்கி போன்றவற்றைப் பார்வையிட்டு அவர்களின் சேவையை நான் அறிந்திருக்க முடியாது. 2007ல் இந்தியா( சென்னை) வந்தபோதும் இப்போதும் எந்த வேறுபாடும் இல்லை.

அவரது மாவட்டப் பங்களிப்புடன் 4 வருட 3H க்ராணடாக் 250,000 நிதியளிப்பில் போலியோ சிகிச்சை நடத்தப்பட்டது. இந்திய ரோட்டரியினர் பணத்தை மட்டும் செலவழிக்காமல், நேரிடையாக பங்கேற்று, நடப்பதைப் பார்த்து தங்களால் முடிந்த வரை உதவுவதை காட்டுவதற்காகவே நான் அங்கு இருந்தேன்,'' என்றார். இந்திய ரோட்டரியினர் அவரிடம், ''உங்களுக்கும் நிச்சயம் தேவைகள் இருக்கும். உங்கள் பகுதிக்கு நாங்கள் எவ்வாறு உதவ முடியும்?'' என்று கேட்டபோது அவர் மிகவும் நெகிழ்ந்தார். உரிய நேரத்தில் அவரது ஆட்சியில் சில திட்டங்களையும் செயல்படுத்தினர்.

வருங்காலத்தில் இந்தியா TRF நிதி வழங்குவதில் 2ம் இடத்தைப் பிடிக்கும் என நினைத்தாரா? முதலில் நான் 2007-09 ஆண்டின் இயக்குனராகும் வரை அதைப் பற்றி நான் நினைத்ததில்லை. அன்றைய RID அசோக் மஹாஜன் என்னுடன் இருந்தார். உலகளாவிய TRFன் உலகளாவிய சிறப்பை அதன் பிறகே புரிந்து கொண்டார். இம்முறை இந்தியாவிற்கு டியேனுடன் வந்து ரோட்டரியின் மறுபக்கத்தைக் கண்டார். இம்முறை அது அவ்வளவு அழகாக இல்லை.

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பது தான் முதல் பணி. அதன் பிறகு போட்டிகளிலும் தேர்தலிலும் சூழ்ச்சி நிறைந்த பல போட்டிகளைச் சந்திக்க வேண்டும். அதிகரித்து வரும் சவால்களைக் கட்டுப்படுத்த RI குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருந்தாலும் அவர் , ஒருநாள் இந்தியா உலகின் உயர்ந்த ரோட்டரி நாடுகளில் ஒன்றாக வளரும் என்ற நம்புவதாகக் கூறினார். ஏனெனில் இங்கு அதற்கான அர்ப்பணிப்பை தான் காண்பதாகவும் தெரிவித்தார்.■

*படங்கள் : ரஷீதா பகத்*
*வடிவமைப்பு : S கிருஷ்ணப் பரதீபுஷ்*

# ரோட்டரிக்கு மகளிர் உறுப்பினர்கள் தேவை

*நாராயணன் சுரேஷ்*

பன்னாட்டு ரோட்டரியின் முன்னாள் தலைவர் KR ரவீந்திரன், பெங்களூரு ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் D 3190 மூத்த அதிகாரிகள் முன்பு, பெங்களூரு ரோட்டரி ஹௌஸ் ஆப் ப்ரெண்ட்ஷிப்பில் பேசும்போது ரோட்டரியின் வலிமையான எதிர்காலம் மகளிர் உறுப்பினர்களிடம்தான் உள்ளது என்றார்.

பன்னாட்டு ரோட்டரி, 1.2 மில்லியன் உறுப்பினர்களுடன், சுமார் 200 நாடுகளில் 35,000திற்கும் அதிகமான ரோட்டரி சங்கங்களைக் கொண்டது. 1987ல் தான் முதலில் பெண்களை உறுப்பினராக ஏற்றுக் கொண்டது. உலகளவில் உள்ள ரோட்டரி உறுப்பினர்களில் 27 சதவீத பெண்கள் உள்ளனர். 140க்கும் மேலான சங்கங்களுக்குச் சிறப்பாகத் தலைமை வகிக்கும் மாவட்ட ஆளுநர் ஆஷா ப்ரசன்ன குமாரை அவர் பாராட்டினார்.

*ஃபேஸ் டு ஃபேஸ்* என்ற உரையாடல் நிகழ்வில் PRIP KR ரவீந்திரன் 200க்கும் மேற்பட்ட ரோட்டரியினருடன் உரையாடினார். அப்போது அவர், ரோட்டரிக்குப் பல மகளிர் உறுப்பினர்கள் தேவை. ஏனெனில் அவர்கள் சமூக சேவையில் ஆர்வத் துடன் ஈடுபடுவார்கள். ஏற்கனவே சில மூத்த பெண் அதிகாரிகள் RIயில் உள்ளனர். பன்னாட்டு ரோட்டரியில் முதல் பெண் தலைவரைப் பெறுவதற்கு வெகு காலமாகாது என்றார்.

கர்நாடகாவின் முதல் மற்றும் பழைய ரோட்டரி சங்கமான RCB 1934ல் நிறுவப்பட்டது. அது 255 உறுப்பினர்களில் 15 சதவீதம் பெண் உறுப்பினர்களைக் கொண்டது.

ஒரு மணி நேர உரையாடலில், நடுநிலையாளர்கள் RCB தலைவர் ஜரீர் பத்தா மற்றும் முன்னாள் தலைவர் ராம்குமார் சேஷு, ரவீந்திரன் அவர்கள் தலைமைப் பண்பு, பன்னாட்டு ரோட்டரியின் செயல்கள், ஆகியன குறித்து பதிலுரைத்தார்.

அமெரிக்காவில் இயங்கும் சாரிட்டி நாவிகேட்டர் அமைப்பின் தரப்படி, உலகளவில் உள்ள அரசு சாரா நிறுவனங்களில் சிறப்பான நிதிப்பயன்பாட்டில் பன்னாட்டு ரோட்டரி நிதி குறித்த தகவல்களை 97.3 சதவீதம், வெளிப்படையாகத் தந்து முதல் இடத்தைப் பெற்றுள்ளது என ரவீந்திரன் தெரிவித்தார். *வேர்ல்ட் விஷன், ரெட் க்ராஸ்* மற்றும் *சேவ் தி சில்ட்ரன்* போன்ற பிற அரசு சாரா நிறுவனங்கள் மத்தியில் ரோட்டரி நற்பெயரைப் பெற்றது பற்றி விவரித்தார்.

தன் நுட்பான அறிவு, நகைச்சுவை, தெளிவு மற்றும் பன்னாட்டு ரோட்டரியின் நற்செயல்களைத் தொகுத்துரைத்தது போன்றவற்றால் பார்வையாளரைக் கவர்ந்த ரவீந்திரனை RCBயின் முக்கிய உறுப்பினர், PRID M K பாண்டுரங்க செட்டி மற்றும் DG ஆஷா ஆகியோர் கௌரவப்படுத்தினர்.

RC பெங்களூர் இணைச் *செயலாளரால் எழுதப்பட்டது*



இடது புறத்திலிருந்து: ராம் குமார் சேஷு, PRIP KR ரவீந்திரன் மற்றும் ஜரீர் பத்தா.

# சேவை விருந்து

ரோட்டரி செய்தி குழு



*RILM தலைவர் ஷேக்கர் மேத்தா, TRF அறக்கட்டளையாளர் சுஷில் குப்தா, லூம்பா ஃபவுண்டேடஷன் தலைவர் ஷெரி ப்ளேர், லார்ட் லூம்பா, முன்னாள் ராணுவ தலைமை அதிகாரி ஜெனரல் ஜோகிண்தர் ஜஸ்வந்த் சிங் மற்றும் அவர் துணைவி அனுப்பமா சிங்.*

உலகளாவிய அரசு சாரா நிறுவனமான லூம்பா ஃபௌண்டேஷன், விதவைகளின் நலத்திற்காகவும் குழந்தைகள் கல்விக்காகவும் செயல்பட்டு வருகிறது. அந்நிறுவனம் சமீபத்தில் குருகிராம் மற்றும் மும்பையில் நிதி திரட்டும் சேவை விருந்தை நடத்தி அதன் 20ம் ஆண்டு விழாவைக் கொண்டாடியதோடு இந்திய ரோட்டரி எழுத்தறிவுப் பணிக்குழுவுடன் (RILM) அதிகாரப்பூர்வமாக கூட்டணி தொடங்கியது. அந்நிறுவனத் தலைவர் செரி ப்ளேர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



*RILM தலைமை ஆலோசகர் PRIP கல்யாண் பேனர்ஜீ லூம்பா ஃபவுண்டேஷன் தலைவர் ஷெரி ப்ளேருடன்.*

அந்நிறுவனமும் RILMமும் 30,000 விதவைகளுக்கு கௌரவத்துடன் வாழத் தேவையான அடிப்படைக் கல்வியும் வாழ்வாதாரத் திறத்தையும் வழங்க இணைந்துள்ளது. மேலும் இக்கூட்டணி, கல்வியை நிறுத்திய இந்த விதவைகளின் 2,000 குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பியுள்ளது.

ஹரியானா முதல்வர் திரு மனோஹர் லால் கட்டர் குருகிராம் விருந்தின் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார். முன்னாள் RI தலைவர் கல்யாண் பேனர்ஜி, RILMன் தலைமை ஆலோசகராக மும்பை நிகழ்வில் கலந்து கொண்டார். முன்னதாக அவர் ஜூன் 2017ல் லண்டனில் லூம்பா ஃபவுண் டேஷனுடன் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளார்.

ரோட்டரி சங்கங்கள் அவரவர் மாவட்டத் திட்டங்களுக்கான பயனாளர்களை அடையாளம் காணும். RILMமிலிருக்கும் பயிற்சியாளர்கள் அந்த விதவைகளுக்குப் பல்வேறு தொழில்திறனைக் கற்பித்து பயிற்சியை நிறைவு செய்து வேலைக்குச் செல்லவோ, சிறுதொழில் தொடங்கவோ செய்வார்கள்.■

BE THE INSPIRATION

# தூண்டுகோலாய் இருங்கள்
## 2018-19 ரோட்டரியின் உட்பொருள்

### ஹான்க் சார்டின்



மோனிகா லோஸின்ஸ்கா

RIPE பேரி ரஸ்ஸின் தன் ஆண்டின் உட்பொருளை விவரிக்கிறார்.

ரோட்டரியின் சர்வதேசக் கூட்டம் ஸான் டியாகோவில் சமீபத்தில் நடைபெற்றது. அதில் பேசிய பன்னாட்டு ரோட்டரி தலைவர் (தேர்வு) பேரி ரஸ்ஸின், ரோட்டரியின் நிலைத்த எதிர் காலத்திற்காக ரோட்டரியனர்களை ஊக்குவிக்கும் வகையில் பேசினார்.

நியு ப்ரொவிடன்ஸ், பகமாஸ் என்ற பகுதியில் உள்ள கிழக்கு நசாயு ரோட்டரி சங்க உறுப்பினர் ரஸ்ஸின், வருங்கால மாவட்ட கவர்னர்களுக்கு, 2018-19 ஆண்டிற்கான உட்பொருளாக *தூண்டுகோலாய் இரு* என்பதை வெளியிட்டார். சிறப்பானதை விரும்பும் உங்கள் சங்கத்திற்கும் ரோட்டரியினருக்கும் தூண்டுகோலாய் இருங்கள். செய்யவேண்டியவை, இருக்க வேண்டியவை, உருவாக்க வேண்டியவை நம் வாழ்நாளிற்கும் அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்றார்.

ரோட்டரியின் புது நோக்கை வலியுறுத்தி, நாம் அனைவரும் இணைந்து மக்கள் ஒன்றுபட்ட உலகைப் பார்ப்போம். மாற்றத்தை உலகில் காண முதலில் நம்மிலும் நம் சங்கத்திலும் செயல்படுவோம். இப்பொருள் உதவும் தன்மையை வளர்த்துக் கொள்வதையே விளக்குகிறது என்று விவரித்தார்.

''நாம் தான் இந்நிறுவனத்தின் முதல் உறுப்பினர். நாம் சேவையாற்ற விரும்பினால், நம் இலக்கில் வெற்றி பெற விரும்பினால் — நம் உறுப்பினர்களை முதலில் கவனிக்க வேண்டும்.''

ரஸ்ஸின் வருகின்ற மாவட்ட கவர்னர்களிடம் ''மாற்றத்தை ஏற்படுத்த, செயலாற்ற, உங்கள் முழுத்திறனை அடைய சங்கத் தலைவர்களுக்கு, மாவட்ட ரோட்டரியினர்களுக்கு ஊக்கமளியுங்கள். அவர்களை ஊக்குவிப்பது உங்கள் கடமை மட்டுமல்ல சொந்த முன்னேற்றத் திற்கான பாதையை உணர்த்தும் உதவியும் ஆகும்,'' என்றார்.

### போலியோவிற்கான முன்னேற்றம்

போலியோ ஒழிப்பிற்கான பணியும் ஒரு வகை தூண்டுகோல் என்று ரஸ்ஸின் குறிப்பிட்டார். கடந்த முப்பதாண்டுகளில் நடந்த நம்ப முடியாத அளவு திட்டங்களை விளக்கினார். 1988ல் 350,000 மக்கள் போலியோ வைரஸால் பக்கவாதத்தைப் பெற்றனர். டிசம்பர் 27 2017ல் அது 20 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. நம்பமுடியாத கால அளவில் போலியோவை நாம் ஒழித்துள்ளோம். புதிதாகக் காணப்பட்ட போலியோ நோயே கடைசியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

உலகின் கடைசி போலியோவை பதிவு செய்து முடித்தாலும் நமது பணி நிறைவடையவில்லை என வலியுறுத்தினார். ''சான்றளிக்கும் குழு கூறும் வரை போலியோ ஒழிக்கப்பட வில்லை — குறைந்தது 3 ஆண்டுகள் நதியில், சாக்கடையில், பக்கவாதம் வந்த குழந்தையில் எங்கும் போலியோ கிருமி இல்லை என்ற நிலை வரும் வரை'' என்றார். ''அது வரை நம்முடைய செயல் தொடர வேண்டும். அதற்கான நோய்த்தடுப்பு முயற்சி களும் அர்ப்பணிப்பும் மற்றும் நோய் கண்காணிப்புத் திட்டங்களும் தொடர வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

### நிலையான சுற்றுச்சூழல்

மனிதாபிமான பணிகளில் ரோட்டரி அதிக நீடித்த கவனம் செலுத்துகிறது. ரஸ்ஸின், ரோட்டரியினர் மாசு, சுற்றுச்சூழல் சீரழிவு, பருவ மாற்றம் குறித்த கடினமான உண்மைகளை ஏற்கவேண்டும் என்றார். ''எனது நாட்டில் 80 சதவிதம் பகுதி கடல் மட்டத்தின் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 2100 ஆண்டில் கடல்மட்டம் 2 மீட்டர் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ''எனது நாடு 50 ஆண்டுகளில், பெரும்பாலான கரீபியன் தீவுகள், கடலோர நகரங்கள் மற்றும் உலகெங்கும் உள்ள பள்ளத்தாக்குப் பகுதிகளைப் போல காணாமல் போகும்,'' என்றார்.

மேலும், தலைவர்கள் ரோட்டரி சேவையை பெரிய உலகளாவிய இயக்கத்தின் ஒரு பகுதியாக காண வேண்டும். கடந்த முறையை விட சிறந்ததாக செயலாற்ற வேண்டும் என்று கூறினார்.■

ஆதாரம்: *www.rotary.org*

# ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்குவதில் முதல் 9 இடங்களுள் 4 & 5ம் மண்டலங்கள்

ரஷிதா பகத்

பல்வேறு நிலைகளில் இருக்கும் ரோட்டரித் தலைவர்களுக்கு இது உற்சாகமான தருணம் – இப்போதைய, முந்தைய, வருகின்ற, தலைவராகும் கனவுடையவர்களுக்கும். ஏனெனில் ரோட்டரி, தனது அடுத்த நூற்றாண்டைச் சந்திக்க இருப்பதால் அடுத்த 5 – 7 ஆண்டுகள் முக்கியமானதாகும்.

கோலாலம்பூர் மண்டல மாநாட்டின் கருத்தரங்கில், ரோட்டரி அறக் கட்டளைத் தலைவர் பால் நெட்செல் பேசும் போது, ''குறிப்பாக, கடந்த 10 – 12 வருடங்களில் நாம் 6 பகுதிகளில் நம் கவனத்தைச் செலுத்தினோம். ஒருவேளை நமது தலைவர் (இயான் ரைஸ்லி) அவருடைய சில கருத்துகளை (சுற்றுச்சூழல் பாதுகாப்பு) நம் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது ஏழாகலாம். மாபெரும் நம்பிக்கையுடன் இரண்டாம் நூற்றாண்டின் முதல் ஆண்டைத் துவங்கியுள்ளோம்,'' என்றார்.

அவர், இந்தாண்டிற்கான ரோட்டரி நிதிக்கான குறிக்கோள் $315 மில்லியனாக பன்னாட்டு கூட்டத்தில் கூறியிருப்பினும் போலியோ ஒழிப்பிற்காக $70 மில்லியன் முதல் 100 மில்லியனும் ரோட்டரியினர் $35 முதல் $50 மில்லியனும் பெற்றுத் தர தயாராக இருப்பதால் அதன் எல்லையை $360 மில்லியனாக உயர்த்தியுள்ளார்.

ரோட்டரியின் நூற்றாண்டு விழாவில், தன் முன்னோடி கல்யாண் பானர்ஜியின் சிறந்த தலைமைக்கு நன்றி தெரிவித்து அவரது குறிக்கோளை புத்தாக்கத்தால் நிறைவேற்றுவோம் என நெட்செல் கூறினார். அதற்காக பல வகையில் நிதித் திரட்டுவோம் என்றும் நமது நிறுவனம் வளர்ந்த ஆதாரத்தை வழங்கியுள்ளதாகவும் கூறினார். கடந்த ஆண்டு பானர்ஜி $300 மில்லியனை குறிக்கோளாகக் கொண்டு $304 மில்லியனைத் திரட்டினார். நீங்கள், உங்கள் 4,5 மற்றும் 6ம் மண்டலங்கள் $20.89 மில்லியனையும், இந்தியாவில் மட்டும் $20.04 மில்லியனையும் திரட்டியுள்ளீர்கள். உலகளவில் $15.24 மில்லியன் நிதிப் பங்களித்ததன் மூலம் உலகின் முதல் 9 இடங்களுள் 4 மற்றும் 5ம் மண்டலங்கள் உள்ளன.

நெட்செல், ரோட்டரியின் அமைதி காப்பாளராகவும் அமைதியை ஏற்படுத்துபவராகவும் இருப்பதாகக் கூறினார். கடந்த சில ஆண்டுகளில் நாங்கள் சுத்த நீரை வழங்குவது, சுகாதாரம் மற்றும் அனைவருக்கும் கற்பித்தல், பேறுகால இறப்பைக் குறைத்தல், பெண்கல்வி, பொருளாதார உறுதியை சமூகத்திதற்கு வழங்கல், வறுமையை ஒழித்தல், ஆகியன அமைதியை நீடிக்கச் செய்யும் என உணர்ந்தோம்.

ரோட்டரியின் நூற்றாண்டில் அறங்காவலர் சுஷில் குப்தா, பானர்ஜியின் தலைமையிலும் பங்கு வகித்துள்ளார். முடியாதென நினைத்து சாதித்த $300 மில்லியன் இலக்கை முன்வைத்தற்குப் பாராட்டினார்.

இப்போது ரோட்டரியை அனைவரும் கவனிக்கின்றனர். அதன் அடுத்த சவாலையும் எதிர் நோக்குகிறார்கள். ''ஒரு முடிவு தெளிவானது; ரோட்டரி உலகம், 30 வருடங்கள் தேவைப்படுகின்ற பல மில்லியன் பெருமான பெரும் திட்டத்தை ஏற்கத் தயாராக இல்லை. ஆனால் போலியோ ஒழிப்பில் ரோட்டரி ஈடுபடாதிருந்தால் அது எங்கே இருந்திருக்கும்? அந்த வெற்றியைப் பெறவில்லை என்றால் இந்தத் தொகையைத் திரட்டியிருக்க முடியுமா?'' என்று நெட்செல் ஊக்குவித்தார்.


ரஷிதா பகத்

ரோட்டரி உலகம் எதை தீர்மானித்தாலும், அது அளவிடக் கூடிய, அடையக்கூடிய மற்றும் நிலைக் கக் கூடிய ஒன்று என்பது உறுதி.

அறங்காவலர்-தேர்வு குலாம் வஹன்வதி வருங்கால மாவட்ட ஆளுநர்களுக்கு ரோட்டரியின் நவீன வளர்ச்சியில் அவர்கள் அறிவை மேம்படுத்தவும், வாய்ப்பு நேரும் போது அதைப் பயன்படுத்தவும், திறந்த கூட்டத்தில் கேள்விகளைக் கேட்டு அவர்கள் எண்ணத்தை பகிரவும் வேண்டும் எனவும் கூறினார். ''நமது திட்டம் மூன்றாமாண்டில் இருக்கும் போது பல இடர்பாடுகளைக் கண்டது. அவை தகுந்த மாற்றங்களுடன் திறந்த கூட்டத்தின் வழி சரி செய்யப் பட்டது. எனவே பேசுங்கள். ரோட்டரி நிதிக்கான பங்களிப்பை மனதில் வையுங்கள். கடவுள் ஆசிர்வதிக்கும்போது உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாமல் வழங்கும் தரத்தை உயர்த்துங்கள்,'' என்றார்.



Rtn. ஸ்ரீதர் பாரதி

TRF அறங்காவலர்களின் தலைவர் பால் நெட்செல் மற்றும் முன்னாள் RI தலைவர் KR ரவீந்திரன் அவர்கள்.

மற்றொரு அமர்வில் இந்திய போலியோப்ளஸ் கழக (IPPC) தலைவர் தீபக் கபூர் ரோட்டரியினர் போலியோ அற்ற உலகைப் படைத்த வரலாறை மறக்கக் கூடாதெனக் வலியுறுத்தினார். மதிப்பு, மரியாதை, நம்பிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளல் தான் கூடுதல் போலியோ திட்டம் ரோட்டரியினருக்குக் கொடுத்தது. ''அது நமக்கு மதிப்பைத் தந்ததன் மூலம் ராஷ்ட்ரபதி பவனியின் கதவுகள் நமக்காகத் திறந்து, பிரதமர் ரோட்டரியினரைச் சந்திக்க மகிழ்ச்சி அடையச் செய்தது. இது நமக்கு உயரதிகாரிகளிடையே கௌரவம் என்பதுடன் பில் கேட்ஸ், ராஜஸ்ரீ பிர்லா, அமிதாப் பச்சன் மற்றும் நம்மை வளர்த்த பலரைப் போன்ற கொடையாளர்களிடையே நம்பகத்தன்மையும் தந்தது. இதன் வழி கோயில், சர்ச், மசூதி போன்ற இடங்களில் உள்ள மதத்தலைவர்கள் நம்மை ஏற்கின்றனர்,'' என்றார்.

மேலும் ''அன்னதானம், சுகாதாரத் திட்டம் போன்ற தொண்டு நிகழ்வுகளைத் தாண்டியும் ரோட்டரி முழு நம்பிக்கை பெற்றது. ரோட்டரி எங்கே என்ற வினாவிற்கு பெர்னாட் ஷா ரோட்டரி மதிய உணவிற்காக சென்றுள்ளதாக கூறனார். ஆனால் இந்தியாவில் ஊடகங்கள் இன்னும் ரோட்டரி சங்கத்தை ரோட்டி சங்கம், நினைத்த நேரத்தில் 5 நட்சத்திர விடுதியில் விருந்துடன் சில தையல் எந்திரத்தை விதவைகளுக்கு வழங்கும் சங்கம் என்றே குறிப்பிடுகின்றன. இந்த எண்ணததை நாம் மாற்று வோம்,'' என்று ரோட்டரி பிரதிநிதிகளை ஊக்குவித்தார்.■



*இடது புறத்திலிருந்து: TRF அறங்காவலர்-தேர்வு குலாம் வாஹவாதி, TRF அறங்காவலர் சுஷில் குப்தா, RID C பாஸ்கர், மாலா, ஜூலியட் மற்றும் RI தலைவர் இயான் ரைஸ்லி அவர்கள்.*

# சிந்திக்க சில தருணங்கள்

*ஜெய்ஸ்ரீ*

Dr AT குமாரராஜா மலேசியாவில் SEDIC பொருளாதார மற்றும் மனித மூலதன வளர்ச்சி இயக்குனரும் இந்திய தொழில்முனைவோர் சங்க நிறுவனரும் மற்றும் RC க்ரேட்டர் கோலாலம்பூரின் முன்னாள் தலைவரும் ஆவார். கோலாலம்பூர் மண்டல மாநாட்டில் பேசிய அவர், ''உங்கள் சங்கம் வெற்றிகரமாக இயங்க, உள்ளூர் நிபுணர்கள், வளங்கள் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைக் உபயோகிக்க வேண்டும்'' என்றார்.

KL மாநாட்டில் அவர் கூட்டு முயற்சி, செயல்திறன் குறித்து அவர் பேசியது, அவர் அனுபவமும், அரசு மற்றும் பிரதம மந்திரியுடன் நேரிடையாகப் பேச்சுவார்த்தை நடத்தியதன் அடிப்படையில் அமைந்தது. குமாரராஜா 7 தூண்கள் அமைப்பில் தான் கற்றதை கூறியது ரோட்டரி சங்கக் கூட்டு முயற்சிக்கும் உதவும் வகையில் இருந்தது.

- உள்ளூர்வாசியாக இருங்கள். சமூகத்தின் அன்றாட தேவைகளைக் கவனியுங்கள்
- சரியானத் பங்காளியை தேர்ந்தெடுங்கள்.
- முக்கியப் புள்ளிகளை ஈடுபடச் செய்யுங்கள்.
- சாமானியருடன் இணைந்து பணி புரியுங்கள். வெற்றிகரமான சில அணுகுமுறை இருபக்கமும் பயன்பெறுமளவில் இருக்கும். அவர் சங்கம் சமீபத்தில் மலேசியாவில் டயாலிஸிஸ் மையத்தை அரசுதவியுடன் நிறுவியது. மலேசியா அரசும் அதே நோக்கத்தில் வழங்கிய RM500000க்கு சமமாக பங்களித்ததைக் குறிப்பிட்டார்.
- உங்கள் நோக்கத்தைத் தெளிவாக்கி செயல்படுத்துங்கள். நோக்கத்தில் உறுதியாக இருந்து சரியான திட்டப்படி உழைத்தால், உங்கள் கூட்டாளிகள் மீண்டும் உங்களுடன் இணைய விரும்புவார்கள் என்றார்.
- தொடக்கத்திலும் இறுதியிலும் தெளிவு வேண்டும். எதுவும் இறுதிவரை நிலைக்காது. உங்கள் சங்கத்தின் எல்லாத் திட்டமும் நிலைக்கவும் சரியான நீங்கள் நேரத்தில் விலகவும் தெரிய



பன்னாட்டு ரோட்டரி முன்னாள் இயக்குனர் Y P தாஸுடன் Dr A T குமாரராஜா மற்றும் நிபுன் மேத்தா.

வேண்டும். இல்லையெனில் சேவையின் வெளிப்பாட்டிற்கு அவசரம் இல்லை என்பதால் நிரந்தர ஒப்பந்தம் என்று எதுவும் இருக்க முடியாது.

- உங்கள் உறுப்பினரின் ஆர்வத்தைத் தக்க வைக்க வேண்டும். 5 சிறந்த சேவை நிறுவனங்களுள் ஒன்றாக ரோட்டரி இருந்தாலும், உறுப்பினர்களுக்கு ஆர்வமும், அவர்களை நிறுவனத்தோடு இணைக்கவும் காரணம் இருக்க வேண்டும். அவர்களுக்கு சங்கம் குறித்த கௌரவம் இருக்க வேண்டுமென்றால் உங்கள் சங்கத்தின் கருத்துக்கள் வலிமையாக இருக்க வேண்டும் என்று வழிகாட்டினார் குமாரராஜா.



*மாவட்ட கவர்னர் ப்ரஃபுல் சர்மா சிவ் கேராவை TRF அறங்காவலர் சுஷில் குப்தா முன்னிலையில் கௌரவிக்கிறார்.*

## சேவைவடிவமைப்பு

''இதயத்தில் அமைதியுடன், உலகத்தை புன்னகைக்க செய்யும் முயற்சியே என் வாழ்வு. நான் எளிமையாக, தூய்மையான அன்புடன் அச்சமற்ற வாழ்வை விரும்புகிறேன். நீங்கள் எதையாவது ஒன்றை வழங்குவதன் மூலம் சேவை ஆரம்பிக்காது. அது, எடுத்துச் செல்ல எதுவும் இல்லை என்ற நிலையில் வரும்போது, தானாகவே மலரும் என்றார் நிபுன் மேத்தா. அவர் தன்னார்வத் தொண்டு மற்றும் பெருந்தன்மையை வளர்க்கும் அரசு சாரா நிறுவனமான servicespace.org நிறுவனராவார். அவர் பேச்சு,மகாத்மா காந்தி, மதர் தெரேசா போன்று மக்களிடமிருந்த அன்பினால் ஊக்கம் பெற்ற கதைகள் நிரம்பியதாக இருந்தது.

சுயநலமாக இருங்கள்; பெருந்தன்மையுடன் இருங்கள் – இதுவே அவர் பரப்பும் பொன்மொழி. உங்கள் செயல், ஆக்சிடோசின் மற்றும் செரொடனின் அளவை உயர்த்தி பயனாளியைத் தாண்டிய நன்மைகளை உங்களுக்குத் தரும். எதையும் பெறாமல் வழங்குவது என்பது நிச்சயம் முடியாது.

அவர் பட்டியலிட்ட கொடுக்கும் பண்பிற்கான அடிப்படை தன்மைகள்:

- ஏதேனும் ஒரு வகையில் அனைவருமே நல்லவர்கள்
- கொடுப்பதில் அனைவருமே சிறப்பாக செயல்பட முடியும்
- கொடுக்கும் பண்பு இணைக்கும் தன்மை வாய்ந்தது. எனவே அங்கு சிறந்த சூழல் உருவாகும் — நீங்கள் தொடங்கி வளர்க்கும் பெருந்தன்மை ஒவ்வொருவராக இணைக்கும்
- அனைவரும் அனைத்துடனும் இணைக்கப்பட்டவர்கள்.
- எல்லாவற்றிற்கும் விலை மதிப்பைப் பார்த்தால் விலைமதிப்பற்ற தொடர்பை நீங்கள் இழப்பீர்கள்.

## வெற்றி பெற ஒன்றுபட வேண்டும்

வெற்றிக்கான வழி குறித்து பேசுவதற்கு முன் உங்கள் அனைவரையும் இங்குப் பார்க்கும்போது எனக்கு ஒன்று தோன்றுகிறது. நான் ஏன் 40 ஆண்டுகளுக்கு முன்பே ரோட்டரியில் இணையவில்லை? நான் ஒரு கௌரவமான ரொட்டேரியன் தான் என்றாலும் ஒரு முழு ரொட்டேரியனுக்கு இணையாகாது என்றார் சிவ் கேரா. சமீபத்தில் சிங்கப்பூருக்குக் குடிப் பெயர்ந்த தன் மகளுக்கு நண்பர்களை உருவாக்க ரோட்டரி சங்கத்தில் இணைய அறிவுரை வழங்கியதைக் கூறினார்.

அவர் உரையிலிருந்து பின்பற்ற வேண்டிய சில:

நீங்கள் வருத்தத்தில் இருந்தால் வெளியே சென்று உங்களை விட மோசமாக இருக்கும் ஒருவருக்கு உதவுங்கள்.

கைம்மாறு செய்ய இயலாதவருக்கு ஏதாவது செய்து உங்கள் சுயமதிப்பை உயர்த்துங்கள்.

பிறருக்கு உதவும்போது சிறப்பாக உணர்வது சுயமதிப்பைத் தரும்.

மனிதத்தன்மை இல்லாத தன்னம்பிக்கை கர்வத்தைத் தரும்.

மாற்றம் ஏற்படும்போது மக்கள் திறம், தூண்டும் திறம் மற்றும் முன்னுரிமைத் திறம் மட்டும் மாறாது.

அடுத்தவருக்குக் கொடுப்பது வாக்குறுதி; நீங்களே ஏற்றுக் கொள்வது பொறுப்பு

நேரத்தின் அவசியத்தைக் கூறி அவர் விடைபெற்றார். நேரம் பறக்கிறது என அடிக்கடி கூறுவோம். நேரம் பறந்தால் அது ஏரோப்ளேன் நீங்கள் பைலட். நேரத்தை உங்களால் நிர்வாகம் செய்ய அல்லது கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் நீங்கள் வெறும் பயணி தான்.■

# தலைமைப் பண்பு தொடரட்டும்

*ரஷிதா பகத்*

நான் பல GETS நிகழ்வுகளைப் பார்த்திருந்தாலும் அவை நேற்றிரவு பார்ட்டியைப் போல் இருந்ததில்லை. நீங்கள் சிறப்பான குழுவினராக உள்ளீர்கள். என்னை அழைத்ததற்காக RI இயக்குனர் C பாஸ்கருக்கு நன்றிகள்,'' எனக்கூறி, கோலாலம்பூர் மண்டல நிறுவனத்தின் GETS அமர்வில் பேசும்போது பன்னாட்டு ரோட்டரி இயக்குனர் ஜான் மாத்யூஸ் வருங்கால கவர்னருடன் பேசும் எந்த வாய்ப்பும் சிறப்பு வாய்ந்தவையே என்றார்.

தொடக்கத்தில் படிப்படியான முயற்சிகளுக்கும் பொறுப்பேற்றதற்கும் மாவட்ட ஆளுநர்களிடம் பார்த்து, ''உங்கள் ஆர்வமும் ஒத்துழைப்பும் இல்லையென்றால் இந்த ரோட்டரி எந்திரம் முன்னேறி இருக்காது,'' எனக் கூறி நன்றி தெரிவித்தார். துணைவியருக்கும், வருங்கால ஆளுனர்களின் ''உங்கள் பார்ட்னரை ஆதரித்து அவர் அருகில் நின்று இணைந்து பல திட்டங்களைச் செய்துள்ளீர்கள். அது மிக முக்கியம்,'' எனக் கூறி நன்றி தெரிவித்தார்.

சான் டியகோவில் நடைபெறும் பன்னாட்டுக் கூட்டத்தில் அவர்கள் பயிற்சி மேலும் மேம்படும். அங்கு நாம் ரோட்டரியின் புதிய தொலைநோக்கு அறிக்கையை தர விருக்கிறோம். பீப்புல் ஆஃப் ஆக்ஷன் (People of Action) என்னும் புதிய வழிமுறை நாம் சமுதாயத்தில் நிலைக்கும் நற்காரியங்களை இன்னும் மேம்பட்ச செய்வதற்கு உருதுணையாக இருக்கும், என விளக்கனார்.

மாத்யூஸ், ''ரோட்டரி தலைமையின் அனைத்து நிலைகளிலும் சமூகத்திற்கு ஓய்வில்லாமல் சேவை செய்வதே இதன் அற்புதமான அம்சம். இதில் அதிசயம் என்னவென்றால், நீங்கள் சமூகத்தில் மாற்றம் கொண்டுவர உழைத்துக்கொண்டிருக்கும் பொழுது, உங்கள் செயல்கள் உங்களையே, நீங்கள் அறியாது, மாற்றிக் கொண்டிருக்கும். நாம் சேவை செய்யவும் பிறருக்கு உதவவும் தான் இங்கு வந்துள்ளோம். ஆனால் இது ஒரு துணை பொருளாகும்; உண்மையில் இது உங்களை மேம்படுத்தும்,'' என்றுரைத்தார்.

இதில் பயிற்சி பெற்ற எல்லா ரோட்டரியினரும் என் வாழ்வில் பார்த்த கூட்டங்களில் அதுதான் சிறந்த கூட்டம் என்பார்கள். ஆழ்ந்த பொருளுடனும் பயனுடனும் ஆற்றலுடனும் சிறப்பாக இருந்தது என்பார்கள். சான் டியாகோவில் தங்களிடமிருந்து வேறுபட்ட திறன்களை உடைய பலரைப் பார்த்து, 'நான் அவரைப் போல இருக்க விரும்புகிறேன் என நினைக்கலாம்.

*இடது புறத்திலிருந்து : RID C பாஸ்கர், RID ஜான் C மாத்யூஸ், அவர் துணைவியார் மேரி எல்லன் மாத்யூஸ் மற்றும் மாலா பாஸ்கர்*



ஆனால் அது தேவையற்றது. ஏனெனில் நீங்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டும். அனுபவம் நிச்சயம் அவர்கள் திறமையைப் பட்டைத் தீட்ட உதவும்' ஆனால் நம்புங்கள். உங்களுக்கு நீங்கள் உண்மையாக இருந்தால் சரியான பாதையில் பயணம் செய்கிறீர்கள், என்றார்.

மாத்யூஸ் ஆளுநருக்கு மட்டுமல்லாமல் ரோட்டரி பணி என்று எல்லாத் தலைவர்களுக்கும் பொருந்தக்கூடிய பயனுள்ள சில குறிப்புகளைத் தந்தார். ''கண்களை மூடுங்கள், தொடர்பு கொள்ளும் விதம், நகைச்சுவை உணர்வு, கெட்ட செய்திகளை எதிர்கொள்ளும் விதம், சத்தம் போடாமை, பாராட்டத்தக்க கையாளல் திறம் ஆகியவை நிறைந்த உங்களுக்கு பிடித்தவரை நினைத்துக் கொள்ளுங்கள்.

இதில் அதிசயம் என்னவென்றால், நீங்கள் சமூகத்தில் மாற்றம் கொண்டுவர உழைத்துக் கொண்டிருக்கும் பொழுது, உங்கள் செயல்கள் உங்களையே, நீங்கள் அறியாது, மாற்றிக் கொண்டிருக்கும்.



அதைப் போலவே அதற்கு எதிர்மறையான, பணியில் நன்முறையில் இல்லாதவர், தொடர்பு கொள்ளவே போராடுபவர், கெட்ட செய்தி வந்தவுடன் அலறுபவர், நகைச்சுவை உணர்வை இழந்தவர்... இவர்களையும் நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் கெட்டவர்கள் கிடையாது. பணியில் போராடுபவர்கள்தான்.

இந்த இருவரையும் அடையாளம் கண்ட பிறகு, அவர்களை மேற்கோளாகக் கொள்ளுங்கள். இந்த இடத்திலிருந்து சவாலான சூழல்களில் ஒரு படி இறங்கி மேற்கோளாகக் கொண்ட நபர்கள் எவ்வாறு இதைக் கையாள்வார்கள் என்று எண்ணிப் பாருங்கள். அப்போது எதைத் தள்ளி எதைச் செய்ய வேண்டும் என உங்களுக்குப் புரியும்,'' என்று கற்பித்தார்

## உறுப்பினர் சேர்க்கை

வருங்கால கவர்னர்களில் ஒருவர் அமெரிக்காவில் உறுப்பினர் சேர்க்கை ஏன் சரிந்தது எனக் கேட்டார். RI இயக்குனர் ஜான் மாத்யூஸ் உறுப்பினர் குறித்த உரையாடல் ஆராயப்பட வேண்டியது என்றார். ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ரோட்டரியினரைக் கேட்டால், அங்கு நிச்சயம் எதிர்பார்ப்பும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் இருக்கும். ஆனால் உறுப்பினர் வகையில் எந்த ரோட்டரியிலும் எதிர்பார்ப்பு இல்லை. நாம் உறுப்பினரை அதிகரிப்பதுடன் அவர்களைத் தக்க வைக்க வேண்டும். மக்கள் முன்பு நம் எதிர்பார்ப்புகளை வைத்து, PETS, GETS வழி பேசும்போது நமது தலைவைர்கள் மற்றும் கவர்னர்களுக்கு புதுச ங்கங்களின் வளர்ச்சி பற்றிய முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்த வேண்டும். ஆனால் இன்று இது நடைபெறுவதில்லை.

பல சங்கத் தலைவர்கள் வேறு யாராவது உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பார்கள். எனக்கு இது சுகமாக உள்ளது என நினைக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரையும் அவர்கள் பணியை செய்ய வைக்க வேண்டும். இதை நாம் அனைவரும் செய்யாவிட்டால் நம்மால் உறுப்பினர்களை அதிகரிக்க முடியாது, என்றார்.

கடந்த 23 ஆண்டுகளில் ரோட்டரியின் உலகளாவிய உறுப்பினர் எண்ணிக்கை 1.2 மில்லியன். ஆனால் சராசரி சங்க எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் 42லிருந்து 34 ஆக குறைந்துள்ளன. எது நம் சங்கத்தை சரிய வைத்தது? புது சங்கம் அமைப்பதோ, அவர்கள் வளர்ச்சியோ பெரும்பான்மையான சங்கங்கள் செய்வதில்லை. பல சங்கங்கள், என்னிடம் 20 நபர்கள் உள்ளனர் இது போதும், என நினைக்கின்றர். எனக்கு அவர்கள் போதும், இதற்கு மேல் வளர எனக்கு விருப்பமில்லை என நினைக்கின்றோம். அது தான் நம் பணியைத் தகர்த்து நம் வளர்ச்சி யையோ இறக்கத்தையோ தீர்மானிக்கும் பெரிய சிக்கல். இந்த சங்கங்கள் 20 நபர்கள் போதும் என நினைப்பது நல்லதல்ல. ஏனெனில் இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு பின் அவர்கள் இருக்க மாட்டார்கள். சங்கத்தை வளர்க்கும் ஒரே வழி தொடர்ந்து வளர்வது தான் என்றார் மாத்யூஸ்.

அடுத்ததாக தலைமையில் ஆளுநரின் பங்கு நிர்வாகம் செய்வதா அல்லது தலைமை பணியாற்றுவதா என்ற கேள்வி இரண்டு தான் என்ற மாத்யூஸ், ஒரு நிறுவனத்தின் அமைப்பைப் பார்த்தால், CEO உயர்வானவர், அவருக்கு அடுத்து நிர்வாகக் குழு, அடுத்து பணியாளர், வாடிக்கையாளர்கள் ஆகியோர் எனவே இது ஒரு முக்கோணம் போன்றது. ரோட்டரி சங்கத்தில் இது எதிர்மறையாக இருக்கும். உறுப்பினர் மிக முக்கியமானவராகவும், நிர்வாகக் குழு, தலைவர் ஆகியோர் அடித் தளத்திலும் இருப்பார்கள், என்று மேலும் விளக்கினார்.

இந்த சங்கங்கள் 20 நபர்கள் போதும் என நினைப்பது நல்லதல்ல. ஏனெனில் இன்றிலிருந்து 20 ஆண்டு களுக்கு பின் அவர்கள் இருக்க மாட்டார்கள்.



*பன்னாட்டு ரோட்டரி இயக்குனர் ஜான் மாத்யூஸ் மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் R ராஜாராம்.*

## மதிக்கத்தக்க நுண்ணறிவு

நேரம் குறித்து அடுத்த பார்வையை ஆளுநர்களுடன் பகிர்ந்து கொண்டார். அமெரிக்க கடற்படை அதிகாரியிலிருந்து தளபதியாக பதவி உயர்வு பெற்று 20 ஆண்டுகள் சிறப்பாக பணி புரிந்தேன். எனக்குப் பதவி உயர்வு தந்த அதிகாரி என் தோளில் கை வைத்து, 'ஜான், இந்த கணம் வரை உன்னால் செய்யக் கூடியவற்றை நான் மதிப்பீடு செய்துள்ளேன். இனி பிறருக்காக நீ செய்வதை வைத்து உன்னை மதிப்பீடு செய்வேன்,' என்றார். வருங்கால ஆளுநர்களும் அதே நிலையில்தான் உள்ளார்கள். சாதிக்க வேண்டியவை நிறைய உள்ளன. ஆனால் கவர்னர் பொறுப்பிற்கு வரும்போது சூழ்நிலைகளை உங்கள் மூலமாக மட்டுமல்லாமல் பிறர் மூலமாக வித்தியாசமாக அணுகும் வாய்ப்பை பெறுவீர்கள்.

மாவட்டத் தலைவராக நீங்கள் சங்கத் தலைவர்களுக்கு உறுப்பினர் வளர்ச்சி, சமூகத் திட்டங்கள் மற்றும் TRF பங்களிப்பிற்கு வழிகாட்ட வேண்டும். இவை எல்லாம் சரி. ஆனால் ஒரு ரோட்டரி தலைவராக நீங்கள் உங்களுக்குப் பின் உள்ளவரை முன்னேற்ற வேண்டும் என்பது முக்கியம். ரோட்டரியின் முன்மாதிரி என்பது நமக்குப் பின்னுள்ளவரை முன்னேற்றுவதே ஆகும். அதை நிறுத்தி விட்டால் ஒட்டுமொத்த இயக்கமும் நின்றுவிடும். அடுத்த சங்கத் தலைவரைச் செய்தித்தாளில் விளம்பரப்படுத்தும் சங்கங்களை நீங்கள் பார்த்துள்ளீர்களா? இது அபத்தமானது. பிற தலைவர்களுக்குச் செய்வதைப் போலவே அவர்களையும் முன்னேற வைப்போம். அவ்வாறுதான் வெற்றிகரமாக பணி செய்ய வேண்டும்.

மாத்யூஸை பாஸ்கர், செய்திமடல்களை வெளியிடுமாறு கூறியதை குறிப்பிட்டு, ''அவர் சில தகவல்களை அச்சிட விரும்பினார் என்றோ அதன் வழி ரோட்டரியினருக்கு ரோட்டரியின் அதிசயத்தை கற்பிக்க விரும்பினார் என்றோ நினைக்கிறீர்களா? அவர்களுக்குக் கதை சொல்ல வேண்டும். வெறுமனே அச்சடித் தால் உங்கள் வாய்ப்பை நீங்கள் இழந்து விடுவீர்கள். ஆனால் அதைப் பயன்படுத்தி மக்களுக்கு ரோட்டரியின் அதிசயத்தைக் காண உதவினால் உங்களுக்குப் பின் உள்ளவர்களை முன்னேற்ற முடியும்,'' என்றார்.

உதாரணமாக, கவர்னர்கள் ரோட்டரியினரிடம் TRF 4 நட்சத்திர மதிப்பை, தொண்டுக்கான கணிப்பில் பெற்றது என்றால் அவர்கள் பெருமைப்படலாம். ஆனால் இந்த அமைப்பு எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என விளக்கி எப்படி 4 நட்சத்திர மதிப்பைப் பெற முடிந்தது? எனவும் கூற வேண்டும். இந்த வேறுபாட்டை உங்களால் உணர முடிந்ததா? எனக் கூறினார். மாத்யூஸ் ஆளுநர்கள் தங்கள் குழுவில் உள்ள பிறருக்கும் தலைமைப் பண்பை வளர்க்க வேண்டும். ஆண்டு முடிவில் இன்று இருப்பதை விட மேம்பட்டிருப்பீர்கள், என்றார்.

## தொடர்ச்சி

அடுத்து தொடர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். ரோட்டரி சந்திக்கும் சவால்களில் தலைமையின் தொடர்ச்சியும் ஒன்று. இதற்கு ஓராண்டு திட்டத்தில் 112 சாட்சிகளை நீங்கள் காணலாம். ஒவ்வொருவரும் பிறரிடம் இல்லாத தனிப்பட்ட திறமை கொண்டவர்கள். கடந்த சில ஆண்டு களில் பல உத்திகளுடன் திட்டங்கள் தீட்டப்பட்டன. ''முதல் முறையாக நீங்கள் ரவி (PRIP K R ரவீந்திரன்) புதிதாக ஒன்றைத் தொடங்கி ஜான் ஜெர்ம் அதைத் தொடர்வதைப் பார்க்கின்றீர்கள். இயான் ரைஸ்லி மற்றும் RIPE பேரி ரசீன் அவர்களின் தொடர்ச்சியைப் பார்த்து அவர்கள் இதை மேற்கொண்டனர். நாமும் நம் மாவட்டத்திற்கு அத்தகைய முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

உலகில் பல பகுதிகளில் IPDG, DG, DGE மற்றும் DGN உடனான தொடர்ச்சியைப் பார்க்கலாம். எனவே மாவட்ட அளவில் கேள்விகள் வரும்போது நீங்கள் மட்டுமல்ல உங்கள் குழுவும் பதில் தரும். DGE. DGN அனுமதிக்கும் போது சரியான பதிலைப் பெற முடியும். உங்களுக்குப் பின்னுள்ளவர் களையும் நீங்கள் முன்னேற்றுவீர்கள். சங்கத்திற்கும் இதுவே தேவை'' என்ற அவர் அப்படி செய்வதால் நீங்கள் சங்கத்தையும் மாவட்டத்தையும் சரியான பயனுள்ள திசையில் செலுத்த முடியும்,'' என்றார்.■

# கிராம மக்களுக்கு மாமோக்ராஃபி

கிரண் ஜெஹ்ரா

அனைத்தையும் இளஞ்சிவப்பு நிறத்தில் மாற்ற அக்டோபருக்காக அனைவரும் காத்திருக்கின்றோம். ஆனால் புற்றுநோய்க்கு எந்த மாதம் பற்றியும் கவலையில்லை. அக்டோபரில் மட்டுமே நாம் புற்றுநோய்க்காக கவனம் செலுத்தக் கூடாது என்றார் D 3030 முன்னாள் கவர்னரும் RC அமராவதி மிட்டௌனின் திட்ட ஒருங்கிணைப்பாளருமான கிஷோர் கேடியா. இச்சங்கம் மாமோக்ராஃபி வாகனம் ஒன்றை பஞ்சாப் ராவ் தேஷ்முக் மருத்துவக் கல்லூரிக்கு அளித்துள்ளது. இந்த வாகனம் மஹாராஷ்ட்ராவின் கிராமங்களுக் குச் சென்று அங்குள்ள மகளிருக்கு மார்பகப் புற்று நோயை கண்டறியவும் சிகிச்சைக்கு வழி வகுக்கவும் பேருதவியாக இருக்கும்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ப்ரதீபா பாட்டில், புனேவின் ராய் கட்டில் ஜனவரி 3 அன்று இதைத் தொடங்கி வைத்தார். ஒரு மாதத் திற்குள் இத்திட்டம் சுமார் 3,000 பெண்களுக்குப் பயன் தந்தது. இந்த வாகனம் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. நவீன மாமோக்ராஃபி கருவிகள் பொருத்தப்பட்டு, காத்திருப்பு வசதி மற்றும் ஆடை அணியும் அறையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ‘‘முதல் உதவி மற்றும் சில நேரத்தில் சிறு அறுவை சிகிச்சைகள், பிள்ளைப்பேறு கூட இவ்வாகனத்தில் மேற்கொள்ள முடியும்’’ என்றார் கேடியா.

புற்றுநோயை எதிர்க்க, தடுப்பு முறைகளும், விரைவாக கண்டறிவதுமே பெண்களுக்கான வாய்ப்பு என்றார் Dr தீபாளி. இவர் கிராமங்களுக்குச் சென்று புற்றுநோய் அபாயத்தில் உள்ளவருக்கு சுகாதரக் கல்வி வழங்கி உதவும் இந்த வாகனத்தின் மருத்துவத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.




மாமோக்ராஃபி வாகன துவக்க விழாவில் முன்னாள் ஜனாதிபதி ப்ரதிபா பாட்டிலுடன் முன்னாள் ஆளுநர்கள் கிஷோர் கேடியா மற்றும் தீபக் ஷிகார்பூர் (D 3131).

மாமோக்ராஃபிற்குப் பதிவு செய்ய, பெண்களுக்கு வாட்ஸ்அப் மற்றும் வாய் வழி செய்தி மூலம் தெரிவிக்கப்படுகின்றனர். சில இடங்களில் மருத்துவமனை அல்லது பள்ளிகளில் இச்செய்தி விளம்பரப்படுத்தப்படும். காலை 9 முதல் மாலை 5 வரை இந்த வாகனம் செயல் பட்டு சுமார் 100 பெண்களுக்குப் பயன் தரும். ‘‘பல பெண்களுக்கு இந்த சோதனை குறித்து தெரிவதில்லை. நாங்கள் கூறியதற்கு பிறகே இது இரத்த சோதனை இல்லை என்பதை அறிவார்கள். சிலர் கடைசி நேரத்தில் வாகனத்தில் உடை மாற்ற கூச்சப்பட்டு பின்வாங்குவர். பெண் மருத்துவராக இருந்தாலும் தொட்டு செய்யும் சோதனைகளுக்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள்,’’ என்கிறார் தீபாளி.

சோதனை நல்லபடி முடிந்த பிறகு நோயாளிகள் மேல் சிகிச்சை க்காக சீர்டி அறக்கட்டளைக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள். அது சங்கத்துடன் இணைந்து சிகிச்சை களை இலவசமாக வழங்குகிறது.

2013–14யில் கவர்னராக இருந்த கேடியாவின் குறிக்கோள் மகளிர் குறித்த திட்டங்களை நிறைவேற்றுவதாக இருந்தது. இவ்வாகனத்திற்கான நிதிகளை இச்சங்கத்தினரிடமிருந்து பெற்று அவருடைய ரூ. 10 லட்சத்தையும் சேர்த்து நிறைவேற்றினார். பணத் தேவையோ, மருத்துவமனைக்குச் செல்ல போக்குவரத்து வசதியோ எது தடையாக இருந்தாலும் எங்கள் பகுதி பெண்கள் வாழ்க்கைக்கான பாதுகாப்பை அடைய நாங்கள் முயற்சி செய்வோம் என்கிறார் கேடியா.■




# எனது ரோட்டரி ஒரு ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

''பாசமும் வேடிக்கையுமான சிறந்த பயணமாக இருந்தது. இந்த நாடு தழுவிய நட்பு வாழ்நாள் முழுவதும் தொடரும்,'' என்கிறார் முன்னாள் ஆளுநர் D 3131 சுபோத் ஜோஷி.

அவர் இந்தியாவில் சுமார் 10,000 கி.மீ, தூரத்தை, 36 ரோட்டரி மாவட்டங்களில் 21 நாட்களில் சுற்றி வரும் 30 உறுப்பினர்களின் கார் பேரணிக்குத் தலைமை வகித்தார். புனேவில் டிசம்பர் 10 அன்று மாவட்ட ஆளுநர் அபய் காகில் கொடியசைத்து இப்பயணம் தொடங்கியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. PRID அசோக் மஹாஜன் மும்பையிலும், TRF அறங்காவலர் சுஷில் குப்தா டில்லியிலும், PRIP P T பிரபாகர் சென்னையிலும் அவர்களைப் பாராட்டிக் கொடியசைத்து வழியனுப்பினர். டிசம்பர் 31ல் தங்கள் பயணத்தை முடித்த அக்குழு புனேவில் சிறப்பான வரவேற்பைப் பெற்றார்கள். மாவட்ட மாநாட்டில் நட்சத்திரம் போல் அனைவரையும் கவர்ந்தார்கள்.



*PRID P T பிரபாகரும் அவரது துணைவி நிளினியும் PDG C R ராஜுவுடன் சென்னையில் கொடியசைத்து கார் பேரணியை வழியனுப்பினர். DGE பாபு பேரம், DGN G சந்திரமோகன், PDG சுபாஷ் ஜோஷி மற்றும் பேரணி குழுவினருடன் உள்ளனர்.*

## பேரணி கருத்து

''இது பொதுமக்களிடம் ரோட்டரி பற்றிய நல்லெண்ணத்தை பெறும் பயிற்சியாகும்: *எனது ரோட்டரி ஒரு ரோட்டரி* என்ற செய்தியை நாங்கள் மக்களிடையே பரப்பினோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மக்கள் மற்றும் ரோட்டரியினரால் வரவேற்கப்பட்டது மகிழ்ச்சி தரும் அனுபவமாக இருந்தது. நாங்கள் சென்ற எல்லா பகுதியிலும் மனம் நெகிழக் கூடிய நினைவுகளைப் பெற்றோம்,'' என்றார் ஜோஷி.

மேலும், இக்குழு பொதுமக்களிடம் சாலை பாதுகாப்பு, ரோட்டரியின் கல்வித் திட்டங்கள், சுகாதாரம், போலியோ ஒழிப்பு முயற்சிகள் ஆகியவை குறித்து பொதுமக்களிடம் அறிவூட்டியது. 'நாங்கள் வழியில் டீக்கடை, உணவகம் என்று எங்கு நிறுத்தினாலும் அங்கு ரோட்டரி போஸ்டரை ஒட்டுவோம். சிறு கிராமங்கள் நகரங்களைக் கடக்கும் போது மக்களிடம் கல்வி குறித்து பேசி குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பூசி போடுவதை வலியுறுத்து வோம். ஓட்டுனர்களிடம் விபத்து களைத் தவிர்க்க விழிப்போடு இருக்குமாறு கூறினோம் என்றார்.

## குழு

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் நாங்கள் ஒவ்வொருவரும் சொந்தமாக ரூ.1 லட்சம் இதன் செலவுகளுக்காக வழங்கினோம். இது ரோட்டரியின் நிதியால் நடத்தப் பெறவில்லை.

D 3131ன் வெவ்வேறு சங்கத்திலிருந்து இவர்கள் கலந்து கொண்டனர். RC பூனாவிலிருந்து கைலாஷ் மோங்காவின் மகன் ராகேஷ் மோங்கா இங்கிலாந்திலிருந்து பேரணிக்காகவே வந்தார். ''இந்த 21 நாட்களும் நாங்கள் நிறைய கற்றோம். மிக்க மகிழ்ச்சியாக இருந்தது,'' என்று RC பூனா சென்டலின் அஜய் சிட்னிஸின் மனைவி தீப்தி கூறினார். பல பேரணியில் கலந்து கொண்ட PDG சுபோத் ஜோஷியின் மகள் ஸ்மிருதி ஜோஷி, ஒவ்வொரு நொடியையும் தான் அனுபவித்ததாகக் கூறினார்.

நாங்கள் சாகசத்தை விரும்பும் குடும்பம் என்றார் ஜோஷி. சமீபத்தில் போலியோவால்

# சென்னையில் பேரணியனர்

பேரணியின் 16ம் நாளில் சென்னையில் *ரோட்டரி நியூஸ்* அலுவலகம் குழுவை வரவேற்றது. PRID பி டி பிராபகர், PDG C R ராஜு, DGE பாபு, DGN G சந்திரமோகன் மற்றும் D 3232ன் பல ரோட்டரி சங்கத்தைச் சார்ந்த ரோட்டரியினர்கள் அவர்களை வரவேற்றனர்.

PRID பிரபாகர் பேரணியினரின் முயற்சியைப் பாராட்டினார். சேவை நிறுவனத்தில் ஒன்றாக இருக்கிறோம். இருப்பினும் நாம் எதற்காக இயங்குகிறோம் எனப் பலருக்குத் தெரிவதில்லை. நைக்கி மற்றும் மெர்சிடிஸ் காரின் லோகோவைச் சராசரி மனிதனிடம் காண்பித்தால் கண்டுபிடித்து விடுவான். அதுவே ரோட்டரியின் சக்கர்த்தைக் காண்பித்தால் பலருக்குத் தெரியாது. பேரணியின் நோக்கத்திற்காகவும், ரோட்டரியின் நற்பெயருக்காகச் சொந்தமாக செலவு செய்ததையும் அவர் பாராட்டினார்.

2015–16ன் சகத் தோழர்களை ஜோஷி பாராட்டினார். அவர்கள் குழுவிற்குத் தங்கும் வசதியை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பாடு செய்தனர். “உதய்பூரில் (டி 3053) 16 படுக்கறை உள்ள அரண்மனையை நாங்கள் தங்க ஏற்பாடு செய்தனர். பிகனரில், PDG அருண் குப்தா 100 கார்களுடன் ரோட்டரி கொடி அசைத்து எங்களை வரவேற்று இதை மாபெரும் பேரணியாக மாற்றினார். ஜோத்பூரில் PDG அனில் பெனிவால் ஆடம்பரமான வரவேற்பையும் PDG சதீஷ் சிங்கல் பானிப்பட்டில் அவரது கல்லூரி விடுதியில் தங்கும் வசதியையும் தந்தனர்.

நாடு முழுதும் நடைபெற்ற, அவரையும் அவர் குழுவையும் கவர்ந்த 100 திட்டங்களின் விவரம் அடங்கிய காபி டேபிள் புத்தகத்தை (அட்டவணை புத்தகம்) ஜோஷி வெளியிட உள்ளார். ரோட்டரியின் திட்டங்களை மக்கள் புரிந்து கொள்ள, தங்களை வரவேற்ற எல்லா சங்கத்திற்கும் நூலகத்திற்கும் அதை வழங்கத் திட்டமிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கான நிதி திரட்டும் ‘இயலாதவர்களுக்காக நடப்போம்’ என்ற இமயமலை மீது ஏறும் 2,000 ரோட்டரியினருக்குத் தலைமையேற்றதை நினைவுக் கூர்ந்தார்.

பெரும்பாலான பேரணியினர் முதல் முறை அப்போது தான் சந்தித்தனர். “இப்போது எங்களுக்கு ஜம்மு முதல் கன்னியாகுமரி வரை நண்பர்கள் உள்ளனர்,” என்றார் ஜோஷி. RC பூனே பாஷன்னைச் சார்ந்த ப்ரதீப் முலேவின் கார் பதான்கோட்டில் லாரியில் அடிப்பட்டது. தவித்துக் கொண்டிருந்த முலேவிற்கு லக்னோ ரோட்டரியினர் பெரிதும் உதவி செய்தனர். விரைவாக காரை சரி செய்ய உதவினர். மூன்று நாட்களில் விசாகப்பட்டினத்தில் அவருக்கு காரைத் தந்தனர். அதேப்போல், குண்டூரில் ஜோஷியின் கார் சிறு விபத்திற்குள்ளானபோது இரு உள்ளூர் ரோட்டரியினர் மெக்கானிக் கடைக்காக அலைந்தார்கள். அன்று கிறிஸ்மஸ் என்பதால் பல கடைகள் மூடப்பட்டிருந்தன. ‘‘11 மணிக்கு நெல்லூரில் காரை கொண்டு தந்தபோது நான் ஆச்சரியப்பட்டேன். இதுதான் ரோட்டரியின் சக்தி. பயணம் முழுவதும் அதை முழுமூச்சாக அனுபவித்தோம்,’’ என்றார் அவர்.



D 3131 *மாநாட்டில் கார் பேரணிக்குழு.*

### விளம்பரம்

பல ரோட்டரி லோகோவுடன் 8 கார்கள் அலங்கரிக்கப்பட்டு எங்கும் இடம்பெற்றன. மக்கள் போக்குவரத்து சந்திப்பில், சுங்கச் சாவடிகளில் என்று பல இடங்களில் எங்களை நிறுத்தினார்கள். ரோட்டரி குறித்து கேட்டார்கள். தொலைக்காட்சியினர் எங்களை பேட்டி எடுத்தனர். செய்தித்தாளிலும் எங்கள் கார் பேரணிப் பற்றி செய்திகள் வந்தன. அது தவிர, எல்லா நாட்களிலும் மாவட்ட வலைதளத்தில் எங்கள் பேரணி குறித்த தகவல்கள் இடம்பெற்றன.■



# புதியதோர் சாதனை

ரோட்டரி நியூஸ் குழு

RC பெர்ஹாம்பூர், D 3262, ஒரு மாபெரும் மக்கள் விழிப்புணர்வு பேரணி நடத்தியது. உலகப் போலியோ தினத்தின் (அக்டோபர் 24) நினைவாக நகரத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளிலிருந்து 1,700 மாணவர்களுடன் இணைந்து இப்பேரணி நடைபெற்றது.

பெர்ஹாம்பூர் ஹாலில் மாணவர்கள் கூடி மனிதக் கால்தடம் ஒன்றை உருவாக்கினர். 132' x 53' அளவுள்ள இந்த உருவம் 34.13 நிமிடங்களில் உருவாக்கப்பட்டது. பல கோண மற்றும் தேனி வகை (Drones) படக்கருவிகள் மூலம் இந்நிகழ்வு பதிவாக்கப்பட்டது.

இத்திட்டத் தலைவர் பிஜெய் பகாரியா, ''இந்த நிகழ்வு 1,729 மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, முந்தைய கின்னஸ் சாதனையான 1,290 நபர்களால் நிகழ்த்தப் பட்டதை விட பெரியது,'' என்று கூறினார். இந்தியாவின் உலக சாதனைத் தொகுப்பு புத்தகம் மற்றும் ஆசிய உலக சாதனைத் தொகுப்பு புத்தக அலுவலர்கள் இந்நிகழ்வை மேற்பார்வையிட்டு இப்புதிய சாதனைக்குச் சான்று வழங்கினர். மற்றும் கின்னஸ் சாதனை புத்தக அலுவலகத்தில் இருந்து சான்றிதழ் கிடைக்க காத்திருக்கின்றோம் என்று பகாரியா கூறினார்.




சங்கத் தலைவர் தபஸ் பாணிக்ரஹி இந்நிகழ்விற்குத் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் ப்ரேம் சந்த் சௌத்ரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் சித்தாந்த் மொஹபத்ரோ, சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ் சந்திரா சௌபட்நாய்க், துணை ஆட்சியர் சித்தார்த் ஸ்வைன், மாநகராட்சி ஆணையர் நிகில் பவன் கல்யாண், ரோட்டரியனர் மற்றும் பிற மாவட்ட அலுவலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.■

# TRF-வுடன் இணைவோம்

ரோட்டரிச் செய்தி குழு



AKS உறுப்பினர் சுத்தி ஜப்பாரை EMGA K P நாகேஷ் கௌரவிக்கிறார். DG சுரேஷ் மாத்யூ, PDG ரெகுநாத், மாவட்ட TRF தலைவர் K பாபுமோன் மற்றும் D 3231 DG ஜவரிலால் ஜெயினும் உள்ளனர்.

சமர்ப்பன் - D 3211ன் மாவட்ட ரோட்டரி அறக்கட்டளை (TRF) கருத்தரங்கம் ஆலப்புழையில், பெருங்கொடையாளர்கள் மற்றும் AKS உறுப்பினர்கள் உள்ளிட்ட 850 ரோட்டரியினர் பங்கேற்புடன் நடைபெற்றது. மாவட்ட TRF தலைவர் K பாபுமோன் தலைமையில் கேரள நிதி அமைச்சர் TM தாமஸ் ஐசக் அவர்கள் இதைத் துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆளுநர் சுரேஷ் மாத்யூ, மாவட்டத்தில் சமூக நலத்திட்டங்களுக்கான பங்களிப்பைச் சுட்டிக் காட்டினார். மாநில அரசின் மருத்துவமனைக்குக் கட்டமைப்பையும் கருவிகளையும் வழங்கும் ‘அர்த்ரம்’ திட்டத்திற்கு ஆதரவளித்து வருகிறோம். சமீபத்தில் 4,500 சதுரடியில் பெண்களுக்கான வார்டை புதுப்பிக்கும் பணி நிறைவடைந்துள்ளது. மாவட்டத்தில் 40 பள்ளிகளில் ரூ.1 கோடி செலவில் கழிப்பறைகள் கட்ட சங்க நிதி ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.25 லட்சத்தை திரட்டி மாமோகிராபி கருவியை நிறுவியும், மற்றொரு பிரிவை ரூ.1.3 கோடி செலவில் கணினி மயமாக்கப்பட்டும் வருகிறது. கடந்த ஆண்டுகளில் ரூ 7 கோடி மதிப்பில் பல குளோபல் கிராண்ட் திட்டத்தைச் செயலாற்றுவதில் இம்மாவட்ட ரோட்டரி முனைப்போடு செயல்படுகிறது என்று கூறினார்.

மாத்யூ, பத்மாவதி மருத்துவமனைத் தலைவர் ரொட்டேரியன் Dr சுமித்ரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்த்தில் கையெழுத்திட்டார். அது 100 இலவச இதய அறுவை சிகிச்சைகளை *ஹ்ருதயதாளம்* என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்வதாகும்.

EMGA KP நாகேஷ், அறக்கட்டளையில் நிதி ஆளுகை, வருமானம், நிறுவனத்திற்கு உதவும் தன்மை உள்ளிட்ட பல பரிமாணங்களை விளக்கினார். வெறும் 20 சதவீத ரோட்டரியினரும் 60 சதவீத சங்கங்களும் ரோட்டரி அறக்கட்டளைக்குப் பங்களிப்பதாகக் குறிப்பிட்டு பெரும்புள்ளிகளை தாராளமாக நன்கொடை வழங்கி 2025க்குள் 2.025 பில்லியன் என்ற TRFன் இலக்கை அடைய உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

RI தெற்காசிய அலுவலகத்தின் (RISAO) பன்னாட்டு நிதி திரட்டல் மேலாளர் சகுந்தலா ராஹா, புது வகையாக நிதியளிப்பதின் தன்மையையும், மாவட்ட மற்றும் குளோபல் கிராண்ட் திட்டம் எப்படி செயல்படும், விண்ணப்பங்கள் எவ்வாறு பரிசீலனை செய்யப்படுகிறது என்பதை விவரித்தார். உறுதி என்பதே தாரக மந்திரம். திட்டங்கள் பல ஆண்டுகளைத் தாண்டி

நற்பணியை செய்து உலகளவில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்றார்.

'ஜாய் ஆப் கிவிங்' குறித்து D 3231 ஆளுநர் ஜவாரிலால் ஜெயினும், 'வாழ்வின் அடித்தளம்' குறித்து D 3142 ன் PDG உல்ஹாஸ் கோலாட்கர் பேசினர். DRFC மற்றும் AKS உறுப்பினர் GA ஜியார்ஜ், AKS உறுப்பினராக இருப்பதன் சலுகைகளையும் மகிழ்ச்சி மற்றும் திருப்தியை அது தருவதையும் உரைத்தார்.

நிதி அமைச்சர் ரோட்டரியினரை, பல குடும்பத்தினருக்கு வாழ்வின் புது அர்த்தத்தை வழங்கியுள்ளதாகக் கூறி, அவர்களது பரந்த திட்டங்களுக்காக பாராட்டினார். பூச்சி க்கொள்ளிகளற்ற அரிசி என்ற நோக்கில் மாவட்டத்தில் REAP (ரோட்டரி ஆற்றல் பெற்ற விவசாய பொருட்கள்) என்ற திட்டத்தின் கீழ் பிஜுமோன் குரியன் தலைமையிலும் PDG KP ராமரந்திரன் நாயர் ஆலோசனைபடியும் இயற்கை அரிசியை 136 ஏக்கரில் பயிரிட உள்ளனர்.



AKS உறுப்பினர் கங்காதர் ஐயரை PDG உல்ஹாஸ் கோலாட்கர் கௌரவிக்கிறார்.

2 புதிய AKS உறுப்பினர் களான RC கழகூட்டத் தின் சுதி ஜபார் மற்றும் RC கிழக்கு ஆலப்புழை தலைவர் கங்காதர ஐயர் இக்கருத்தரங்கில் கௌரவிக்கப் பட்டனர். மேலும் 43 பெருங்கொடை யாளர்களும் பிற நன்கொடையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.■

---

# பாராபங்கி ரோட்டரி கொண்டாடும் மகர சங்கராந்தி

ரோட்டரி செய்திக்குழு



அறுவடை தருணமான இப்பொழுது RC பாராபங்கி, D 3120, ரோட்டரியினர் பரைலீயில் அவர்கள் தத்தெடுத்த விநோபா ஆவசிய பாலிகா வித்யாலயா பள்ளியில் மகர சங்கராந்தியைக் கொண்டாட ஒன்று சேர்ந்தனர். சங்கத் தலைவர் சுதிர் வர்மா ''இது ஒரு நாள் முழுவதும் பள்ளி மாணவியருடன் கழித்த மகிழ்ச்சியான தருணம்,'' என்றார்.

சங்க உறுப்பினர்கள் மாணவியருக்கு உள்ளாடைகள், தரை விரிப்புகள், மதிய உணவுகளைப் பள்ளியில் வழங்கினர். கம்பிளி ஆடைகள் மற்றும் போர்வைகளை பாராகாவுன் என்னும் கிராமத்தில் உள்ள 400 ஏழை மக்களுக்கு வழங்கினர்.■

# ரோட்டரி சர்வதேச வண்ணங்கள்



ரோட்டரி பிரதிநிதிகளும் DGEக்களின் துணைவியர்களும்.

கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சி.







ராஜீவ் சர்மா



கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியில் இந்திய நடனம் ஆடும் நீத்தா ஷெட்டி, புனிதா பாட்டியா மற்றும் வீணா வெங்கடாஜலபதி.



ஒரு கலாச்சார நிகழ்ச்சியில் இந்திய DGEக்கள்.



இத்தாலிய பிரதிநிதியுடன் நந்திதா கங்குலி மற்றும் வீணா வெங்கடாஜலபதி.

வினய் பாட்டியா



DGE ப்ரியேஷ் பண்டாரியும் அவரது துணைவி எல்லோராவும் ரோட்டரி பன்னாட்டு இயக்குநர் C பாஸ்கர், மாலா பாஸ்கர் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் சுஷில் குப்தாவுடன்.



இடது புறத்திலிருந்து: கிரன் சிங்கள், சீமா ஜெயின், ருக்ஷானா அங்கலேசாரியா, அனிதா ஹரி, நந்திதா கங்குலி, எஸ்தர் மற்றும் RIPE பாரி ரெஸின், பிந்து சொகானி, மாலா பாஸ்கர், பபிதா ரோஹாத், புனிதா பாட்டியா மற்றும் நீத்தா ஷெட்டி.



சான் டியாகோ சர்வதேச
கூட்டத்தில் DGEக்கள்.

வினய் பாட்டியா



படங்கள் : மோனிகா லோஸின்ஸ்கா
வடிவமைப்பு : S கிருஷ்ணப் பிரதீஷ்

# ரோட்டரியின் இளஞ்சிங்கம்

*RC ஜெய்பூர் மருகந்தா (D 3054) தலைவர் ரிமிகா சிங்வி RC மான்செஸ்டர் ட்ரெயில்ப்ளேசர் (D1285) தலைவர் மார்டின் ஜூடுடன் பேட்டி*

22 வயதான மார்டின் வில்லியம் ஜூட் ரோட்டரி உலகின் இளமையான தலைவராகக் கருதப்படுகறார்.

ஜூட் நியுசிலாந்திலுள்ள வடத்தீவின் தொகொரோவாவில் பிறந்தார். பந்தயக் குதிரை பயிற்சியாளருக்குப் பிறந்து கேம்ப்ரிட்ஜில் வளர்ந்து, 2012 முதல் இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார். பிறகு புதிதாக தோன்றிய 'மான் செஸ்டர் ட்ரெயில்ப்ளேர்' ரோட்டரி சங்கத்தில் 2014ல் இணைந்து ஒரு வருடத்திற்குள் தலைவர் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்போது ஜூட் ஓல்டாமில் வசித்தபடி மான்செஸ்டர் பிகாடிலி வெயிட்ரோஸ் கிளையில் வாடிக்கையாளர் சேவைத் துறையில் பணிபுரிந்தும், பொருளாதாரம் கணிதம் ஆகியவற்றை திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டும், உலகப் பண்பாட்டு விழா என்ற தன் முதல் நிறுவனத்தை அமைத்தும், உள்நாட்டு அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டும், ரோட்டரியை வழிநடத்திக் கொண்டும் தனது நேரத்தைப் பிரித்து செலவிடுகிறார்.

எனது சமீபத்திய லண்டன் பயணத்தில் மான்செஸ்டரில் ஜூடுடனான உரையாடலின் சிலதுணுக்குகள் பின் வருவன. இப்படிப்பட்ட சந்திப்புகள் ரோட்டரியின் உலகளாவிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வாய்ப்பதுடன் ரோட்டரியின் இலக்கை உலகளவில் இணைந்து அடைய வழி வகுக்கும்.

## ரோட்டரியில் சேர உங்களைத் தூண்டியது எது?

ரோட்டரியினர் உலகம் முழுதும் செய்த அற்புதமான திட்டங்களைப் படித்தபோது நான் தூண்டப்பட்டேன். தனிப்பட்ட முறையில் வறுமையை விரட்டி மக்களுக்கு உதவும் என்னுடைய இலட்சியத்தை அடைய ரோட்டரி எனக்கு உதவுகிறது.



## இந்த வருடத்தின் ரோட்டரித் திட்டங்கள் என்னென்ன?

சங்கத்தில் சில குறிக்கோள்களை வைத்துள்ளோம்

- உறுப்பினர்களை அதிகரிப்பது
- ரோட்டரி அறக்கட்டளைக்காக £2,000 நிதி திரட்டுவது
- மொத்தத்தில் £2,000 நிதியைப் பிற குழுக்களுக்காகத் திரட்டுவது
- உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சேவைகளுக்கு உதவ விரைவான செயல்களை செய்து அதை உறுதியாக அடைவது.

## உங்கள் சங்கத்தின் தற்போதைய திட்டங்கள்?

தற்போது, கானாவில் உள்ள 4 கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத் திற்காக குழாய்கள் அமைக்கும் wow நீர்த் திட்டம் மட்டுமே உள்ளது.

உள்ளூர்ப் பள்ளிகளுக்கு கல்வித்திட்டத்தை மேம்படுத்தியும் வருகிறோம்.





*ரிமிக்கா சிங்வி மற்றும் மார்டின் ஜுடுடன் RC மான்செஸ்டர் ட்ரெயில்ப்ளேசர் உறுப்பினர்கள்.*

## வேறு ஏதாவது முக்கிய திட்டங்கள்?

ரோட்டரி சங்கம் வளர உதவுவதற்கே எனது அடுத்த முன்னுரிமை. தற்போது எங்களுக்கு ரோட்டராக்ட் சங்கம் இல்லை. ஆனால் அதைத் தொடங்க ஆசைப்படுகிறேன். இங்கிலாந்தில் ரோட்டராக்ட் வலுவின்றி உள்ளதால் பிற சங்கங்களைத் தோற்றுவிக்க பெரும் தூண்டுதல் தேவைப்படுகிறது.

## நாம் இணைந்து செயல்படுவோமா?

நாம் இணைந்து நிச்சயம் செயல்படுவோம். உங்கள் பகுதியில் ரோட்டராக்ட் இருந்தால், நாங்கள் தொடங்குவதற்கு குறிப்புகள் தர வேண்டும்.

---

புது முயற்சிகளை விரைவில் பரப்பவும், ரோட்டரியின் செயல்பாடுகளை நல்ல முறையில் மாற்றவும் விரும்புவதால் மக்கள் கவனிக்கிறார்கள்.

---

## இளைய தலைவராக இருப்பதால் உள்ள நன்மை தீமைகள் என்ன?

புது முயற்சிகளை விரைவில் பரப்பவும், ரோட்டரியின் செயல்பாடுகளை நல்ல முறையில் மாற்றவும் விரும்புவதால் மக்கள் கவனிக்கிறார்கள். மேலும் மக்களைக் கையாள்வதும், என் திறமைகளை வளர்ப்பதும் எனக்கு அற்புதமான அனுபவங்கள்.

சமவயது திறமைசாலிகள், இளைஞர்கள் உயர்பதவி பெற தகுதியில்லை என நினைப்பவர்கள், மத்தியில் நான் அவர்கள் நினைப்பது தவறென நிரூபித்து சங்கத்தை இந்த வருடம் வெற்றிகரமாக செயல்படுத்த விரும்புகிறேன்.

## இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

நீங்கள் இருக்குமிடம் விட்டு வெளியேறி ஏதேனும் புதியதைக் கையில் எடுங்கள். புதிய எண்ணம் உங்களுக்கு இருந்தால் பிறருக்குத் தெரிவியுங்கள். மக்களுக்குத் தெரிவித்து உங்களால் இயன்றவரை சிறப்பாக உண்மையை உணர்த்துங்கள். செயல்கள் நிறைந்தவராகுங்கள்; நீங்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குங்கள்.■



PEOPLE OF ACTION

# பள்ளிக்குச் செல்ல மிதிவண்டிகள்

*ரஷிதா பகத்*

டிசம்பர் 19 அன்று புனேயிலிருந்து 20 கி.மி. தொலைவில் உள்ள கலன்வாடியிலுள்ள ஜில்லா பரிஷத் (ஜி ப) பள்ளி திருவிழா கோலம் பூண்டிருந்தது. அருகிலுள்ள பிற பள்ளிகள் உட்பட 108 மாணவியர்கள் ஆலிவ் பச்சை மற்றும் இளஞ்சி வப்பு நிறத்தில் அழகாக பாவாடை, சல்வார் போன்ற சீருடை அணிந்து கூடினர். பெற்றறோரும் ஆசிரியரும் வந்து உற்சாகத்திலும் எதிர்பார்ப்பிலும் திளைத்தனர்.



RC புனே சிவாஜிநகர் தலைவர் விரிண்டா வாளிம்பே, சங்கத்தினருடன் பிரகாசமான இளஞ்சிவப்பு சைக்கிள்களை இக்குழந்தைகளுக்கு கொடுத்த பொழுது அவர்களது முகத்தில் மகிழ்ச்சியையும் உணர்ச்சிகளையும் கண்கூடாகக் காணமுடிந்தது.

தன் மூதாதையர் வாழ்ந்த பகுதிக்குச் சேவை செய்ய விரும்பிய முன்னாள் சங்கத் தலைவர் நிதின் அப்யான்கரால் இது தொடங்கப் பட்டது. 2010 முதல் சங்கம், பல நலத்திட்டங்களை நடத்தி வருகிறது. இந்த சைக்கிள் திட்டம் 2 வருடங்களுக்கு முன்பு 9 சைக்கிள்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 500ஐ தாண்டியுள்ளது என்று விரிண்டா தெரிவித்தார்.

## மேம்படுத்தப்பட்ட வருகைப் பதிவு

இந்தத் திட்டம் தொடங்கப் பட்டது முதல், மாணவியர் வருகை அதிகரித்துள்ளதை ஆசிரியர்கள் காண்கின்றனர். பிற சமூகத்தினரோ, பெண்களோ சைக்கிளைத் திருடுவதைத் தடுப்பதற்காகவே பிரகாசமாக இளஞ்சிவப்பு நிறத்தை சைக்கிள்களுக்குத் தேர்ந்தெடுத்தோம். விவசாயம் போன்ற பிற பணிகளுக்காக இல்லாமல் பள்ளி செல்வதற்காக மட்டுமே இந்த சைக்கிள்கள் பயன்படுத்த வேண்டும் என்று ரோட்டரியினர் சமூகத்தினருக்கு உணர்த்தினர்.

மேலும், கிராமங்களில் உள்ள சிறுமியர்களின் மேம்பாட்டு பற்றி



சங்கம் கவனம் செலுத்த விரும்புகிறது. இந்திய கிராமங்களில் குறிப்பாக மஹாராஷ்டிராவில் பொது போக்குவரத்து, இல்லாமலோ, சிறிய அளவிலோதான் உள்ளன. மாணவர்கள் 5 கி.மி, தூரத்திற்கும் அதிகமாக பள்ளிக்கு நடந்தே செல்ல வேண்டியுள்ளது. இது மாணவியருக்கு பள்ளிச் செல்ல கடினமானதாகும். வனாந்திரப் பாதையில் பல மணி நேரங்கள் அதிகாலையிலோ, மாலையிலோ, மழை மற்றும் குளிர்காலத்திலோ நடப்பது மேலும் கடினமானது, என்று விரிண்டா வருந்தினார்.

ஒரு சில பகுதிகளில் 2 மாணவியர் மட்டுமே பள்ளிக்குச் செல்கின்றனர். ஒருவர் பள்ளிக்குச் செல்ல முடியவில்லையானால் மற்றொருவரும் பாதுகாப்பு கருதிவீட்டிலேயே இருக்க கட்டாயப்படுத்தப்படுகிறார். பெண்மையின் மாதாந்திர நாட்களில் உடல்சோர்வும், பிற நாட்களில் பாதுகாப்பின்மையும் அங்குள்ளன. கிராமங்களில் பலர் பள்ளிப்படிப்பை இதனால் நிறுத்திவிடுகின்றனர்.

**இந்தத் திட்டம் தொடங்கப் பட்டது முதல், மாணவியர் வருகை அதிகரித்துள்ளதை ஆசிரியர்கள் காண்கின்றனர்.**

## நிதி திரட்டல்

எனவே இந்த சைக்கிள் திட்டத்தைத் தொடங்க நினைத்தோம். உலகளாவிய பலநல்லத் திட்டங்களை கடந்த சில வருடங்களாக செய்து வரும் அமெரிக்காவின் நார்மன் ரோட்டரி சங்க உறுப்பினர் வந்தனா நாயக் இதைக் கேள்வியுற்றார். ''6 மாதம் முன்பு கழிவு மேலாண்மை பயிற்சிக்காக புனேவிற்கு வந்த போது நமது திட்டத்தை அறிந்தார். இப்பள்ளிக்கு அழைத்து வந்தபோது அவரை இப்பள்ளி ஈர்த்தது,'' என்றார் விரிண்டா.

அப்போது அன்ஃபர்காட்டன் ஃபண்ட்ஸ் (Unforgotten funds) என்ற அரசு சாரா நிறுவனத்துடன் பணிபுரியும் போது நிதி திரட்டி பல சைக்கிள்களை வழங்குவதாக வாக்களித்தார். அவர்களது வலைதளத்தில் அதைப் பிரசாரம் செய்து 100 சைக்கிள்கள் அளிப்பதற்கான நிதியைத் திரட்டினார். சங்கம் திரட்டிய கூடுதல் நிதியுடன் இப்பகுதி 108 பிரகாசமான இளஞ்சிவப்பு சைக்கிள்களை மாணவியருக்கு வழங்கினர். சங்க உறுப்பினர்கள் மாணவியருக்கு மகிழ்ச்சி ஊட்டும் வகையில் புது சைக்கிள்களை மட்டுமே வழங்கினர்.

குடும்ப நிதி நிலையையும் பள்ளிக்கான தூரத்தையும் கொண்டு சைக்கிள் பெறும் மாணவிகளின் பட்டியலை ஆசிரியர்கள் தயாரித்தனர்.

பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவி அடுத்த மாணவிக்குச் சைக்கிளை வழங்க வேண்டும் என்ற தெளிவோடு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சங்க உறுப்பினர்கள் இப்பகுதி மாணவியருக்கு அதிக சைக்கிள்கள் வழங்க வேண்டியுள்ளதை உணர்ந்து ள்ளனர். புனே சிவாஜிநகர் சங்கம் குறைந்தபட்சம் 1,000 சைக்கிள்களை அதை சுற்றியுள்ள கிராமப் பகுதிக்கு வழங்க விரும்புகின்றனர். ஒரு சைக்கிள் ரூ.4,000 மதிப்புடையது.

### பள்ளி கட்டமைப்பு

அப்யன்கர், ''சங்கம் சில வருடங்களாகவே, பள்ளிக் கட்டடம், கழிவறை, மின்வழிக் கற்றல் கருவிகள், இருக்கைகள் போன்றவற்றை வழங்கி இப்பள்ளிக்காக உழைக்கிறது. வரைப்பட்டிகை (டேப்லட்) வழங்கி ஜி.ப, பள்ளிகளை காகிதமற்ற பள்ளிகளாக்குவதே அடுத்த திட்டமாகும். ரூ 34,000 செலவாகும் இது குளோபல் கிராண்ட் திட்டத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 80 வரைப்பட்டிகை களை மேனிலைப் பள்ளிகள் பெறும். இதை வழங்குபவர்கள் வழி ஆசிரியர்களும், ஆசிரியர்கள் வழி மாணவர்களும் பயிற்சி பெறுவார்கள்,'' என்றார்.

**பிற சமூகத்தினரோ, பெண்களோ சைக்கிளைத் திருடுவதைத் தடுப்பதற்காகவே பிரகாசமாக இளஞ்சிவப்பு நிறத்தை சைக்கிள்களுக்குத் தேர்ந்தெடுத்தோம்.**

விரிண்டா மற்றும் அப்யன்கர், இத்திட்டத்தின் வெற்றிக்கு, மாணவர்கள் மேல் அக்கறை கொண்ட ஆசிரியர்களே பெரும் காரணம் என்றனர். அவர்கள் அர்ப்பணிப்பினால் தான் இத்திட்டம் வெற்றியடைந்தது. தினசரி சைக்கிள் ஓட்டுவதால் மாணவர்கள் ஆரோக்கியம், காலந்தவறாமை, பயண நேரம், ஆகியவை மேம்பட்டு நல்ல மதிப்பெண்கள் எடுப்பதாக ஆசிரியர்கள் கருத்து தெரிவித்ததாக விரிண்டா கூறினார்.

சங்கத் தலைமை கடந்த சில ஆண்டுகளாக ஒத்துழைத்து இத்திட்டத்தை உறுதியாக நடத்தியுள்ளனர். மேலும் அவர் முன்னோர்கள் நடத்திய பணிகளை நானும் அடுத்த 2 தலைவர்களும் தொடர்ந்து செய்வோம். எங்களால் முடிந்தவரை இந்த கிராமத்தின் பல பள்ளிகளில் சேவை செய்ய விரும்பிகிறோம் என்றார்.■




# காசநோயற்ற இந்தியா

ரோட்டரி செய்தி குழு

நாக்பூரில் காசநோயற்ற இந்தியா என்ற தலைப்பில் கருத்தரங்கத்தை RC நாக்பூர் ஃபோர்ட், D 3030, ரோட்டரி இந்திய காசநோய் கட்டுப்பாடு மற்றும் விழிப்புணர்வு குழுவுடனும், காசநோய் மற்றும் நுரையீரல் நோய்க்கு எதிரான யூனியன் அமைப்பும் இணைந்து நடத்தியது.

பன்னாட்டு ரோட்டரியின் முன்னாள் இயக்குனர் YP தாஸ் சிறப்பு விருந்தினராக பங்கேற்க மாவட்ட ஆளுநர் KS ராஜன் தொடங்கி வைத்தார். யூனியனின் தொழில்நுட்ப ஆலோசகர் சிவ் ஸ்ரேஷ்தா, உரையாடல் அமர்வை பார்வையாளர்களுடன் நடத்தி காசநோய் பரவுவதைத் தடுக்க வேண்டிய முறைகளை எடுத்துரைத் தார். அவரது உரையில் கருத்தரங்கம் நடத்துவதற்கான ஆளுனரின் முயற்சிகளைப் பாராட்டினார். இது விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்தில் தேவைப்படும் மாற்றத்தை வரவேற்கும் என்றார். காசநோய் ஒழிப்பில் ரோட்டரி கொண்ட ஈடுபாடும் செயல்முறைகளும் விவாதிக்கப்பட்டன.

ஆளுனர் ராஜன் இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமே ரோட்டரியினரையும், மஹாராஷ்ட்ரா சுகாதார இயக்குனரகத்தின் காசநோய் அலுவலர்களையும் தூண்டுவதே ஆகும்,'' என்றார். RC நாக்பூர் ஃபோர்ட்த் தலைவர் காப்டன் மிலிண்ட் ஹஸதக் வரவேற்புரை ஆற்றினார். சங்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீஹரி சாவா இக்கருத்தரங்கைத் தொகுத்து வழங்கினார். தலைவர் தேர்வு ப்ரவின் தஹகே நன்றியுரை ஆற்றினார்.

# ஸ்தம்பிக்க வைக்கும்

# ஹம்பி

V முத்துக்குமரன்

வாசிப்பது, இணையத்தில் உலாவுவது, சமூக ஊடகத்தில் எந்த அளவு இருந்தாலும் விஜயநகர பேரரசின் தலைநகரமான ஹம்பியின் பண்பாட்டு கம்பீரத்தை உங்களால் உணர முடியாது. இப்போது அது பல இடிபாடுகள், கற்பாறைகள், குகைகள் மற்றும் பாரம்பரிய கட்டமைகளுடன் கிராமமாகத் திகழ்கிறது. ஒரு காலத்தில வளமான பேரரசாக இருந்த அந்த இடம் இன்று பாழடைந்து திகழ்கிறது.

கர்நாடகாவின் மத்திய கிழக்குப் பகுதியில் ஹொஸ்பேட்டையிலிருந்து 12 கி.மி. தொலைவில் விஜயநகரம் துங்கப்பத்திரா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. விஜயநகர அரசு உருவாவதற்கு முன்பே ஹம்பி நகரம் பரபரப்பான தலமாக இருந்தது. அதனால்தான் பேரரசு அதை தலைநகரமாகத் தேர்ந்தெடுத்தது. விருபாக்ஷ சிவன் கோயிலை



கலிங்கப் போரின் வெற்றியை கொண்டாட கிருஷ்ண தேவராயர் 1513ல் கட்டிய கல் தேர்.

பாதாமி சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி 7ம் நூற்றாண்டில் கட்டினார். பின்பு வெற்றி பெற்ற பலர் அதை விரிவாக்கம் செய்தனர். 52 மீட்டர் உயர கோபுரமும் கருவறையில் நடக்கும் ஒரு நாளின் 3 பூஜைகளும் அபிசேகமும் தூரத்தில் உள்ள 1000க் கணக்கான பக்தர்களை ஈர்த்தது. இது பக்தர்களால் தக்ஷிண காசி என்றழைக்கப்படுகிறது.

முதல் முறை வருபவர்கள் கருவறைக்குச் செல்லும் வழியில், வரையப்பட்ட ராமாயண நிகழ்வுகளைக் கூறும் சுவரோவியங்களையும் பிற ஓவியங்களையும் காண வேண்டும். பெண்கள் உட்பட பலர் தரையில் அமர்ந்து சிவலிங்கத்தை நோக்கி மந்திரத்தை உச்சரித்தது ஆச்சரியமாக இருந்தது. ''இது ராகு கால பூஜை. சிவபூஜைக்கு ஏற்ற நேரம்,'' என்றார் எங்கள் வழிகாட்டி ரவிகுமார். ஹம்பியின் பல தகவல்களைக் கூறி வந்தார்.

## கிராமக் கொத்து

கோயிலின் அருகில் மனிதர் வாழ்ந்த இடங்கள் இன்றும் உள்ளன. அதனால்தான் விருபாக்ஷ சந்தை கோபுரத்தின் இருபக்கங்களிலும் உள்ளன. மக்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்கின்றனர். சரியாக சொல்ல வேண்டுமென்றால் இந்த சந்தை சிவன் கோயிலுக்கு முன் 740 மீட்டர் நீலத்தில் 45 மீட்டர் அகலத்தில், 16ம் நூற்றாண்டில் ஒரே பாறையில் செதுக்கப்பட்ட 3 மீட்டர் உயர நந்தி மண்டபத்தை தொடர்ந்து உத்சவ மண்டபத்திற்குச் செல்லும் வழியில் உள்ளது.

அதைப் போலவே அந்தந்த கோயிலுக்கு முன், 500 மீட்டர் நீள கிருஷ்ண சந்தை, 360 மீ. அச்சுத சந்தை, 945 மீ. விட்டல சந்தை மற்றும் ஹசரராமபுர சந்தை ஆகியவற்றையும் பார்த்தோம். ஒரு காலத்தில் வலிமையான கட்டமாக இருந்து அயல்நாட்டு வணிகர்களால் மேம்படுத்தப்பட்ட இது இன்று வெறும் பாழடைந்த கட்டடங்கள்



> விஜயநகரம் என்றழைக்கப்பட்ட ஹம்பி 15ம் நூற்றாண்டில் வாடிகனை அடுத்து உலகின் 2வது வளநகரமாக திகழ்ந்தது. நவீன ஹம்பி வெறும் 25 சதுர கி.மீ. மட்டுமே.

நிறைந்ததாகக் காணப்படுகிறது. பெர்சியா, போர்சுகீசியம் மற்றும் பிற ஐரோப்பிய நாட்டினர் இங்கு தங்கம் மற்றும் ரத்தினங்களை விஜயநகர சந்தையிலிருந்து வாங்கி சென்றதாக எங்கள் வழிகாட்டிக் கூறினார்.

விஜயநகர பேரரசு (1336-1565) பெரும் சாம்ராஜ்யமாக வளர்ந்து 4 பேரரசாகப் பரவி 229 வருடங்களாக ஆட்சி செலுத்திய காலத்தில், தன் அறிவால் பிரபலான கிருஷ்ணதேவராயர் அரசு (1509-29) ஆட்சி பொற்காலமாக இருந்தது. அவர் ஆட்சியில் நாடு கிழக்கு கலிங்கத்திலிருந்து தெற்கு கன்னியாகுமரி வரை விரிந்தது, டெக்கான் பீடபூமியும் இந்திய தீபகற்பமும் இயற்கையான எல்லைகளாக 2 பக்கமும் அமைந்தன.

பின்பு விஜயநகரம் என்றழைக்கப்பட்ட ஹம்பி 15ம் நூற்றாண்டில் வாடிகனை அடுத்து உலகின் 2வது வளநகரமாக திகழ்ந்தது. வரலாற்றாளர்கள் கூறுவதன் படி 650 சதுர கி.மீ. அளவில் 52 லட்ச மக்கள் தொகையுடன் 1500ம் வருஷம் பீஜிங்கிற்கு இரண்டாவது இடத்தில் இருந்தது.

பெருமை வாய்ந்த அதன் வரலாற்றை ஒப்பிடும் போது நவீன ஹம்பி வெறும் 25 சதுர கி.மீ. (அதற்கும் குறையலாம்) அளவில் உயரம் குறைந்த பாறைகள், சிறு குன்றுகள், இடிபாடுகளுடன் காணப்படுகின்றன. இணையற்ற காட்சிகளின் தொகுப்பான இப்பாரம்பரிய கிராமத்தை அனைவரும் தவறாமல் பார்க்க வேண்டும்.

★ கடலகலு கணபதி கோயில்: 4.5 மீ. உயரமுள்ள ஒரே பாறையில் வடிக்கப்பட்ட பிள்ளையாரின்

தோற்றம் பிளக்காத கொண்டைக் கடலைப் போலிருக்கும். இது 15ம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது.

- ★ சசுவேகலு கணபதி: இது 2.4 மீட்டர் உயரமுள்ளது. 1506ல் கடுகைப் போல செதுக்கப்பட்டுள்ளது. சித்தி விநாயகர் என்றழைக்கப்பட்டு இப்போது திறந்த வெளியில் பிரகாசிக்கிறது.
- ★ ஹேமகுடக் கூட்டக் கோவில்: தொடர்ச்சியாக 33 கோயில்கள் மற்றும் மண்டபங்களை 9 – 14 நூற்றாண்டில் கட்டிய இவை விஜயநகர பேரரசிற்கு முன்பே இருந்திருக்க வேண்டும்.
- ★ பாலகிருஷ்ண கோயில்: 1513ல் கிருஷ்ணதேவராயரால் கலிங்கப் போரில் வெற்றி பெற்ற அடுத்த ஆண்டில் கட்டப்பட்டது. இந்தக் கிருஷ்ண விக்கிரகம் உருக்குலைந்து சென்னை எழும்பூரில் அருங்காட்சியகத்தில் உள்ளது.
- ★ லட்சுமி நரசிம்ம கோயில்: விஜயநகர சிற்பங்களில் சிறந்து விளங்குபவை. மூலவர் 6.7 மீட்டர் உயரத்துடன் ஆதிசேசன் மீது அமர்ந்துள்ளார். 7 சிகரங்களில் சிங்க முகம் பொறிக்கப்பட்டு விதானம் போல் அமைந்துள்ளது. விஷ்ணுவின் நான்கு கரங்களும் அவர் மடியில் அமர்ந்த லட்சுமியின் உருவமும் காணவில்லை. அநேகமாக அவை சுல்தானியர் படையெடுப்பில் சிதைக்கப்பட்டிருக்க வேண்டும். 1528ல் கிருஷ்ணதேவராயர் கூறியபடி இப்பெரும் சிலைக்கு கிருஷ்ணபட்டரால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.
- ★ படவிலிங்க கோயில்: 3 மீ. உயரமான சிவலிங்கத்தை ஒரே பாறையில் செதுக்கியுள்ளனர். இதை ஓர் ஏழைப் பெண்(கன்னடத்தில் பதரி) நியமித்ததாகக் கூறுவர்.

## பம்பா தேவி மலைப் பள்ளத்தாக்கு

ஹேமகுடா, மாதங்கா, கந்த மாதவா, ருஷிமுகா, அஞ்சனாத்ரி, மால்யவந்தா மற்றும் ஜம்புநாதா முதலிய பாறை மலைகள் உச்சியிலிருந்து யாத்ரீகர்களும் சுற்றுலா வந்தவர்களும் ரசிக்கும் அழகு வாய்ந்தவை. ஹம்பி, பம்பா க்ஷேத்ரமாக கிருதா யுகத்திலும், கிஷ்கிந்தாவாக திரேதா யுகத்திலும் (ராமாயண காலம்), பாஸ்கர க்ஷேத்ரமாக துவாபர யுகத்திலும் (மகாபாரத காலம்) விஜயநகரமாக கலியுகத்திலும் கருதப்பட்டன. பிரிட்டன் ராஜ்யத்தில் இந்த இடம் ஹம்பி என்றழைக்கப்பட்டது. பம்பா என்றழைக்கப்படும் பார்வதி தேவி துங்கபத்திர நதிக்கரையில் ஹேமகுட மலை மீது சிவனை நோக்கி பல ஆண்டுகள் தவமிருந்தாள். பம்பா என்ற அப்பெயர் ஹம்பி எனக் கன்னடத்தில் திரிந்தது என்று ரவிக்குமார் விளக்கினார்.

அதன் பாரம்பரியம் குறித்து ஓரளவு அறிந்த பிறகு, ரவிக்குமார் இனிக் காணப்போகும் பகுதிக்கு காரில் செல்லவேண்டும் என நினைவூட்டினார். துங்கபத்திரை நதியின் தென்பகுதியில் உள்ள ராயல் சிட்டி நம்மை வரவேற்கிறது. ராட்ச வளைவுகள் அரண்மனைகளைக் (அரசன், அரசி, அவர்கள் சுற்றம்) கொண்டது. சான்றோர்கள் வசிப்பிடம் (17 கட்டங்கள்), இராணுவத் தளம்

### பார்வையிட சிறந்த நேரம்

குளிர் காலம்: நவம்பர் - ஜனவரி

### செல்லும் வழி

ஹொஸ்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து வாடகை வண்டி. ஹொஸ்பேட்டையிலிருந்து 12 கி.மி. தொலைவில் ஹம்பி உள்ளது.



விரூபாக்ஷா கோவில் பக்தர்கள்.

(தண்டநாயக்க மாளிகை) மற்றும் மகாநவமி திப்பா (பெரிய பிரமிட் தளம்) குறித்து அறியும் போது அதைத் திட்டமிட்டு கட்டியதை எண்ணி வியக்க வைக்கிறது.



அழகிய புஷ்கரணி.

### அந்தப் பாரம்பரிய அதிசயங்களின் சில துளிகள்:

- அனந்தபுர மாளிகை ஜனன(மகளிர்) மாளிகை என்றும் அழைக்கப்படும். மரத்தாலான 2 மாடிகளையும் கோடை காலத்தில் தாமரை மாளிகையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வீர ஹரிஹர மற்றும் கிருஷ்ணதேவராய (ரங்க மாளிகை) வழியாக தாமரை மாளிகையை அடைந்தோம். அந்த மாளிகையில் தூண்கள், இஸ்லாமிய பாணியிலும் வளைவுகள், கோபுரங்களும் சிகரங்களும் சமண பாணியிலும் அமைந்துள்ளன.
- யானை கட்டுமிடம் செவ்வக அமைப்பில் கூரையுடன் அரசுக்குரிய ஆடம்பரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.
- அரசு மாளிகை, பல நிர்வாக அலுவலகங்களுடன் விசாலமான தர்பார் 100 தூண்களால் தாங்கப்பட்டுள்ளது. 59,000 சதுர மீட்டரில் உள்ள இந்த மாளிகை தலைநகரத்தின் மையத்தில் 43 கட்டடங்களுடன் உயரமான இரட்டை சுவர்களால் பாதுகாப்புடன் உள்ளது. 1976 – 1986 வரையிலான தொல்லியல் ஆய்வுகள் இம்மாளிகையின் பல புதையுண்ட பாகங்களைக் கண்டறிந்தன. அவர்கள் மேலும் நிலத்தடியில் ரகசிய அறைகள், புஷ்கரணி (புனித நீர்) உட்பட 23 நீர்த் தொட்டிகளை 1980ன் தொடக்கத்தில் வெளிக்கொணர்ந்தனர்.



- 1986ல் காணப்பட்ட வாய்க்கால் கற்களைக் கொண்டு அழகிய புஷ்கரணியைக் கண்டுபிடித்தனர். அது இந்த ராயல் நகரத்திற்கு எளிய ஈர்ப்பு சக்தி மூலம் நீர் வழங்கியுள்ளது. கருங்கல்லால் கட்டப்பட்ட பிரமிட் போல வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 5 மீ. ஆழம், 77 மீ. நீளம் மற்றும் 27 மீ. அகலம் கொண்ட, பொது குளியல் குளம் ஒலிம்பிக் குளத்தை விட 2 மடங்கு பெரியதாக பேரரசின் காலத்தில் பொது மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ளது.
- மஹாநவமி திப்பா ராயல் மாளிகையின் வடகிழக்கில் 35 சதுர மீ. படித்துறையுடன் அரசக் குடும்பத்தினர் கலைவிழாக்களையும் தசரா போன்ற சமய பண்டிகைகளையும் பார்ப்பதற்காக கட்டப்பட்டுள்ளது. மூன்று அடுக்கும் விஜயநகர பாணியில் 8 மீ. உயர பிரமிட் வடிவில் கட்டப்பட்டுள்ளது.
- அரசிகள் குளிப்பதற்காக



தாமரை மஹால்.

இந்தோ-இஸ்லாமிய பாணியில் 8 அடி ஆழமான குளம் உள்ளது. அதில் உள்ள 15x15 நீர்ப் பகுதியில் அரசியரும் அவர் தோழியரும் பொழுதுபோக்கினர்.

## விட்டல கோயில்

விஜயநகர கலைநுட்பத்துடன் உள்ள காட்சிக் கோயிலாகும். 2ம் தேவராயரால் (1422 – 1446) கட்டப்பட்டு கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் பெரும்பகுதிகள்ச கட்டப்பட்டுள்ளன.

56 இசைத்தூண்கள் உள்ள நாட்டிய மண்டபம், கருட மண்டபம், மனித வடிவிலான கருடனின் கற்சிலை முதலியன உள்ள 5 முக்கிய மண்டபங்கள் சுற்றுலா பயணிகள் தவறாமல் காண வேண்டியவை.

கருவறைக்குச் செல்லும் ஐந்து பாதைகளில், 2 பாதைகள் விட்டல கடவுளையும் ருக்மணி தேவியையும் தரிசிக்க வரும் பக்தர்கள் நடப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

## திட்டமிட்ட சதி

ஐந்து பாமணி சுல்தானியர்கள் இணைந்து விஜயநகரத்தை தளிகோடி போரில் (1565) தோற்கடித்தனர். அமைச்சர் ஆலிய ராமராயர் சதாசிவ அரசர் (1542-70) சார்பாக ஆளும்போது கொல்லப்பட்டார். தோற்பதை அறிந்தவுடன் அரசர் ஹம்பியிலிருந்து, 550 யானைகள், 1000 குதிரைகள் மற்றும் பிற அரசுச் செல்வத்துடன் வெளியேறினார். சதாசிவ அரசர் அனந்தபூரில் கடைசி 4 விஜயநகர மரபில் வந்த அறவீடு பேரரசு தோன்றிய பெனகொண்டாவில் பின்வாங்கினார். சுல்தான் படைகள் தலைநகரை 6 மாதங்கள் வரை கொள்ளையிட்டு எரித்தனர். அதன் பிறகு மனிதரற்ற நகரமாக இந்நிலம் விளங்குகிறது என்றார் ஹொஸ்பெட் ரோட்டரியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முனி வாசுதேவ ரெட்டி.

## இன்றைய ஹம்பி

1986ல் யுனெஸ்கோவால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட பிறகுதான் வெளிநாட்டு சுற்றுலா பயணியர் இதைப் பார்க்க வந்தனர். ஆனால் மாநில அரசு உள்ளூர் வாசிகளுக்கு வருமானமீட்டும் வகையில் மேம்படுத்தவேண்டும் என்கிறார் ரவிக்குமார்.

குறுகிய மக்கள் தொகை (10,000க்கும் குறைவு) மற்றும் தொல்லியல் துறையின் கட்டுப்பாடுகளால் இளைஞர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி அல்லது ஆட்டோ ஓட்டுதல் என்ற 2 வருமான வழிகளே உள்ளன. இது அரிதான சுற்றுலாத் தலம் என்பதால் நிரந்தரமான வருவாய் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

*படத்தொகுப்பு : V முத்துக்குமரன்*
*வடிவமைப்பு : S கிருஷ்ண ப்ரதீஷ்*




*PDG R ராமகிருஷ்ணன், PRID P T ப்ரபாகர், DG R ஸ்ரீனிவாசன், அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் தலைவர் Dr P C ரெட்டி முதலியோர் வெற்றி பெற்றவருக்கு விருது வழங்கினர். PDG நடராஜன் நாகோஜீ, DGN G சந்திரமோகன் PDG P T ராம்குமார் மற்றும் DGE பாபு பேரம் ஆகியோரும் உள்ளனர்.*

# ரோட்டரி பந்தயம்

**ஜெய்ஸ்ரீ**

**RC** சென்னை, **D** 3232, பன்னாட்டு ரோட்டரிக் கோப்பைப் பந்தயத்தை மெட்ராஸ் ரேஸ் க்ளபில் (**MRC**) நடத்தியது. இது நம் உறுப்பினர்கள் போலியோவை ஒழித்து மக்களைச் சுகாதாரமாகவும் கல்வி அறிவூட்டியும் வாழ வைத்த சேவைக்காக நன்றி தெரிவிக்கும் வழி என்றார் **MRC** தலைவரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான **R** ராமகிருஷ்ணன். பலர் முதல் முறை இங்கு வந்து பரந்த மைதானத்தையும் நவீன சுற்றுச்சூழலையும் பார்த்து பிரமிப்படைந்தனர்.

ராமகிருஷ்ணன், 1980–84க்குப் பிறகு **MRC**யின் தலைமையேற்பது இரண்டாவது முறை. 1972 முதல் அவர் இப்பந்தயத்தின் சிறந்த மேற்பார்வையாளர். அதே வருடத்தில் அவர் **RC** மெட்ராஸின் உறுப்பினராகி பிரிக்கப்படாத மாவட்டமான 323ல் கவர்னராக 1992–93ல் பணியாற்றினார்.

ரோட்டரி கோப்பை நிகழ்ச்சி மக்களிடையே ரோட்டரி குறித்த நன்மதிப்பைப் ஊக்குவிக்கும். முன்பு நாம் கோப்பையை வழங்கி வந்தோம். அது புத்துயிர் பெற்றதை நினைத்து மகிழ்கிறேன் என்றார் மற்றொரு **MRC** நிர்வாக உறுப்பினர், முன்னாள் ஆளுநர் **P T** ராம்குமார் அவர்கள். அவரது தந்தையும் ராமகிருஷ்ணன் அவர்களும் அப்போலோ தலைவர் **Dr P C** ரெட்டியுடன் இணைந்து செயல்பட்டதை நினைவுக் கூர்ந்தார்.

அப்போலோ மருத்துவமனை நிறுவனர் **Dr** ரெட்டியும் **MRC** குழுவின் உறுப்பினராக, வழக்கமாக வருவார். இந்திய சுகாதார நிலை பற்றி பேசிய அவர், இளைஞர்கள் இதய நோயால் அதிகமாக அவதிப்படுவது வருந்தத்தக்கது என்றார். அமெரிக்கரின் இதயம் 60–70 வருட ஆயுளைக் கொண்டது; இந்தியாவில் இது 25 – 35 ஆக இருப்பது கவலைக்கிடமானது என்று கூறி இந்தியாவில் இதய நோயால் தினமும் 600 நபர்கள் இறப்பதாகக் கூறினார். மக்கள் இதை கவனிக்க வேண்டும். மருத்துவர்கள் வேறு எதையாவது கண்டறிவார்கள் என்ற பயத்தில் பலர் இதய நோய்க்கான சோதனைக்குத் தயங்குகின்றனர். விரைவான சோதனை மிக நல்லது என்பதையோ நாங்கள் உதவத் தயாராக இருப்பதையோ மக்கள் புரிந்து கொள்வதில்லை என்றார்.

**TCS**, காக்னிசண்ட் போன்ற பெருநிறுவனங்கள் இதய சுகாதார முகாம்களை நாடு முழுவதும் நடத்துவதை ரெட்டி பாராட்டினார். உடனடியாக இந்நிகழ்வில் இருந்த **PRID P T** ப்ரபாகர், ரோட்டரி எங்கு எவ்வாறு உதவ முடியும் எனக் கேட்டு ரோட்டரியின் ஆதரவைத் தெரிவித்தார். அவர் மேலும் ரோட்டரி போலியோ ஒழிப்பை நிறைவேற்றியதையும் குறிப்பிட்டார். ''ரோட்டரியின் சிறந்த பணியை பற்றி எனக்குத் தெரியும். உங்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் மிக்க மகிழ்ச்சி,'' என்றார் **Dr** ரெட்டி.■

# பள்ளி பெண்களுக்கு விளையாட்டு வசதி

V முத்துக்குமரன்



முகப்பேர் அரசுப்பள்ளிச் சிறுமிகள் தங்கள் ஆசிரியர்களுடன் புதிய விளையாட்டு மைதானத்தில்.

RC சென்னை மிட் சிட்டி, D 3232, தத்தெடுத்த, கிழக்கு முகப்பேர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி இப்போது 200 மீட்டர் தடகள பாதையுடன் மிளிர்கிறது. முன்பு பாழடைந்த கட்டடமாக இருந்த பள்ளிக்கு இச்சங்கம் முன்னதாக சுத்தமான மைதானம், 4 கழிப்பறைக் கட்டடம், மதிய உணவிற்கான புது சமையலறை, விளையாட்டு உள்ளரங்கம், மின் ஆய்வகம், நூல்கள் நிறைந்த நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவற்றை கொடுத்திருந்தனர்.

பெண் குழந்தை முன்னேற்றத் திட்டத்தின் கீழ், சங்கம் முதலில் (2007-2008) கழிப்பறையைக் கட்டியது. பின்னர் மாநில அரசுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் அதை முன்மாதிரி பள்ளியாக்கும் பல வசதிகளை செய்தது.

மெதுவாக கல்வித் தரம் உயர்த்தப் பட்டது; பழைய கட்டடத்திற்கு பதில் ரூ. 1.4 கோடி செலவில் டிசம்பர் 2016ல் இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முகப்பேர் பள்ளிப் பணி தலைவர் L அசோக் அவர்களால் தொடங்கப்பட்ட புதிய ரோட்டரி கட்டடம் இடம்பெற்றது. விளையாட்டு வசதி உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துவதுடன் அதைப் பராமரிக்கும் பணியையும் செய்யும் தீவிர சமூக சேவையே நோக்கமாகும் என்றார் ரோட்டரி ஒருங்கிணைப்பாளரும் ஆசிரியருமான S முழுமதி.

இப்பள்ளி 12ம் வகுப்பு வரையிலான மேனிலைப் பள்ளியாக உயர்த்தப்பட விண்ணப்பித்துள்ளது. மேலும் 2 மடங்காக 800 மாணவியரை சேர்க்கவும் முன்மொழிந்துள்ளது.

தரமானக் கல்வியை ஏழைக் குழந்தைகளுக்கு வழங்க, சங்க உறுப்பினர்களின் துணைவியர், ஆசிரியர்களிடயே குழுவை ஏற்படுத்தி பள்ளியைத் தரமாக நிர்வகிக்கவும் மேம்படுத்தவும் செய்தனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த புதிய விளையாட்டு வசதி மூலம் மாவட்ட கூடைப்பந்து சாம்பியன் S செம்பருத்தி (9 வகுப்பு) மற்றும் அவர் தோழி V கங்காதேவி போன்றோர் விளையாட்டுத் திறனை மேம்படுத்த முடியும்.

மாவட்ட ஆளுநர் R ஸ்ரீனிவாசன், சங்கத்தையும் ஆசிரியர்களையும் அவர்கள் அர்ப்பணிப்பிற்காகவும் உற்சாகத்திற்காகவும் பாராட்டினார். மேலும் RC சென்னை மிட்சிட்டி ரோட்டரியினரையும் பாராட்டினார்.

சட்டமன்ற உறுப்பினர் V அலெக்சாண்டர் தடகளப் பாதையைத் தொடங்கி வைத்து, மனித சேவைத் திட்டங்களுக்காக ரோட்டரியினரைப் பாராட்டினார். சங்கத் தலைவர் தீபக் ராஜேந்திரன் இதுவரை பள்ளிக்காக ரூ.2.5 கோடி செலவானதையும், அவை நன்கொடை மற்றும் உறுப்பினர்களின் தொடர்பினாலும் திரட்டப்பட்டதாகக் கூறினார்.

எப்பென்டொர்ஃப் இந்தியா ரூ.19 லட்ச மதிப்புள்ள விளையாட்டு தடகளப் பாதையைக் கட்ட நிதியளித்துள்ளது.■

# இயலாமையை எளிமையாக்க வாகனம்

ரோட்டரி குழுச் செய்தி




மாவட்ட ஆளுநர் P M சிவசங்கரன் ஸ்கூட்டியை மஹேஸ்வரியிடம் வழங்குகிறார். முன்னாள் ஆளுநர் ஜார்ஜ் சுந்தர்ராஜ் அவர்களும், அவரின் துணைவி ப்ரிஸ்ஸில்லா மற்றும் சங்க உறுப்பினர்களும் உள்ளனர்.

போலியோவால் பாதிக்கப்பட்ட மஹேஸ்வரி (20), RC தாராபுரத்தின் முன்னாள் தலைவர் SSK தியாகராஜனிடம் வேண்டியபடி, வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் பயணிப்பதற்கு ஒரு புது ஸ்கூட்டியைப் பெற்றார். ரோட்டரியினர் அவரின் குறைபாட்டிற்கு ஏற்றபடி வடிவமைத்த இருசக்கர வாகனத்தை, மாவட்ட ஆளுநர் P M சிவசங்கரன் அவர்கள் முன்னிலையில் உலகப் போலியோ தினத்தன்று வழங்கினர்.

ரோட்டரியினர் தந்த வாகனத்தால் தாராபுரத்தில் ஜெராக்ஸ் கடையில் பணிபுரியும் மஹேஸ்வரி மகிழ்ச்சியடைந்தாள். தன் பயணத்தை எளிதாகவும் சுகமாகவும் அமைக்க அவர்கள் தந்த இந்த வாகனம் உதவும் எனக் கூறி ரோட்டரியினரைப் புகழ்ந்தாள். மேலும், ''நம் நாட்டிலிருந்து போலியோவை ஒழிக்கப் பாடுப்படும் ரோட்டரிக்கு நன்றிகள். இந்த வைரஸ் மூலம் எந்தக் குழந்தையும் பக்கவாதத்தால் பாதிக்கப்படமாட்டார்கள் என நினைக்கும்போது நிறைவாக உள்ளது,'' என ஆனந்தக் கண்ணீருடன் கூறினாள்.

மேலும் ரோட்டரியனர் போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் பங்கு, சுற்றுப்புற சுகாதாரம் என்பவற்றை மக்களிடையே விழிப்புணர்வூட்ட பேரணியும் நடத்தினர்.

## பள்ளியில் கை கழுவும் வசதி

பள்ளி மாணவருக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்து அறிவூட்டுவதில் இச்சங்கம் ஆர்வத்துடன் பணியாற்றுகிறது. N சின்னசாமி மாநகராட்சி மேல்நிலை பள்ளியில் கை கழுவும் நிலையங்கள் அமைத்துள்ளது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நன்றிகளாலும் உற்சாகத்தாலும் புத்துணர்ச்சி பெற்ற சங்கத் தலைவைர் S ஈஸ்வரன் இந்த WinS திட்டத்தை மேலும் பல அரசுப்பள்ளிகளில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளார். அவர், ''இத்திட்டத்திற்கு சுமார் ரூ.60,000 செலவாகும். ஏறத்தாழ 500 மாணவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்துவதை எண்ணி நாங்கள் மகிழ்கிறோம். 4 பஞ்சாயத்து பள்ளிகளிலும் இவ்வசதியை வழங்கும் பணிகள் நடைபெறுகின்றன,'' என்றார்.

ஈரோடு ரொட்டரியன் P S சரவண சுப்பையா, இந்த கை கழுவும் வசதியை ரூ.10,000 சலுகை விலையில் வழங்கினார். ரொட்டேரியினர் கை கழுவுதல் மற்றும் தனிப்பட்ட சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை மாணர்களுக்கு அவ்வப்போது வழங்கி வருகின்றார். ''இது வரை ஏறத்தாழ 15 பள்ளிகளில் 850 மாணவர்கள் நம் WinS திட்டத்தால் பயனடைகின்றனர்'' என்று ஈஸ்வரன் கூறினார்.

சங்க செயலாளர் M காளிதாஸ் சங்கம் செய்து வரும் சிலத் திட்டங்களைப் பட்டியலிட்டார். அதில் குடியிருப்பு பகுதிகளில் ரூ. 50,000 மதிப்புள்ள விளையாட்டு மையம் அமைப்பது, முதியோர் இல்லத்திற்கு சென்று பார்வையிடுவது, முதியோர்களுக்கு பயன்படும் பொருட்கள், பரிசுகள் மற்றும் ஊட்டச்சத்து உணவுகளை வழங்கி மகிழ்விப்பது, பள்ளி மாணவர்களுக்கு பள்ளிப் பைகள், மதிய உணவு டப்பாக்கள் வழங்குவது என்பனவும் இதில் அடங்கும்.■



பள்ளியில் கை கழுவும் வசதியின் துவக்க விழாவில் ஆளுநர் சிவசங்கரன்.

# தெற்காசிய அலுவலக செய்தி

தெற்காசிய ஆர் ஐ அலவலகத்திலிருந்து (RISAO) முக்கியத் செய்திகள் மற்றும் காலக்கெடு விவரங்கள்:

- 4 மற்றும் 6A மண்டல சங்கங்களுக்கு இயக்குனருக் கான மின் முறை தேர்தல் 1.3.2018 தேதிக்குள் நடத்த வேண்டும். மின் முறை வாக்களிப்பிற்கான இணைய முகவரி அந்தந்த சங்கத் தலைவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு அனுப்பப்பட் டுள்ளது. மேலும் விவரங்களுக்கு corporate.governance@rotary.org மின்னஞ்சல் அனுப்பவும்
- ஜனவரி 2018 க்கான சங்க விவரப்பட்டியல் www.rotary.org வலைதளத்தில் உள்ளது. உங்கள் சங்க விவரப்பட்டியலைப் பார்க்க, My Rotary–'Manage'–'Club Administration' என்று வரிசைப்படி கிளிக் செய்யவும். செலுத்த வேண்டிய தொகை '*Payment due upon receipt*' என்ற இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு நிதி கண்ணாவை Nidhi.Khanna@rotary.org என்ற முகவரியில் தொடர்வு கொள்ளவும்.
- ஜூலை 2017க்கான கட்டணம் செலுத்தாததால் நிறுத்தப்பட்ட சங்கங்கள் பின்வருவனவற்றைக் கொடுத்து நிறுத்தப்பட்ட 150 நாட்களுக்குள் புதுப்பித்துக் கொள்ளலாம்.
- இறுதிநாள் வரையிலான பாக்கித் தொகை
- உறுப்பினர் சந்தாத் தொகை.
- உறுப்பினருக்கு $30 வீதம் 18% GST உடன் அபராதம்
- திரும்ப பணியில் ஈடுபடு வதற்கான விண்ணப்பம் அனுமதி நிறுத்தப்பட்ட இறுதி தேதியிலிருந்து 150 நாட்களுக்குப் பின் இச்சலுகை இருக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.
- வருமான வரியின் 80G பிரிவில் சலுகையை விரும்பும் இந்திய கொடையாளர்கள் 31.3.18 க்குள் நன்கொடை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். www.rotaryfoundationindia.org மற்றும் www.rotary.org இணையத்தில் இந்திய ரூபாயில் நன்கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### காலக்கெடு நெருங்குவதற்கான கவனம்:

- சங்க அலுவலர்கள் 28.2.18 அன்று இணையதளத்தின் மூலம் தங்கள் பெயர்களை RI யின் அலுவலக விவரத் தொகுப்பில் பதிவு செய்து கொள்ள கேட்கப்படுகிறார்கள். சங்கம் குறித்த தகவலுக்கு data-rotary.org என்ற வலைதளத்தை அணுகவும்.
- பன்னாட்டு ரோட்டரி மாநாட்டில் பங்கேற்க முன்பதிவிற்கான 10% தள்ளுபடி 31.3.18 தேதிக்குள் http://www.riconvention.org/en/toronto/register வலைதளத்தில் பதிவு செய்யவும்.■

# ரோட்டரி புத்தகங்கள்

ரோட்டரி செய்தி குழு




ரோட்டரி மாவட்டம் 3211யிலிருந்து இரு ரோட்டரியினர் எழுதிய 2 புத்தகங்கள்.

N பாஸ்கரன் பிள்ளை, *நோ யுவர் ரோட்டரி* (Know your Rotary), என்ற நூலை ரோட்டரியின் தொடக்கம் முதல் பல்வேறு தலைவர்களின் கொள்கை, RYLA மாநாடுகள், விருதுகள், COL, நிதி உள்ளிட்ட எல்லா அம்சத்துடனும் தகவல்களுடனும் எழுதியுள்ளார். PRIP ராஜேந்திர சாபு, ''இது ரோட்டரி தகவல்கள் மட்டுமல்ல, ரோட்டரியின் பொறுப்பையும், அன்புப் பணிகளையும் தெரிவிக்கும் தயாரிப்பு. இது ரோட்டரியின் மாணவர்/பயிற்சியாளருக்கு சிறந்த மேற்கோள் தொகுப்பு என்று தன் முன்னுரையில் பாராட்டியுள்ளார்.

விலை: ரூ.399. மின்னஞ்சல்: *bhaskaranpillain@gmail.com*; அலைபேசி: 9847157170.




*ரோட்டரி ப்ரோடோகால் அண்ட் டெகரம்* (Rotary Protocol and Decorum) என்ற நூலை RC ஆலப்புழையின் முன்னாள் தலைவரும் மாவட்ட ப்ரோட்டோகால் குழுவின் தலைவருமான டாமி ஈபன் எழுதியுள்ளார். இதில் ரோட்டரிக் கூட்டத்தின் நெறிமுறைகளையும், சங்கத்தின் பெருமையைப் பாதிக்கும் தடுமாற்றத்தைத் தவிர்க்கும் முறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் சில தகவல்கள் மலையாளத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது 'அனுபவத்தில் பிறந்து மதிப்புடன் கடந்து செல்வதைக் கூறும் முழுமையான நூலாகும்' என்று RC ஆலப்புழையின் P.O. தாமஸ் அவர்கள் கூறியுள்ளார்.

விலை: ரூ. 50. மின்னஞ்சல்: *tomieapen@yahoo.com*; அலைபேசி: 9447799689.■

# நட்சத்திரங்களை நோக்கிய பயணம்

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி மாவட்டம் 3250, *சித்தரே* என்னும் தங்கள் மாநாட்டை டில்லியில் கொண்டாடினர். இயக்குனர் C பாஸ்கர், அவர் மனைவி மாலா மற்றும் ரோட்டரி அறக்கட்டளைத் தலைவர் சுஷில் குப்தா ஆகியோர் முன்னிலையில் இந்த விழா நடந்தது. பன்னாட்டு தலைவரின் பிரதிநிதியாக D 3232 முன்னாள் ஆளுநர் JB காம்தார் கலந்து கொண்டார்.

பாட்னாவில் புற்றுநோய் கண்டறியும் மையம், முஸஃபர்பூரில் கண்திரை சிகிச்சை மையம் மற்றும் கொடர்மாவில் டயாலிஸிஸ் மையம் ஆகிய மூன்று சேவைத் திட்டங்கள் இம்மாநாட்டில் தொடங்கப்பட்டன. மாவட்ட ஆளுநர் விவேக்குமார், இந்தத் திட்டங்களை குளோபல் க்ராண்ட்ஸ் மூலம் செய்வதாகவும், குறிப்பாக குறைபிரசவத்தில் கண் குறைபாடுடன் பிறந்த குழந்தைகளுக்குக் கண்திரை மையம் உதவும் எனவும், மேலும் இது பிஹாரில் உள்ள ஆறு ரோட்டரி கண் மருத்துவமனைகளால் பரிந்துரைக்கப்பட்டு சேவையாற்றும் எனவும் கூறினார்.

இம்முயற்சியை இயக்குனர் பாஸ்கர் பாராட்டினார்.

மேலும் இந்த மாவட்டம் D 3012ல் உள்ள RC பில்குவாவிற்கு ரோட்டரி பவன் மற்றும் நோயியல் மையத்தை உ.பி.யில் அமைப்பதற்காக ரூ.1 லட்சத்தை வழங்கியுள்ளது.



RID C பாஸ்கர், RIPR J B காம்தார் மற்றும் மிட்டி சாங் மற்ற பார்வையாளர்களுடன்.



*DG விவேக் குமார், RID C பாஸ்கர், RIPR J B காம்தார் மற்றும் Rtn ப்ரகதி சின்ஹா அவர்கள் முன்னிலையில் விழாவை துவக்கி வைக்கிறார்.*

மாக்சேசே விருது பெற்ற ஷாந்தா சின்ஹா, ஷிவ் கேரா ஆன்மீக குரு ரிஷி நித்யப்ரக்யா போன்ற பேச்சாளர்கள் பார்வையாளர்களைத் தன் பேச்சால் கவர்ந்தனர். RI யின் ரோட்டராக்ட் இன்ட்ராக்ட் குழு மற்றும் D 5170வின் சிலிகான் வேலியில் உள்ள ரோட்டரி மின்சங்கத்தின் முன்னாள் தலைவருமான மிட்டி சாங், ரோட்டரி மீதுள்ள ஈடுபாடு எவ்வாறு தன் சுய வளர்ச்சிக்கு உதவியது என உறையாற்றினார். அவர் 2005ல் இன்ட்ராக் டராக இருந்து, 2007ல் பொறுப்பான ரோட்டராக் டராகவும் இறுதியில் 2016ல் மின் சங்கத்தின் தோற்றுவிப்பாளராகவும் உயர்ந்தவர்.

இது ஒரு ஆரோக்கியமான நிகழ்வு, என்று அறங்காவலர் குப்தா, கடைசி நாளில் கூடப் பார்வையாளர் நிரம்பியதைக் கண்டு வியந்தார் எனக் கூறியபோது நான் மிகவும் மகிழ்ந்தேன். இது போன்ற நிகழ்வுகளால் தான் நாம் மேலும் ஒன்றிணைக்கப்பட்டு நட்சத்திரங்களை அடையும் ஊக்கத்தைப் பெறுகிறோம் என்று கூறிய விவேக் குமார் இம்மாநாட்டின் வெற்றியைத் தொகுத்து உரைத்தார்.■

# புத்தொளி பெற்ற பள்ளி

ஜெய்ஸ்ரீ

கோடை கால நீண்ட விடுமுறைக்குப் பிறகு பள்ளியின் முதல் நாளில், புதுவண்ணப்பூச்சு, புதுப்பொலிவுடன் கரும்பலகை, புது நூல்கள் சேர்க்கப்பட்ட நூலகம் மற்றும் புது விளையாட்டு சாதனங்கள் இவற்றைப் பார்த்து பரவசப்பட்டதை நினைத்துப் பாருங்கள்.

RC சிலிகுரி மையத் தலைவர், D 3240, அமித் மரோடியா அவர்கள், ஒரு பள்ளியானது மாணவருக்கு ஆர்வத்தைத் தூண்டி கல்வி கற்கும் ஆர்வத்தைத் தக்க வைக்குமளவு மாணவர்களை ஈர்க்கும் விதமாக தோன்ற வேண்டும் என்கிறார்.

மரோடியா, மோசமாக இருந்த புத்த பாரதி பூபன் மோகன் வித்யாமந்திர், சிலிகுரி அரசுப் பள்ளியை மீண்டும் உயிர்த்தெழச் செய்த சமீபத்திய வெற்றியின் மூலக்காரணமாவார். ‘‘ஒவ்வொரு காலையும் இந்தப் பள்ளி வழியாக என் அலுவலகத்திற்குச் செல்லும்போது இதன் பரிதாப நிலை என்னை உறுத்திக் கொண்டே இருக்கும். ஒருநாள் சங்கச் செயலர் பிரேம் அகர்வால் மற்றும் சமூக சேவை சேர் பிகாஷ் அகர்வால் ஆகியோருடன் இப்பள்ளிக்கு உதவும் நோக்கோடு சென்றோம்.

இந்தப் பள்ளியில் 3 மாற்றுத்திறனாளிகள் உட்பட வெறும் 50 மாணவர்களும் 6 ஆசிரியர்களும் உள்ளனர். வண்ணம் அழிந்த நிலை, இடிந்த மதில்சுவர் மற்றும் எல்லா இடங்களிலும் காட்டுக் களைகளுடன் அப்பள்ளி இருந்தது.

ரோட்டரியின் உதவிக்கரத்தை பள்ளி முதல்வர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, பள்ளியை புதுப்பிக்கும் பணிக்கான ஆரம்ப வேளைகளை துவக்கப்பள்ளிகள் சங்கத்தலைவர் பிரதீப் பட்டாச்சார்யா மற்றும் தொகுதி கவுன்சிலர் கமல் அகர்வாலுடன் மெற்கொண்டார்.

ரோட்டரியினர் இதற்கென ஒரு குழு அமைத்தனர். பங்கஜ் அகர்வால், அஜய் கோயல், கோபால் அகர்வால், பவன் அகர்வால், கன்ஷ்யாம் மற்றும் தீபக் அகர்வால் ஆகியோருடனான அக்குழு அக்டோபர் முதல் வாரத்தில் பள்ளியின் தேவைகளை அறிந்த பிறகு புதுப்பித்தல் பணியை மேற்கொண்டனர்.

மதில் சுவர், பிரகாசமான நீல நிறப் பூச்சு, புதிய தரை, புது நூல்களுடன் நூலகம், பச்சை நிறப் பலகை களுடன் வகுப்பறைகள், வண்ண விளக்கப்படம்,



இப்பொழுதும் அப்பொழுதும்: புதுப்பிக்கப்பட்ட பள்ளி, (வலது பக்கத்தில்) பள்ளியின் பழைய பரிதாப நிலை.

ரோட்டரியினர் குழந்தைகளுக்காக பள்ளியில் ஓவியப் போட்டி நடத்தினர்.




குழந்தைகளுக்காக புது இருக்கைகள், மேசைகள் எனப் பள்ளி விரைவில் புதுப்பொலிவு பெற்றது. விளையாட்டு மைதானத்தில் இருந்த களைகள் நீக்கப்பட்டு புது விளையாட்டு சாதனங்கள், தண்ணீர் வசதியுடன் 2 கழிப்பறைகள் மற்றும் கை கழுவுமிடங்கள் அமைக்கப்பட்டன. குழந்தைகளுக்காக ரோட்டரியினர் கணினி ஆய்வுக்கூடத்தையும் அமைத்தனர். ரோட்டரி உறுப்பினர்களும் மற்றும் சங்க நிதியிலிருந்து ரூ.5 லட்சத்திற்கு இந்தப் புதுப்பித்தல் பணி நிறைவடைந்தது.

தொகுதி உறுப்பினரால் நவம்பர் 12 ஆம் தேதி இந்தப் பள்ளி அதிகாரப் பூர்வமாகத் தொடங்கப் பட்டது. மரோடியா,

மாணவர்களின் சேர்க்கை பெரும் சவாலாக இருந்த நிலை மாறி அடுத்த கல்வியாண்டிற்காக இப்பொழுதே பள்ளியில் சேர்க்க அதிக அளவில் ஆர்வம் காட்டுவதாக பள்ளி முதல்வர் பெருமையுடன் கூறினார்.



''இது மாணவர்களுக்கு நம்முடைய குழந்தைகள் தினப் பரிசு. அவர்களின் முகத்தில் இந்த உற்சாகமும் பிரமிப்பும் நாம் நேசிக்கக்கூடியவை'' என்று மகிழ்ச்சிப் பொங்க கூறினார். மாணவர்களின் சேர்க்கை பெரும் சவாலாக இருந்த நிலை மாறி அடுத்த கல்வியாண்டிற்காக இப்பொழுதே பள்ளியில் சேர்க்க அதிக அளவில் ஆர்வம் காட்டுவதாக பள்ளி முதல்வர் பெருமையுடன் கூறினார். ■

# கைகளை எதிர்பார்க்கும் கைத்தறி

கிரண் ஜெஹ்ரா



RID C பாஸ்கர், TRF அறங்காவலர் சுஷில் குப்தா மற்றும் DG ரவி சௌத்ரி 'ரேம்ப் வாக்' பங்கேற்பாளர்களுடன்.



D 3011 ரோட்டரியினர் இந்திய கைத்தறியின் பண்பாடிற்கு அடைக்கலம் கொடுக்கும் விதத்தில், வசீகரமாக மாவட்ட ரோட்டரி அமைப்பின் ஆண்டு விழாவை நடத்தினார்கள். DG ரவி சௌத்ரி மற்றும் அவர் மனைவி ரிது குருகிராமில் தானா-பானா என்று பெயரிட்ட இந்நிகழ்வை ஆதரித்து பல்வேறு இந்திய கைத்தறிகளையும் நெசவாளர்களையும் ஊக்குவித்தனர்.

PDG ரூபக் ஜெயின் கவர்னாராக இருந்தபோது (1996-97) இதுபோன்ற நிகழ்ச்சியை முன்பு நடத்தினார். பல்வேறு மாநிலத்திலிருந்து கைத்தறிகளை கொண்டு வந்து, தலைவர்கள், உதவி கவர்னர்கள் மற்றும் அவர் துணைவியர் 'ராம்ப் வாக்' நடத்தி அவற்றைக் காட்சிப்படுத்தினர். அதைப் பற்றி பேசிய DG ரவி சௌத்ரி, ''ரோட்டரியினரும் அவர் துணைவியரும் இந்திய கைத்தறியின் பழம்பெருமையைப் பறை சாற்றும் சிறப்பான பணியை செய்துள்ளனர்'' என்றார்.

இத்துறை, நாட்டின் அப்பழுக்கற்ற திறனை உலகிற்கு வெளிப்படுத்துவதுடன், இந்திய கிராமப்புறங்களில் விவசாயத்திற்கு அடுத்து 2ம் பெரிய வேலைவாய்ப்பை தருவதையும் வெளிப்படுத்தும். ''ஒட்டுமொத்த நாகரிக வர்த்தகமும் நெசவாளர்களை நம்பியே உள்ளன. இருந்தும் நெசவாளர்கள் மங்குவது வருந்த வேண்டியது. இந்நேரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அக்கலையை பாதுகாக்கவில்லை என்றால் அது முற்றிலும் அழிந்துவிடும்'' என்றார் சௌத்ரி.







*ஒட்டுமொத்த நாகரிக வர்த்தகமும் நெசவாளர்களை நம்பியே உள்ளன. இருந்தும் நெசவாளர்கள் மங்கும் நிலை வருந்தும்படி உள்ளது.*

இந்நிகழ்ச்சி கரு, இயக்கம், வெளிப்பாடு ஆகியவற்றிற்காக பாராட்டப்பட்டது. இந்தியக் கைத்தறிகளைக் காட்சிப்படுத்தும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக RID C பாஸ்கரும், அறங்காவலர் சுஷில் குப்தாவும் பங்கேற்றனர். அடுத்த கவர்னர்கள் இதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். சென்னை மண்டல மாநாட்டில் இந்த நிகழ்ச்சியை மீண்டும் நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

நம் பண்பாடான கைத்தறித் தொழிலையே நாம் இப்படி முன்னிலைப்படுத்த வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்பட்டார் சௌதரி. ''கைத்தறி நிறுவனத்திற்கு நம் ஆதரவு தேவை. ரோட்டரியினராக இருந்து சிறு அளவில் நாம் செயல்படுவோம்.'' என்றார்.

காதி, மங்களகிரி காட்டன், டஸ்ஸர் பட்டு, இக்கட், பட்டோலா, கட்ச் எம்ப்ராய்டரி, ஃபுல்காரி, பைத்தானி ப்ரோகேட், முகா பட்டு போன்ற சில கைத்தறிகள் இதில் காட்சிப்படுத்தப்பட்டன.■

# இந்த வருடத்தின் முதல் வாசிப்பு

சந்தியா ராவ்

இரு நாவலுக்கான கதைக்கருவும் மோதல் - ஸ்ரீலங்கா குறித்து ஒன்று, வியட்நாம் குறித்து மற்றொன்று.

இந்த வருடம் அறிமுகமாகிய இரு புத்தகங்களும் மோதல் குறித்தே அமைந்தது வியப்பாக உள்ளது. தற்செயலாகவே அமைந்த இது ஒருவேளை 'போரில் பயனில்லை' என்பது குறித்த என் ஆழ்மன ஆசையின் வெளிப்பாடாக இருக்கலாம்.

*ஏ லாங் வாட்ச், வார் காபிடிவிடி அண்ட் ரிடர்ன் இன் ஸ்ரீலங்கா* படைத்தலைவர் அஜித் போயகோடா என்பவர் சுனிலா கலபதிக்குக் கூறியதைப் போல அமைந்துள்ளது. போயகோடா LTTE (விடுதலை புலிகள்)-ஆல் எட்டு ஆண்டுகள் சிறைபிடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா ராணுவ உயரதிகாரி. அவர் விடுவிக்கப்பட்டபோது கடற்படையிலிருந்து நம்பிக்கை துரோக குற்றச்சாட்டிற்காக கட்டாய ஓய்வு பெற்றார். அதன் பிறகு அவர் எழுதிய புத்தகத்தில் அவர் கடற்படையில் சேர்ந்தது, உயர்பதவிகளைப் பெற்றது, LTTEயினரால் சிறைபட்டது, அவர்கள் கட்டுப்பாட்டில் பல ஆண்டுகள் கழித்தது, அவர்களுடன் உரையாடியது மற்றும் எஞ்சிய அனுபவங்களைத் தொகுத்துள்ளார்.

இரண்டாவது புத்தகம், 1990ல் பாஓ நின் (நிஜ பெயர் ஹோஆங் ஆவ் ஃபுங்) எழுதிய பிரசுரமாகிய *தி சாரோ ஆஃப் வார்*. இந்நூல் அமெரிக்கர்கள் வியட்நாம் போரைக் சுட்டுவதையும் வியட்நாமியர் அமெரிக்கப் போரைக் சுட்டுவதையும் மரபு மாறாமல் தெரிவிக்கின்றது.

அனுபவத்தின் அடிப்படையில் ஒரு கட்டுக்கதையாக ஆசிரியர் இதை எழுதியுள்ளார். கதாநாயகன் கீன் போரில் இருந்த காலத்தையும், தற்போது 1969ல் தன்னோடு இறந்த 500 படைவீரர்களின் ஆன்மாக்கள் துயரத்தைச் சுத்தப்படுத்துவதையும் இந்நூல் கூறுகிறது. அப்போது பிழைத்த பத்து நபர்களில் இவரும் ஒருவர்.

'சாகரவர்தனே' என்ற ஸ்ரீலங்கா கடற்படையின் பெரிய கப்பல் எல்டிடியினரால் மூழ்கடிக்கப்பட்ட போது போயகோடா அக்கப்பலின் தலைவராக இருந்தார். அவரும் அவரது உதவியாளர் விஜிதாவும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர் எல்டிடியினருக்கு பேரம் பேசும் கருவியாக இருந்தாலும் ஸ்ரீலங்கா அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. சிறைகைதிகளை மாற்றிக் கொள்ளும் பேச்சுவார்த்தை மூலம் போயகோடா மற்றும் விஜிதாவை விடுவிக்க மொத்தம் 8 வருடங்களாகின. போயகோடா மற்றும் விடுதலைப் புலிகளுடன் நடந்த உரையின் மூலம் விடுதலைப் புலிகளின் சிந்தனையை நாம் அறியலாம். அவர் மரியாதையுடன் நடத்தப்பட்டிருந்தாலும், தனித்திருந்த காலம் மற்றும் பல துன்பங்களைக் அவர் அனுபவித் திருக்கிறிார். கோபமோ, கசப்புத்தன்மையோ வெறுப்போ அவர் கொண்டிருக்கவில்லை. அவர் எளிமையானவர் மற்றும் தத்து வவாதி. பலர் அவரை, எதிரிகளிடம் பரிதாபப்படும் *ஸ்டாக்ஹோம் சின்ட்ரோம்* நோய் தாக்கியதாகக் கருதினர்.

2016 ஜூலையில், *தி வையர்* நூலில் அவருடைய *தி ரிஸ்க்ஸ் ஆப் டெஸ்டிமனி: மெமரிஸ் ஆப் காபிடவிடி வித் தி தமிழ் டைகர்ஸ்* என்ற கட்டுரையை வெளியிட்டார். சுனிலா கலபதி அதில், ''இந்தக் கதையை சொல்ல வெகு நேரமாகும். எனவே தான் வெளிப்படையாகக் கூறமுடியாதவற்றை ஐந்து வருடங்கள் உழைத்து நூலாகத் தந்தேன். இது ஸ்ரீலங்கா போரில் 8 ஆண்டுகள் சிறைபிடிக்கப்பட்ட கடற்படைத் தலைவர் தான் குறைத்து மதிப்பிடப்பட்டதையும், அதை ஏற்றுக்கொண்ட தன்மை குறித்தும் கூறிய நினைவுகள். அவருடைய ஏற்புநிலை வியக்கத்தக்கது. மக்கள் அவர் ஸ்டாக்ஹோமால் பாதிக்கப்பட்டாரா எனக் கேட்டவுடன், நான் இது அந்தப் படைத்தலைவனின் நகைச்சுவை உணர்வு என்று கூறுவேன். அவரோ, ''ஒருவேளை இருக்கலாம்'' எனக் கூறி சிரிப்பார். அவரோ நானோ எப்படி அறிவோம்? கேள்வியைக் கேட்ட மக்களை விட எங்களால் இதைக் கண்டிறிய முடியாது'' என்று எழுதியுள்ளார்.

போயகோடா ''புலிகள் மிருகத்தனமானவர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்குப் பலர் சாட்சி; சாட்சிகள் பலர் இன்று இல்லை. என் அனுபவம் அந்தளவு மோச மில்லை. எனவே என்னை யாரும் நம்புவதில்லை,'' என்று கூறுகிறார். இந்த புத்தம் போரின் மறுபக்கத்தையும் விவரிக்கிறது. உதாரணமாக, ''சிறைப்பட்ட முதல்நாளில் 'ஸ்க், ஸ்க்' என்று ஜன்னல் வழியே ஒரு சத்தம் கேட்டது. அங்கு ஒருவர் என்னை அழைத்து நேரத்தை அறிய முயன்றார். என்னால் நம்பமுடியவில்லை. இது



வரை என்னை யாரும் இப்படி அழைத்ததில்லை. நான் காவலரைப் பொருட்படுத்தாமல் இருக்க முயற்சித்தேன், என் இரத்தம் கொதித்தது. அவரை நோக்கி, அதிகாரியை அழைப்பதற்கு ஒரு முறை உள்ளது. நான் ஸ்ரீலங்காவின் கடற்படைத் தளபதி என்றேன். அவர் புருவத்தை உயர்த்தி, நீங்கள் ஸ்ரீலங்காவின் கடற்படைக்குத் தான் தளபதி — இங்கு இல்லை — இங்கு நீங்கள் தமிழ் ஈழக் கைதி என்றார். அவர் அறியாமலேயே கோவத்தால் அவர் துப்பாக்கி என்னை நோக்கியது. அந்த ஸ்ரீதரன் என்ற காவலர், எனக்கு முதல் அடிப்படைப் பாடத்தைக் கற்றுத் தந்ததற்காக நன்றி கூறிகிறேன். உலகில் மனிதனாய் வாழ்வதும் சிறைக்கைதியாய் வாழ்வதும் வித்தியாசமானது. இதை நான் விரைவாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

அவரது விளக்கங்கள் ஆசிரியரின் நுண்ணறிவால் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் நேர்த்தியாக தொகுக்கப்பட்டது. போயகோடாவின் விவாதங்கள் பாரபட்சமற்று காரணத்துடன், மதிநுட்பத்துடன் அமைந்துள்ளது. சான்றாக அவர் விடுதலையின் போது, அவரிடமிருந்து விடுவிக்கப்பட்ட போது எங்களைப் பார்க்க கடினமாகத் தான் இருக்கும். மோகன் என்பவரின் தாய் அவரிடம், ''நீ மற்றவர்களிடமிருந்து விடுதலையை எதிர்பார்த்து, உன் சொந்த சுதந்திரத்தை இழந்து விட்டாய்'' எனக் கூறியது எனக்கு நினைவில் உள்ளது. பல்வேறு பணிகளில் எல்டிடியினரில் சேர்ந்தவர்களுள் பதின்பருவத்தினரும் பலர். இது தீவிரவாதத்தின் திறந்த மனப்பான்மை. ஆனால் முடிவில் ஒருவரின் காரணத்திற்காக பலர் வாழ்க்கையை இழக்க நேரிடும். அதனால்தான் நான் முப்பது வருட சண்டை எதுவும் சாதிக்காது என நம்புகிறேன். எல்டிடியினர் அவரது இலட்சியத்தை வேறு வகையில் 10 வருடங்களில் சாதிக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் 10 வருடத்திற்கு மேல் ஆதரவு பெறுவது எவ்வளவு எளிதாக உள்ளது என நினைத்துப் பாருங்கள். சுயமாக எழுந்த தீவிரவாதம் மக்களின் ஆதரவை நீடித்து வைத்திருப்பதில் எவ்வளவு கடினம்? இந்த புத்தகம் ஸ்ரீலங்காவை சூறையாடிய போர் குறித்த பார்வையைத் தருகிறது.

1976ம் ஆண்டு சென்ட்ரல் ஹைலாந்தில், யா க்ரோங் போகோ நதிக்கரையில் போர்க்களத்தின் வடபக்கத்தில் தொலைந்த சடலங்களைத் தேடும் குழுவினர் வறண்ட காலத்தை நோக்கியிருந்தனர். இப்படித்தான் *தி சாரோ ஆப் வார்* நூல் தொடங்குகிறது. குழந்தை பருவ நினைவுகள், பசுமை, வீரர் குழு, ஏக்கத்துடன் அன்பு, மழை வேண்டுதல், பசியுள்ள வீடு, இழந்த குடும்பங்கள், துப்பாக்கிகள், இரத்தம் எனக் கடந்த காலத்தையும் இது விளக்குகிறது. ஒரு நாவலாக இது பலவற்றைக் கொண்டிருந்தாலும், இதன் பக்கங்கள் வெறும் 227 மட்டும்தான். இது நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு ஆசிரியரின் அனுபவத்துடன், கதாநாயகனின் தொடர்ந்து இணைவதும் பிரிவதுமான நிகழ்வுகள், நினைவுகளிலிருந்து சண்டைக்கு நகர்வது, வாழ்க்கையின் கடந்தகாலம் மற்றும் நிகழ்காலம் என்று இந்நாவல் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அவருடைய சோதனைக் கட்டுரைகள், சிறுகதைகள், குறுநாவல்களுக்கு அடுத்தபடியாக படைவீரராக இறுதி சாகசத்தை உணர்த்தவும் இந்நாவல் எழுந்துள்ளது. ஆர்வத்துடனும் அதே நேரத்தில் வாழ்க்கையின் சவால்கள் நிறைந்த நேரத்தையும் இந்நாவல் குறிப்பிடுகிறது. இதை எழுதும்போது அவர் பித்துப் பிடித்தது போலவே காணப்பட்டார். அவருக்கு உதவ தப்பிப்பதோ, காப்பாற்றுபவரோ அங்கு இல்லை. அவர் தனியாகவே எழுதும் சவாலை ஏற்று வீரரின் இறுதிப் பணியாக நிறைவேற்றினார்.

40 வருடங்களுக்கும் மேல் தொடர்ந்த போரின் விளைவு நிலத்திலோ நினைவிலோ, அருங்காட்சியகத்திலோ, வரலாற்று நூலிலோ மட்டுமல்லாமல், மனதிலும் வியட்நாமின் காற்றிலும் நிறைந்துள்ளது. 2006ம் ஆண்டில் *தி கார்டியன்* என்ற நாளிதழில் சுசேன் கோல்டன்பெர்க், பாஓ நின் இன்னொரு நூலான *ஸ்டெட்பி* எழுதியதன் பிறகும் ஏன், மீண்டும் வெளியிடவில்லை, என விவாதித்தார். அவர். ''நான்




அனைத்தையும் ஒப்பிட்டு கடந்த காலத்தில் எழுதினேன். அது முன்பு போல் இயற்கையாக இல்லை,'' என்றார். இது வரை அவர் வேறொரு நாவலையும் வெளியிடவில்லை.

கோல்டன்பெர்க் நின் நாவலை வெளியிட்டபோது, ''எந்த நாவலாசிரியருக்கும் போரின் கொடுமையையும், வியட்நாமின் தலைமுறைகளை அதன் சேதம் பாதித்ததையும் எழுதுத் துணிவிருக்காது,'' என்றார். ''பெரும்பான்மையான நாவல்கள் வியட்நாம் போர் வீரர்களை கதாநாயகர்களாகப் பாராட்டுமே தவிர போரில் அவர்களின் உள்மனம் குறித்து வெளியிட்டதில்லை. ''நேர்மையாக வெளிப்படையாக போரின் பாதிப்பைக் கூறினார். ஏனெனில் இது போர் வீரர்களால் விரும்பப்படுவது — இதன் மொழிப்பெயர்ப்பைப் படிக்கும் அமெரிக்க வீரர்கள் உட்பட — மேலும் வியட்நாம் அதிகாரம் எழுத்தாளர் சங்கத்தைக் கண்டித்தமை உட்பட.'' இது முதலில் *தி டெஸ்டினி ஆப் லவ்* என்று வெளியிடப்பட்டது.

சிலநேரம் இந்நாவலை நோக்கும்போது ஓர் அற்புத உணர்வேற்படும் என்றாலும், ஒவ்வொரு பக்கமும் இரத்தமும் சதையுமான உண்மை என்பது உணர்வு வழி கசியும். முதலில் கம்யூனிஸ்ட் கட்சியால் தடை செய்யப்பட்டதைப் போலவே இன்றும் அது பாதித்துள்ளது. எழுத்தாளர்கள் பலர் கூறுவதைப் போலவே உண்மையை ஜீரணிப்பது மிகக் கடினம். புத்தகங்கள் அத்தகைய உண்மையை வெளிப்படுத்துகிறது. ■

# சிறந்த வகுப்பறை செயல்திறனுக்காக

*ரோட்டரி செய்தி குழு*

ஆஸ்திரேலியாவின் RILMன் சான்று பெற்ற க்ளோபல் எஜுகேஷன் சொல்யுஷன்ஸ் (GES) மற்றும் மும்பையைச் சார்ந்த இந்திய தொழிற்கல்வி மற்றும் முன்னேற்றக் குழுவுடன் இணைந்து, RC சேலம் (D 2982), மூன்று நாள் ஆசிரியர் பயிற்சி முகாம் ஒன்றை சேலத்தில் நடத்தியது. அப்பகுதியிலுள்ள சுமார் 100 அரசுப் பள்ளி ஆசிரியர் இதில் பங்கேற்றனர். DG தர்மேஷ் படேல் இந்நிகழ்வை துவக்கி வைத்தார்.

GESன் CEO ராக்கெல் ஷ்ராஃப் மற்றும் அந்நிறுவன இயக்குனர் ஜீவன் D' குன்ஹா, அங்கு கல்லூரியின் முதல்வரும் ரொட்டேரியனுமான G தொல்காப்பிய அரசு, CII–சேலம் துணைத்தலைவர் D ரமேஷ் குமார், RC சேலம் கேலக்ஸித் தலைவர் G செந்தில்குமார் ஆகியோர் மாவட்ட TEACH குழுவிற்கு, இலக்கை நிர்ணயித்து அதை அடைய உதவியதாக சங்கத் தலைவர் R வெங்கடாசலபதி கூறினார்.

ஸ்மார்ட் வகுப்பில் ஆசிரியர்கள் தங்களுக்கான பணியை அறிய வேண்டும். பாடத்திற்கான வீடியோவைக் காண்பித்தால் மட்டுமே பணி நிறைவடையாது. வகுப்பில் உரையாடி குழந்தைகளுக்குப் புரிய வைக்க வேண்டும் எனத் தொடர்ந்தார். இப்பயிற்சி அவர்களுக்குத் தங்கள் பங்களிப்பை உணர்த்தி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் சிறப்பான வகுப்பை உறுதி செய்யவும் உதவியது. சஹாதேவபுரம் அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் லட்சுமி, ''இது மதிப்பு மிக்க திட்டம்; இங்கு உற்சாகத்துடன் கற்றதைப் பின்பற்றினால் நிச்சயம் வகுப்பறை சூழலை மேம்படுத்த முடியும்'' என்றார்.■



*GESன் CEO ராக்கெல் ஷ்ராஃப் ஆசிரியர்களுடன், உரையாடல்.*

---

டொரண்டோ கன்வென்ஷன்

# இசையை ரசிப்போம்

*ராண்டி ட்ரஸ்ஸின்*

டொரண்டோவில் ஒரு துடிப்பான இசைக்காட்சி நிகழ உள்ளது. அதில் எல்லா விதமான களங்கள், விளையாட் டரங்கம் முதல் மதுவகம் வரை, ஒவ்வொரு இசை வகைகளும் சிறப்பாக இடம்பெறும். 2018ல் ரோட்டரியின் பன்னாட்டு பேரவைக்காக வரும் ஜூன் 23 முதல் 27 அந்நகரத்திற்கு வரும்போது அங்கு நிகழும் இசையை நேரடியாக கேட்டு இன்புறுங்கள்.

கம்பீரமான மாசே ஹாலில் பாரம்பரிய இசையுடன் தற்காலத்திய இசையும் இணைந்து இசை நிகழ்ச்சி கள் நடைபெறும். 1982ம் ஆண்டு வரை மாசே ஹாலே டொரண்டோ சிம்பனி இசைக்குழுவின் இல்லமாக இருந்தது. பின்னர் அது புதிதாகக் கட்டப்பட்ட ராய் தாம்ஸன் ஹாலிற்கு மாறினர்.

ஜூன் 28 அன்று பேரவைக் கூட்டத்திற்கு பிறகு அரெத்தா ஃப்ரான்க்லின் சோனி சென்டர் சென்று கலைகளை நிகழ்த்த உள்ளார்.



ஹார்ஷூ டாவரன் என்பது அந்நகரத்தின் பிரபலமான சிறு நிகழ்விடமாகும். 1947ல் திறக்கப்பட்டது முதல் பிரபலமான பலர் தங்கள் பணி தொடக்க த்தில் 'தி ரோலிங் ஸ்டோன்', 'தி போலிஸ்' மற்றும் 'வில்லே நெல்சன்' உள்ளிட்டவற்றை அதன் மேடையில் நிகழ்த்தியுள்ளனர்.

ஜாஸ் இசை விரும்பிகள் ஜாஸ் பிஸ்ட்ரோ நேர்த்தி உணவுடனான இசைநிகழ்வை அறிந்து கொள்ளலாம். தி ரெக்ஸ் என்ற பத்தாண்டு பழமையான விடுதியின், மதுவகம் மற்றும் உணவகத்தில் ஜாஸ் மற்றும் புளூஸ் இசையை ரசிக்கலாம். லத்தீன் இசையை விருப்புவர்கள் லுலா லவுஞ்சில் லத்தீனின் உணவிடத்தில் கூடலாம்.

சால்சா பயிற்றுனர்கள் அங்கு வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவுகளில் கற்பிப்பார்கள். முன்பதிவுக்கான சிறப்பு தள்ளுபடி மார்ச் 31 அன்று நிறைவடையும்.

கூடுதல் தகவலுக்கு riconvention.org என்ற தளத்தைப் பார்வையிடுங்கள்.

– தி ரொட்டேரியன்

# கைதிகளுக்கு ஆர்செனிக்கற்ற நீர்

கிரண் ஜெஹ்ரா



**இடது புறத்திலிருந்து :** *சிறையின் நீர் சுத்திகரிப்புக் கருவி துவக்க விழாவில் RC முர்ஷிதாபாத் தலைவர் Dr ரவி, D 3291 ஆளுநர் ப்ரோஜோ கோபால் குண்டு, பேராம்பூர் மத்திய சீர்திருத்த விடுதியின் கண்காணிப்காளர் TR புடியா, மற்றும் RC டோலிகஞ்ச் தலைவர் சைலென் பௌமிக்.*

கைதிகள் நலம் குறித்து பேசும்போது, நாம் ஏன் அவர்களுக்குப் பாதுகாப் பான நீரை தரக்கூடாது? எனக் கேட்கிறார் RC தொலிகஞ்ச், D 3291, தலைவர் சைலென் போமிக் கேட்டார். பேராம்பூர் மத்திய சீர்திருத்த விடுதியில், D 3291ன் RC முர்ஷிதாபாத் மற்றும் கொல்கத்தா அனீர் வாட்டர் மெஷனரி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, நீர் சுத்திகரிப்பை ஏற்படுத்தியதை இவ்வாறு குறிப்பிட்டார். முன்னதாக சிறையில் கைதிகள் நேரடியாக குழாயிலிருந்து வரும் நீரை அருந்து வார்கள். அதில் நிறைந்திருக்கும் ஆர்செனிக், தோல், நுரையீரல், சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீரகப் புற்றுநோய் ஆகியவற்றை ஏற்படுத்தும். அத்துடன் தோலில் நிறமாற்றத்தையும் தடிப்பையும் ஏற்படுத்தும் என்றார் சிக்கிம் அரசின் கிராம மேலாண்மை முன்னேற்றத் துறையின் தொழில்நுட்ப ஆலோசகர் போமிக்.

சிக்கிம் மற்றும் மேற்கு வங்காளத் தின் பெரும்பகுதிகள் தூய்மையான குடி நீர் இல்லாமல் உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டினார். ஜெர்மனியில் நீர் சுத்திகரிப்பு மற்றும் மேலாண்மை குறித்த கல்வி அவருக்கு தன் மாநில கிராமத்தில் தூய்மையான குடிநீர் வழங்குவதற்கு உதவியது என்றார்.

2002ல் அவர் ஆய்வகம் மற்றும் மேம்பாட்டு மையத்தையும் தான் பயிற்சி பெற்ற ஜெர்மன் தொழில்நுட்பத்தை இந்தியாவிற்கேற்றபடி நிறுவியும், ஜெர்மனியர் பயன்படுத்தும் உறிஞ்சும் தொழில்நுட்பத்தை உள் நாட்டுச் சூழலுக்கேற்றபடி மாற்றியும் அமைத்தார். ஏனெனில், நீரின் தன்மை மற்றும் ஆர்செ னிக்கின் அளவு ஆகியன ஜெர்மன் நீரிலிருந்து இங்கு வேறுபடும் என்கிறார். வெற்றிகரமான ஆய்வுக்குப் பின்னர் அவர் ரோட்டரி மூலம் அந்தத் தொழில்நுட்பத்தை சமுதாயத்திற்கு பயன்படச் செய்தார். ''சங்கத் தலைவர் என்ற முறையில் நான் என் உறுப்பினர்களைக் கேட்டபோது அவர்கள் ஒப்புக்கொண்டனர். அடுத்து நாம் நீர் சுத்திகரிப்பு எந்திரத்தை நம் பகுதியிலுள்ள பிற பள்ளிகள் மற்றும் மருத்துவமனையில் நிறுவ உள்ளோம்,'' என்றார்.

சீர்திருத்த விடுதியின் மேற்பார்வையாளர் நீர் சுத்திகரிப்பை நிறுவிய தற்குப் பிறகு, சுகாதாரமற்ற நீரை அருந்துவதால் கைதிகளுக்கு ஏற்படும் வயிற்றுப் பிரச்சனை மற்றும் பிற நலக்குறைவு பெருமளவு குறைந்திருப்பதாகத் தெரிவித்தார்.■

நான் ஏன் ஒருநாள் உயர்ந்தும் ஒருநாள் தாழ்ந்தும் உணர்கிறேன் என்று உணர்ச்சி வசப்பட்ட பதின்பருத்தினர் ஒருவர் வருந்தினார். அவர் தந்தை 'சுமகனே, இது உன் வளர்ச்சியின் ஒரு பங்கு. ஒரு பறவை தன் இறகை மடித்து விரிக்கவில்லை என்றால் அது பறக்க முடியாது" என்று அறிவுறுத்தினார். சுயமரியாதையின் ஏற்ற இறக்கத்தை வாழ்வின் பலமுறை சந்திக்காதவர் யார்? நமக்குக் கிடைக்கும் பணியுயர்வு, மதிப்பு, புகழ் என ராக்கெட்டை போல சுயமரியாதையை மேலோங்கி நினைக்கச் செய்கின்றன. பணியிழப்பு, பொருளாதாரப் பின்னடைவு, விமர்சனம், ஆகியன நீரில் இட்ட கற்கள் போல் மூழ்கச் செய்கின்றன.

ஒவ்வொரு முறை சுயமரியாதை கிடைக்கும் போது நாம் கடவுளை உணர்கிறோம். ஒவ்வொரு முறை சுயமரியாதை தவறும்போது மோசமான மனிதரை உணர்கிறோம். நம் மன இறகை புகழுக்கும் பணிவுக்குமாய் சிறகடிக்கும்போது நம்மைக் குறித்து உயர்ந்த மதிப்பைப் பெறுகிறோம். அந்நேரத்தில் அந்த தந்தை கூறியதை போல் நெகிழ்வாக நம்மால் இருக்கக்கூடும். நாம் வளர்கிறோம்.

எல்லா உணர்வுகளையும் தெய்வபக்தியிடம் பணிந்து விட்டுவிட்டால் எல்லாம் நன்மையாகவே அமையும். உணர்வுகள் நம்மிடையே தக்க வைக்கும்போது பிரச்சினைகள் எழும். அனுபவங்கள் மாற்றம், வளர்ச்சி, உணர்தல் ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்தால் உணர்ச்சிகளை அழித்து செயல்பட முடியும். ஆம். நம் உணர்ச்சிகள் இந்த அனுபவத்தில் சுருண்டு கொள்ளும். மேலும் நம்மிடையே உள்ள ஈர்ப்பு, அர்ப்பணிப்பு, மெய்நிகர் பணி என்பனவற்றில் கவனம் செலுத்த விரும்புகிறோம். இது HSE உயர சுய மரியாதையினால் அவதியுறுவதற்கான அடையாளங்கள். இல்லையெனில் பரிதாபம், அதிர்ச்சி, கோபம் ஆகியவற்றால் அவதியுறுகிறோம். இது LSE குறைந்த சுய மரியாதையின் அறிகுறியாகும். கவனத்தை ஈர்ப்பதற்கு ஒருவரை தற்பெருமையையும், மற்றொருவர் தற்தாழ்த்தியையும் பயன்படுத்துவர். எதுவாகினும் இது எதுவும் நிரந்தரமான ஆரோக்கியமான வழி இல்லை. இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று.

**உயர சுயமரியாதை** தேவைகளைப் பூர்த்தி செய்யாத போது வலியையும் எரிச்சலையும் உண்டாக்கும். தனக்கான சிரத்தை இல்லாத போது இந்த அகந்தை பிறரை விடத் தன்னை உயர்த்திக் காட்டும். சுய விளம்பரத்தை நாடும் மனதால் விரைவில் போலித்தன்மை, வெறி, பீதி மற்றும் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் அட்ரினலின் தொடர் சுரப்பு ஆகியவை உச்சபட்சமாக இருக்கும். இவை விரும்பத்தகாத குடலியக்கம், அமைதியற்ற கால்கள், மயக்கம் போன்றவற்றை ஏற்படுத்தும்.

**குறைந்த சுயமரியாதை** மனக் கொந்தளிப்பு, சோகம், புகாரளிக்கும் ஆர்வம், உணவு ஏக்கம், தன்னிடம் மட்டுமல்லாமல் மக்கள் மற்றும் சூழலிடையே எதிர்மறை எண்ணம் ஆகியவற்றை ஏற்படுத்தும். இந்த அமைதியற்ற போக்கு தொடர்ந்தால் மனச்சோர்வு, நரம்புத்தளர்வு



# உணர்வுப் பனிமூட்டம் விலகட்டும்

பரத் மற்றும் ஷலன் சாவுர்

ஏற்பட்டு உடலின் நோயெதிர்ப்புத் திறன் குறைந்து நரம்பு, இதயம் பாதிக்கப்படும் . மேலும் பதட்டத் தினால் இரத்த அழுத்தம் சீராக அமையாது.

எனவே நம் உணர்வுகளுக்காக செயல்பட வேண்டிய நேரமிது என நான் எண்ணுகிறேன். உணர்வுகள் அதிகமானால் நம் சிந்தனை களைந்துவிடும். அவ்வாறு களைவது ஒருவரைப் பயனற்றவராக்கும். சிந்தனைக் களைதல் மனிதப்பண்பின் பரிசாகக் கருதப்படுகிறது. எனவே நாம் நம் உணர்வுகளைப் பின்தள்ளி, அவர்களைக் கவனித்து, அவர்கள் பதட்டத்தைத் துடைத்து, சமநிலையை உருவாக்கி, மனப்பக்குவத்தை ஏற்படுத்த வேண்டும். இதன்வழி அவர்கள் விசாலமாக உணர்வார்கள்.

நம் உணர்வுகளை ஆழ்ந்து நோக்கினால், அவை கடலலை போல எழுவதும் வீழ்வதும், நம்மை நாமே உற்று கவனிப்பதால் ஏற்படுவது புரியும். அதாவது பிறர் கவனத்தை ஈர்ப்பது, ஒப்புக் கொள்ளல், பரிதாபம், முகமன் பேசுதல், முதல் முறையில் திருப்தியின்மை போன்றவை. இதனால் LSE உள்ள மனிதர்கள் அடிக்கடி 'நான் பயனற்றவன், நான் இயல்பாக சிந்திக்கவில்லை எனக் கூறுவார்கள். மேலும் அதைக் கேட்பவரும் இயல்பாகத் தட்டிக் கொடுத்து, 'ஆம். நீ ங்கள் மிகவும் நல்லவர். அறிவாளியும் கூட என்று பல கூறுவார். HSE உள்ள மனிதரோ, 'சுநான் அறைக்குள் செல்லும் போது அனைவரும் என்னையே கவனிப்பர்'' என்பார். அதைக் கேட்பவரும், 'சுஆம் நீங்கள் அதற்கேற்றவர்தான்...'' என்பார். இந்த அதிக ஏக்கத்தின் வழி நம்மை கணிக்காமல் நம்மை தாண்டி நம் கவனம் இருக்க வேண்டும்.



நம்மை நோக்கும் போது தான் நாம் தவறாகப் பயணிக்கிறோம். அது நம் கண்கள் தன்னைக் காண முயல்வது போலத்தான். அதனால் தான் சுயகவனம் நம்மை திசைத்திருப்பி வலியைத் தருகிறது.

**புற கவனம்.** புற கவனத்தை நம் வீட்டை கவனித்து அதன் அழகு, வசதி, இயல்பை ரசிப்பதிலிருந்து தொடங்கலாம். பாராட்டு இனிமையான அன்பாகும். நாம் தொடும் பொருட்களை மகிழ்வுடன், பாதுகாப்புடன் பத்திரமாக வைத் திருப்போம். பிறகு நம் வாழ்விலுள்ள மனிதர்களை அன்புடன் பரிவுடன், அவர்களின் இனிய இயல்புடன், அவர்கள் சிக்கலில் காட்டும் தைரியம், அவர்களின் நிலை, உறுதி மற்றும் நகைச்சுவை எனப் பாராட்டுவோம். அதே அன்பை நாம் தினந்தோறும் சந்திக்கும் வியாபாரிகள் மற்றும் இடைவிடாமல் குற்றம் கூறாது பணி புரியயும் ஊழியர்களிடம் காட் டுவோம். ஆபத்தான சூழல்களில் வாழ்வைப் பணயம் வைக்கத் தயங்காத அவர்களுக்குத் தலை வணங்குவோம்.

இதை நீங்கள் தினமும் கடைபிடித்தால், நீங்கள் எழுப்பியுள்ள கடினமான கூடுக் கலைந்து உண்மையான மகிழ்வு ஏற்படும். பிறருக்காக நீங்கள் வைத்திருக்கும் அன்பு உங்களுக்குப் புரியும். இந்த அற்புதமான வெளிப்பாடு உங்கள் இதயத்தை மகிழ்வுடனும் உறுதியுடனும் வைக்கும். அற்புதமாக அதை உணர்ந்து நீங்கள் பிறரை அன்புடன் காணும்போது மிருதுவான அன்பு இதயத்தை இன்பமாக்கி ஆறுதலைத் தரும்.

**புத்தரை உணர்தல்** நம்மையும் பிறரையும் புரிந்து கொள்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும் எதிர்பார்ப்பும் சுய விமர்சனமும் இல்லாமல் நேர்மையாக இருக்க நம் அறிவைப் பழக்க வேண்டும். நிம்மதியான சூழலில் கண்ணாடி முன் நின்று உங்களுள் இருக்கும் புத்தரை அமைதியாக உணருங்கள். உங்கள் அறிவைக் கவனியுங்கள். இந்த நேரத்தில் எதிர்பார்ப்பும் தீர்மானமும் இல்லாமல் நீங்கள் கவனிக்கும் அந்த புத்தர் வித்தியாசமானவர். புத்தரின் இருப்பு மிக நன்றாகவே அமையும். உங்கள் உள்மனம் மனப்பக்குவத்தை, சமநிலையை, ஆரோக்யமான சுயமதிப்பை உணர்த்தும்.

இதைப் பிற மனிதரிடமும் பயிலுங்கள். அவர்களுக்குள் இருக்கும் புத்தரைக் காணுங்கள். தேவையும் தீர்மானமும் இல்லாததால் எதிர்பார்ப்பும் மனஅழுத்தமும் இருக்காது. மீண்டும் அந்த சுகத்தை உணருங்கள். உங்கள் எல்லா செயல்களிலும் இதை பழக்கப்படுத்துங்கள். இது நம்மைத் தாழ்த்தி மதிப்பிடுவதையும் உயர்த்தி மதிப்பிடுவதையும் கட்டுப்படுத்தும். நீங்கள் நீங்களாகவே மாறுவீர்கள். உணர்ச்சி பனிமூட்டம் விலகியதும் ஒரு தெளிவு பிறக்கும். குறிப்பு: இதைச் சுமூகமாகத் தொடங்கி தொடர உங்களை பிறருடன் ஒப்பிடுவதை நிறுத்துங்கள். அத்துடன் உங்களை எல்லா நேரத்திலும் தாழ்த்து பவர்களிடமிருந்து விலகி இருங்கள்.

இந்தப் பயிற்சியில் நிலைத்து படிப்படியாக அறிவை நிலையான அறிவை நோக்கி செலுத்துவது மிக முக்கியமாகும். உங்களைப் போலவே பிறரும் அறிவுடையவர்களாக இருப்பார்கள் அனைவரிடமே.

வெறுமையின் அளவைக் காட்டிலும் நிறைவான பண்புகள் உள்ளது. அதனால் தான் நாம் துவளக்கூடாது. உங்களிடம் இருக்கும் புத்தரை வலிமையாக்கி உங்களை மீண்டும் நிறைவுபடுத்துங்கள். உங்கள் அறிவு அமைதியாகவும் சுமூகமாகவும் இருந்தால் உடலும் ஓய்வாக நிம்மதியாக இருக்கும். பிறகு சி ரமமில்லாமல் நீங்கள் விரும்பும் எந்தப் பயிற்சியையும் செயலையும் செய்யும். உங்கள் அறிவும் இதழும் கண்களும் ஒத்திசைத்து சந்திப்பது உங்கள் புன்னகையால்தான். புன்னகை 'சுநான் நலம், நீங்களும் நலமே'' எனக் கூறி உங்களை சமநிலையாக்கும். உங்கள் உள்மனம் ஒளிரும்.

*இந்த எழுத்தாளர்கள் ஃபிட்னஸ் ஃபார் லைஃப் மற்றும் சிம்ப்ளி ஸ்பிரிச்சுவல் யு ஆர் டிவைன் என்ற புத்தகங்களும், ஃபிட்னஸ் ஃபார் லைஃப் என்ற திட்டத்தில் ஆசிரியர்கள் ஆவர்.*

# பொருத்தமான மெத்தை வாங்குதல்

*ரஷிதா பகத்*

உங்கள் மெத்தையை வாங்க நீங்கள் எவ்வளவு நேரம் செலவிடுகின்றீர்கள்? எத்தனை முறை அதன் பக்கங்களைச் சுழற்றி, திருப்பி அல்லது புதிதாக மாற்றியுள்ளீர்கள்? இதே கேள்வி தலையணைக்கும் பொருந்தும்.

உயர்தரமான மெத்தைகளைத் தயாரிக்கும் துபாய் ஃபர்நிச்சர் மேனுஃபேக்சரிங் கம்பெனி (DFMC) அமெரிக்காவில் முதல் இடத்தைப் பெற்ற மத்திய கிழக்கு நாடுகளில் 60 சதவிகிதத்தைப் பிடித்த செர்டா மற்றும் கிங்கோயில் ப்ராண்ட் மெத்தையைத் தயாரிக்கின்றது. அதன் நிர்வாக இயக்குநர் S சுந்தர் ராஜன்.

இவர், துபாய் போன்ற மேற்கத்திய நாடுகளில் மெத்தை வாங்குவதற்கு முன்பு மக்கள் பலமுறை ஆய்வு செய்வார்கள். ஏனெனில் அவர்கள் பொருத்தமான மெத்தையை வாங்கி, முறையாகப் பயன்படுத்தி பாதுகாப்பது அவர்கள் நலத்தைப் பெரிதும் போற்றும் என நம்புகின்றனர் என்று கூறுகிறார்.

உங்கள் வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியை, நீங்கள் தினமும் மெத்தையில் கழிக்கின்றீர்கள். நல்ல இரவுத் தூக்கமே உங்களைப் புத்துணர்ச்சியுடனும் ஆற்றலுடனும் மறுநாள் பணியை நல்ல முறையில் மேற்கொள்ளச் செய்யும். தூக்கத்தை இழந்தால் மறுநாள் நிச்சயம் பயங்கரம் தான் என்கிறார் அவர்.

## மாறி வரும் சந்தை

இரவுத் தூக்கத்தின் அவசியத்தை இந்தியர்கள் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். இளைஞர்கள் சுகாதார உணர்வு பெற்று உடற்பயிற்சி கூடத்தில் குவிகின்றனர், ஆனாலும் மெத்தையின் அவசியத்தை இன்னும் உணரவில்லை. எனவே பஞ்சு மெத்தையைத் தொடர்ந்து நார் மற்றும் நுரை மெத்தைகள் பெருகி வந்துள்ளன. என்றாலும் தரமான வில்மெத்தைகள் இன்னும் சந்தையில் பரவவில்லை.

அமைப்புசாரா துறையான பஞ்சினைத் தவிர்த்து, இந்திய மெத்தை சந்தையின் மதிப்பு ரூ 300-400 கோடி வரை என அவர் மதிப்பிட்டார். வில்மெத்தை சந்தை மிகச் சிறியது மற்றும் அதன் முக்கிய பகுதி நார் மற்றும் நுரை சந்தை துறையில் அமைந்தும் சில மரப்பால் சந்தையிலும் அமைந்துள்ளது. வில்மெத்தை சந்தை 90 சதவீதமும் பிற மெத்தை 10 சதவீதமும் உள்ள உலகில் முற்றிலும் மாறுபட்ட விகிதத்தில் இது அமைந்துள்ளது.

ஆனால் இந்த சந்தை மாறும் வல்லமை பெற்றது. எனவே சுந்தர்ராஜனின் நிறுவனம் இந்தியாவில் அடிப்படை தரம் கொண்ட வில்மெத்தையான செர்டா ப்ராண்டு மெத்தையை அறிமுகப்படுத்துகிறது. பெங்களூரு, மும்பையில் இருந்த அவரது நிறுவனக் காட்சிக்கூடம் தற்போது சென்னையிலும் அமைந்துள்ளது. இந்தியாவில் 14 இடங்களில் உரிமங்கள் அமைந்துள்ளன. அது மெல்ல விரிவடைந்து கொல்கத்தா மற்றும் கிழக்கு, வடகிழக்கில் அடுத்தடுத்து அமையும். இந்தியர்கள் ஒருமுறை அந்த மெத்தையை வாங்கி பயன்படுத்தினால்



S. சுந்தர்ராஜன்,
நிறுவன இயக்குனர்,
துபாய் ஃபர்னீச்சர்
மேனுஃபேக்சரிங்
கம்பெனி




அதன் நன்மைகளை தங்கள் நண்பர்கள் மற்றும் அயலார்களிடம் எடுத்துரைத்து வாய்வழிப் பரப்புவார்கள் என்று ராஜன் கூறுகிறரர்.

இந்த மெத்தையின் ஆரம்ப விலை, ஒன்று ரூ. 30,000 முதல் 1.5-2 லட்சம் வரை உள்ளன. ''மெத்தையின் மூலப்பொருளில் அதிக கவனம் செலுத்தி வில்மெத்தைக்குத் தேவையான தரத்தை உறுதி செய்கிறோம். அதன் கம்பிகள் ஐரோப்பாவிலிருந்தும் சுருள்கள் செய்யும் இயந்திரம் அமெரிக்காவிலிருந்தும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தரத்தில் நாங்கள் சமாதானம் செய்யமாட்டோம்,'' என்று கூறுகிறார். அடுத்து ஜெர்மனியில் பேயர் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் இரசாயனத்தையும், பெல்ஜியத் திலிருந்து வரும் துணிகளையும் கொண்டு துபாயில் மெத்தைக்கான நுரைகள் தயாரிக்கப்படுகின்றன. பிறகு இந்தியாவில் பொருத்தப்படுகின்றது. துபாயில் ஊழியிர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு புனேவில் உள்ள **DFM**இல் ஒரு நாளில் 200 மெத்தைகள் தயாரிக்கும் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

ராஜன் அவர்கள், ''செர்டா உள்நாட்டு வீட்டுச் சந்தையில் மிகப் பெரும் பங்கு வகிக்கவில்லை என்றாலும் வாடிக்கையாளர்கள் செர்டா மெத்தையின் தரத்தையும் வசதியையும் உயர்வாகப் பேசுவதால் 5 நட்சத்திர விடுதியிலும் விருந் தோம்பல் இடங்களிலும் அதிகம் எங்கள் மெத்தையை வாங்குகின்றனர்,'' என்று கூறுகிறார்.

## மெத்தை பராமரிப்பு

மெத்தைப் பராமரிப்பு மிக முக்கியம் மேலும் எவ்வளவு காலவெளியில் நீங்கள் அதை மாற்ற வேண்டும்?

உங்கள் பயன்பாட்டைப் பொருத்து 7-10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மெத்தையை மாற்ற வேண்டும் என்கிறார் ராஜன். 3 மாதத்திற்கு ஒருமுறை மெத்தையைத் திருப்ப வேண்டும். இரு பக்க மெத்தையாக இருந்தால் 6 மாதத்திற்கு ஒருமுறை திருப்ப வேண்டும். இது மெத்தையின் ஆயுட்காலத்தையும், பின்பக்க பலம், வசதி, நல்லுணர்வையும் உறுதி படுத்தும். எனவே நல்ல மெத்தையை வாங்குவதும் பராமரிப்பதும் மிக அவசியம்.

முதுகு வலி உள்ளவர்கள் கடினமான பஞ்சு மெத்தையில் படுக்க வேண்டும் என்பது உண்மையா? உண்மையில் அது கட்டுக்கதை. அது மெத்தையின் கடினத்தன்மையைப் பொருத்ததல்ல. ஒருவருக்கு முதுகு வலி இருந்தால் மென்மையான மெத்தையில் படுத்தால் அதிகமாகும். எனவே கடினமெத்தையைத் தேர்ந்தெடுத்தனர். எங்களிடம் மிகுந்த மென்மை முதல் மிகுந்த உறுதி வரையில் பல ரகங்கள் உள்ளன. எனவே உங்களுக்குத் தகுந்த மெத்தையைத் தேர்ந்தெடுக்கலாம். தகுந்த மெத்தையைத் தேர்ந்தெடுத்தால் நன்றாக உறங்கலாமே தவிர உங்கள் பிரச்சினைத் தீராது.

## மெத்தையைத் தேர்ந்தெடுத்தல்

உங்களுக்குப் பொருத்தமான மெத்தையை எப்படி தேர்ந்தெடுப்பீர்கள்?

வளர்ந்த நாடுகளில் வாடி க்கையாளர்கள் மெத்தையைத்



வில்மெத்தை தயாராகும் விதம்.

தேர்ந்தெடுக்க அதிக நேரம் செலவிடுகிறார்கள். அதைக் காட்சிக்கூடத்திற்குச் செல்லும் முன்பு இணையத்தில் பார்த்தும், சிலவற்றைக் கருத்தில் கொண்டும் எம்மாதிரியான பொருளை வாங்கவேண்டும் என்று ஆய்வு செய்கின்றனர். காட்சிக்கூடத்தில் உள்ள பல வகையான மெத்தைகளில் அமர்ந்து, இடப்பக்கமும் வலப்பக்கமும் திரும்பி படுத்து, ஒருவராக வந்தால் மீண்டும் குடும்பத் தினருடன் வந்து தேர்ந்தெடுத்து வாங்குவர். இரவு உடை போலவே தளர்வான உடை அணிந்து வருவர். ஒரு திட்டச் செயல் போலவே ஈடுபட்டு இறுதியில் தேர்ந்தெடுப்பார்கள்.

ஆனால் இந்தியாவில் வாடிக் கையாளர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதில்லை. அதை தொட்டு உணர்ந்து அமர்வார்கள். ஆனால் இவை தேர்ந்தெடுக்கப் போதாது. படுத்துப் பார்க்க வேண்டும்.

ராஜன், இந்தியாவில் செல்வந்தர்கள் பலரும் சாதாரண மெத்தையைப் பயன்படுத்துவதைக் குறிப்பிட்டு நம்மிடையே அது குறித்த அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். மெர்க்ஸ், பி.எம். டபிள்யு, ஆடம்பர வீடு உள்ளவர்கள் கூட நல்ல உறக்கத்திற்குத் தேவைப்படும் தரமில்லாத மலிவான மெத்தைகளை பயன்படுத்துகின்றனர்.

## தலையணை

நீங்கள் பயன்படுத்தும் தலையணையும் மிக முக்கியம். DFMC 12 வகையான தலையணைகளைத் தயாரிக்கிறது. சரியான மெத்தையையும் தலையணையும் தேர்ந்தெடுத்தால் மறுநாள் புத்துணர்வு பெற்று ஆற்றல் அதிகரிக்கும் நல்ல தூக்கத்தைப் பெறலாம்.

இந்திய வீடுகளில் முதலில் கட்டிலை வாங்கிய பிறகே மெத்தையை வாங்குகிறோம். இதன் அடிப்படை மிக முக்கியமானது; ஒரு வீட்டின் அடித்தளம் போன்றது. சுருள், பீடம் என்ற இரண்டு வகையான அடித்தளத்தை நாங்கள் தயாரிக்கிறோம். கனடாவின் தேவதாரு மரத்தில் பீடத்தை தயாரிப்பதால் அது மெத்தையின் எடையை நன்றாகத் தாங்கும். மெத்தையின் ஆயுட்காலத்தை உறுதிப்படுத்தும் இது மெத்தையின் விலையில் 40 சதவீதம் கொண்டது.

வாடிக்கையாளர் பலர் காட்சிக்கூடத்திற்கு வந்து மெத்தையை உணர்ந்து விரும்பி அதை மட்டுமே வாங்குவார்கள். ஆனால் வீட்டில் கட்டில் வேறுபடுவதால் அதே உணர்வு இருக்காது. மீண்டும் வந்து அதைப் புகாரளித்து மெத்தை மீது குறை கூறுவார்கள். நாங்கள் ஆய்வு செய்து பாரத்தால் அவர்கள் வீட்டில் அடித்தளம் 100 கி.கிராம் வரையிலான மெத்தையின் எடையைத் தாங்க இயலாததாக இருக்கும், என்கிறார் ராஜன்.

## மழலையர் மெத்தை

மத்திய கிழக்கு நாடுகளில் நன்கு வியாபாரம் செய்யப்படும் மழலையர் மெத்தையை நாங்கள் தயாரிப்பது வியப்பாக இருக்கும். மழலைக்கு மென்மையான மெத்தை வேண்டும் என்பதும் தவறான அனுமானமாகும். பல குழந்தைகளுக்கு மென்மையான மெத்தை பொருந்தாது. ஏனெனில் அவர்களது தண்டுவடம் முழுமையான வளர்ச்சி பெறாமல் இருக்கும். அப்போது குழந்தைகள் மெத்தையில் அழுந்தக்கூடாது. குழந்தையின் தண்டுவடத்திற்கு ஆதரவு தந்து அது நன்றாகவும் நேராகவும் வளரத் துணை புரிய வேண்டும்.

குழந்தைகள் மெத்தைக்கு மேலும் மென்மையானத் துணி, நீர் உட்புகாமை, நுண்ணுயிர் எதிர்ப்பு, ஒவ்வாமை எதிர்ப்பு போன்ற சில சிறப்புத் தகுதிகள் வேண்டும். இதன் விலை சுமார் ரூ 20,000 ஆகும்.■

## TRF WAS-MGI Chair



PDG Vinay Kulkarni will continue to chair the TRF's WAS-MGI (Water and Sanitation – Major Gift Initiative) Committee formed in 2016–17. The Committee has a goal of raising $25 million over 3–5 years, besides educating Rotarians and Friends of Rotary on the global need for water and sanitation. The Committee also works closely with Endowment/Major Gift Advisors to solicit contributions.

Kulkarni is also a member of TRF Fund Development Committee since July 1, 2017. His term ends in 2020.

Rotary

## Rotary at a glance

Rotarians : 12,17,324

Clubs : 35,594

Districts : 539

Rotaractors : 2,49,527*

Clubs : 10,849*

Interactors : 5,14,487*

Clubs : 22,369*

RCC members: 2,26,343*

RCC : 9,841*

* As on January 2, 2018

# Membership Summary

As on January 2, 2018

| RI Zone | RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract | Interact | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2981 | 112 | 4,593 | 218 | 60 | 225 | 173 |
| 5 | 2982 | 67 | 2,966 | 93 | 61 | 111 | 43 |
| 5 | 3000 | 123 | 5,132 | 412 | 289 | 653 | 195 |
| 4 | 3011 | 75 | 3,304 | 634 | 57 | 106 | 25 |
| 4 | 3012 | 83 | 3,260 | 611 | 68 | 125 | 55 |
| 5 | 3020 | 93 | 4,135 | 199 | 117 | 461 | 351 |
| 4 | 3030 | 92 | 4,954 | 613 | 74 | 307 | 164 |
| 4 | 3040 | 92 | 2,008 | 213 | 53 | 119 | 136 |
| 4 | 3053 | 69 | 2,695 | 423 | 16 | 37 | 93 |
| 4 | 3054 | 130 | 6,300 | 1,004 | 92 | 305 | 473 |
| 4 | 3060 | 98 | 4,074 | 420 | 64 | 119 | 130 |
| 4 | 3070 | 102 | 2,961 | 267 | 67 | 156 | 54 |
| 4 | 3080 | 75 | 3,270 | 214 | 71 | 215 | 108 |
| 4 | 3090 | 78 | 2,111 | 83 | 32 | 36 | 122 |
| 4 | 3100* | 72 | 1,673 | 71 | 11 | 73 | 146 |
| 6 | 3110 | 110 | 3,882 | 296 | 51 | 49 | 104 |
| 6 | 3120 | 78 | 3,328 | 359 | 37 | 56 | 50 |
| 4 | 3131 | 130 | 5,340 | 1,035 | 106 | 275 | 80 |
| 4 | 3132 | 105 | 4,068 | 411 | 63 | 199 | 138 |
| 4 | 3141 | 90 | 5,352 | 1,121 | 118 | 252 | 87 |
| 4 | 3142 | 83 | 3,069 | 453 | 67 | 186 | 69 |
| 5 | 3150 | 98 | 3,575 | 347 | 93 | 228 | 109 |
| 5 | 3160 | 69 | 2,398 | 114 | 23 | 46 | 81 |
| 5 | 3170 | 128 | 5,583 | 398 | 58 | 302 | 160 |
| 5 | 3181 | 70 | 3,064 | 228 | 31 | 172 | 104 |
| 5 | 3182 | 79 | 3,259 | 238 | 32 | 271 | 91 |
| 5 | 3190 | 128 | 4,992 | 564 | 144 | 349 | 50 |
| 5 | 3201 | 139 | 5,182 | 318 | 99 | 124 | 47 |
| 5 | 3202 | 128 | 4,813 | 234 | 100 | 431 | 45 |
| 5 | 3211 | 137 | 4,393 | 262 | 12 | 89 | 123 |
| 5 | 3212 | 95 | 3,864 | 231 | 111 | 271 | 126 |
| 5 | 3231 | 67 | 2,820 | 112 | 55 | 196 | 237 |
| 5 | 3232 | 97 | 3,939 | 522 | 137 | 303 | 82 |
| 6 | 3240 | 86 | 2,968 | 338 | 61 | 146 | 151 |
| 6 | 3250 | 98 | 3,774 | 677 | 46 | 205 | 176 |
| 6 | 3261 | 66 | 2,419 | 213 | 16 | 102 | 42 |
| 6 | 3262 | 96 | 3,283 | 378 | 44 | 68 | 75 |
| 6 | 3291 | 145 | 3,782 | 710 | 78 | 131 | 587 |
| **India Total** | | **3,683** | **1,42,583** | **15,034** | **2,714** | **7,499** | **5,082** |
| 5 | 3220 | 67 | 1,871 | 230 | 82 | 199 | 77 |
| 6 | 3271 | 80 | 1,417 | 240 | 49 | 16 | 13 |
| 6 | 3272 | 155 | 3,064 | 438 | 41 | 36 | 36 |
| 6 | 3281 | 204 | 5,674 | 793 | 228 | 84 | 186 |
| 6 | 3282 | 138 | 3,927 | 381 | 133 | 43 | 41 |
| 6 | 3292 | 114 | 4,360 | 645 | 121 | 113 | 109 |
| **S Asia Total** | | **4,441** | **1,62,896** | **17,761** | **3,368** | **7,990** | **5,544** |

**Non-districted.*

*Source: RI South Asia Office*

# ரோட்டரியின் வேலைவாய்ப்பு முகாம்

*கிரண் ஜெஹ்ரா*

*D 3141 ரோட்டரியினர் மும்பையில் உள்ள வேலையில்லாதவர்கள் வேலைப் பெற்று தங்கள் குடும்பத்துடன் சிறப்பாக வாழ வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது.*

பிரியேஷா எப்போதும் தன் உடல்குறைகள் குறித்து கவலைப்படுவார். “நேர்க்காணலுக்காக அழைக்கப்பட்டும் என்னைச் சக்கர நாற்காலியில் பார்த்து நிராகரித்து விடுவார்கள்’ என்றார் பிரியேஷா கிருஷ்ணன் சாரங். தன் 13 வயது முதல் சக்கர நாற்காலியில் மட்டுமே வாழ்ந்த இவர் ரோட்டரி *ரோஜ்கார்மேளா* தன் வாழ்வையே மாற்றும் என எதிர்பார்க்கவில்லை. இப்போது அவர் ‘யுரேகா ஃபோர்ப்ஸ் யூரோபிள்’ என்ற இந்தியாவின் மாற்றுத் திறனாளிகளால் இயக்கப்படும் முதல் கால் சென்டரில் பணி புரிந்து தன் முதல் மாத சம்பளத்தையும் பெற்று விட்டார்.

D 3141 ரோட்டரி சங்கங்கள் இணைந்து செப்டம்பர் 16-23, 2017ல் அந்தேரி, மதுங்கா மற்றும் முலுந்த் போன்ற பல இடங்களில் மக்களைக் கவரும் வகையில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்களை நடத்தியது. யூரேகா ஃபோர்ப்ஸ், புளூ டார்ட், எல்ஐசி இந்தியா மற்றும் 90 நிறுவனங்கள் இதில் பங்கேற்று ஆண்டுக்கு ரூ.1.4 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரையிலான வருமானத்தை வழங்கும் வாய்ப்பைத் தந்தன. 3000 நபர்கள் கலந்து கொண்டாலும் 1000 நபர்கள் மட்டுமே நேர்காணலில் வெற்றி பெற்று நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். 230 நபர்கள் எல்ஐசியிலும் 650 நபர்கள் வேறு அலுவலகங்களிலும்





நேர்க்காணலுக்காக அழைக்கப்பட்டும் என்னைச் சக்கர நாற்காலியில் பார்த்து நிராகரித்து விடுவார்கள்.

அந்த இடத்திலேயே பணிநியமன ஆணைகளைப் பெற்றனர்.

மும்பையில் வேலைவாய்ப்பு முகாமை நடத்த 5 மாதங்களாகத் திட்டமிட்டு, பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் – 'WhatsApp' - முகநூல் ஆகியவற்றில் பதிவிட்டு வேலை தேடுவோருக்குத் தெரிவித்தோம்' என்றார் மாவட்ட செயலாளர் கிரிஷ் மிட்டல்.

வேலையற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெறுவதற்காகவே



இந்த ரோட்டரி *ரோஜ்கார்மேளா* நடைபெற வேண்டும் என்பதை நாங்கள் மனதில் கொண்டோம். அதனால் தான் நேர்காணலில் தனியறை இல்லாமல் அதிகாரிகளும் ஊழியர்களும் நேருக்கு நேராக அமரும்படி செய்தோம். சாதாரண உடையில் வந்து வேலை மற்றும் வேலை செய்ய உள்ள நிறுவனச் சூழல் குறித்து விவாதிக்கலாம். அதிகாரிகளும் திறமை மிக்க ஊழியர்களைச் சந்தித்து பணியமர்த்தும் மிகப் பெரிய செயல்பாடுகளில் இருந்து தங்கள் நேரத்தை மிச்சப்படுத்தினர்.

ப்ரியேஷா, "என் நிலையை அதிகாரிகளுடன் விவாதித்தபோது அவர்களும் எனக்கு ஆதரவையும் உதவியையும் வழங்கினர்'' என்றார். தன் அதிகாரிகளைப் புகழ்ந்து, தன் அலுவலகம் "சக்கர நாற்காலியில் உள்ளவர் களுக்காக தனிப்பட்ட பணி நிலையங்களைக் கொண்டுள்ளது. இருந்தாலும் சிறந்த செயல்திறன் உள்ளவர்களையே அவர்கள் வேலையில் சேர்க்கின்றனர். அதில் எந்த சலுகையும் கிடையாது,'' என்றார்.

சில அதிகாரிகள், வேலையில் சேர்ந்த பிறகு திறன் மேம் பாட்டிற்கானப் பயிற்சிகளில் பங்கேற்று பயனடைய ஊக்குவிக்கின்றனர். முலுந்தில், ஐடி தொழில்நுட்பத் துறையில் சேர்ந்த பங்கஜ் S ஹன்டே "இந்தப் பயிற்சி தற்போதைய மென்பொருள் நிலையைத் தெரிந்து கொண்டு பணியில் முன்னேற உதவும்,'' என்றார்.

தனியார் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக சேர்ந்த ஸ்ரீபட் S பானே, தன் வாழ்க்கையை இந்த முகாம் திருப்பி தந்ததாகவும், தன் மகளை நடனப் பள்ளியில் சேர்க்க பணமில்லாமல் இருந்த தனக்கு இனி அவளைச் சேர்க்க முடியும் என்றும் தன்னால் ரோட்டரிக்கு நன்றி கூறி மாளாது என்றும் கூறினார்.

மாவட்ட ஆளுநர் ப்ராஃபுல் சர்மா, *ரோஜ்கார்மேளா*வின் வெற்றிக்காக உதவிய D 3141 ரோட் டரியினர்களையும் அதன் அனைத்து சங்ககங்களையும் பாராட்டி நன்றி தெரிவித்தார். இனி இந்த திட்டம் ஆண்டுக்கொருமுறை நடத்த சங்கம் தீர்மானித்துள்ளது.■



**RC விழுப்புரம் — D 2982**

கடலூரில் 70 அனாதைகள் மற்றும் 40 வீடற்றவர்களுக்கு உணவும் இடமும் தரும், அரசு சாரா நிறுவனமான சுத்த சன்மார்க்க பயிற்சி நிலையத்திற்கு சீலிங் ஃபேனையும் கொசு வலையையும் சங்கம் வழங்கியது.

**RC போபால் மிட்டௌன் — D 3040**

நகரத்தில் உள்ள 15 மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 850 மாணவர்களின் பல்வேறு பாடப் பிரிவின் அறிவை வெளிப்படுத்த வினா-விடை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.





**RC பெரைலி மெட்ரோ — D 3110**

பல்வேறு பள்ளிகளிலிருந்து 80 மாணவர்கள் பங்கேற்ற துணை ஜூனியர் பாட்மிட்டன் போட்டி நடைபெற்றது. ஜூனியர்களுக்கான வளர்ச்சி நிகழ்வாக இது திகழ்ந்தது.

**RC பானிபட் சவுத் — D 3080**

மக்களுக்காக ஆம்புளன்ஸ் வண்டி வழங்கப்பட்டது. ஜன் சேவா தள் அதை பராமரிக்கும். சமூகத்தில் பின் தங்கியுள்ள நோயாளிகளை மருத்துவமனையில் சேர்க்க இது பயன்படும். நகரத்தில் ஆண்டிற்கு 500க்கும் மேற்பட்ட நோயாளிகள் இதனால் பயனடைவார்கள்.



# சேவைகள்

**RC அலகாபாத் நார்த் — D 3120**

அலகாபாத்தில் உள்ள நகர் நிகாம் வட்டத்தில் 40 துப்புரவு தொழிலாளர்களுக்கு உடை, டவல் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள், தீபாவளி பண்டிகையின் நினைவாக வழங்கப்பட்டன.





**RC நெல்லூர் — D 3160**

300 நபர்கள் பங்கேற்றும் இலவச மருந்து பெறும் 3 சுகாதார முகாம்களைச் சங்கம் நடத்தியது. அதில் 15 நபர்கள் கண் அறுவை சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

**RC சின்ச்வாட் — D 3131**

மலவாளியில் உள்ள 13 குழந்தைகளுக்குப் பல் மற்றும் ஹீமோக்ளோபின் பரிசோதனை நடைபெற்றது. குழந்தைகளுக்கு வாய் பராமரிப்பைக் கற்பித்ததுடன் அதற்கான கைப்பெட்டியும் வழங்கப்பட்டது.





**RC சாங்லி — D 3170**

சாங்லி சட்டசபை உறுப்பினர் சுதிர் காட்கில், மேற்கூரைச் சூரிய மின் திட்டத்தைத் துவக்கி வைத்தார். இது ரோட்டரியின் வெள்ளி விழா அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

**RC அம்பர்நாத் வெஸ்ட் — D 3142**

15 கிராமங்கள் பயன் பெறும் வகையில் சங்கம் தத்தெடுத்த பள்ளியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டது. ரூ.65,000 மதிப்புள்ள இத்திட்டத்தால் அப்பகுதியில் நீர்ப் பற்றாக்குறை நீங்கியது எனப் பள்ளி, ரோட்டரியைப் பாராட்டியும் நன்றி தெரிவித்தும் கடிதம் எழுதியுள்ளது.



### RC பதுபித்ரி — D 3182

சுமார் 125–150 ஆடை தொழிற்சாலை பணியாளர்களுக்கும் மக்களுக்கும் அரசுதவியுடன் சுகாதார முகாம் நடத்தப்பட்டது. பணியாளர்கள் நோயற்ற வாழ்வை மேற்கொள்ள வலியுறுத்தப் பட்டனர்.



### RC தும்குர் ஈஸ்ட் — D 3190

NHAI யுடன் இணைந்து, சிர்சா தாலுகா கரஜீவனஹல்லியில் 5 நாட்கள் கண் முகாம் நடத்தப்பட்டு 400 ஓட்டுனர்களுக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. குளோபல் மருத்துவமனையைச் சேர்ந்த 10 கண் மருத்துவர்கள் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தனர். ரூ.2,00,000 செலவில் இத்திட்டம் நடைபெற்றது.




### RC உடுமலைப்பேட்டை தேஜஸ் — D 3202

உடுமலைப்பேட்டை நூலகத்தில் தேசிய நூலக வாரம் கொண்டாடப்பட்டது. பள்ளி மாணவருக்காக நடைப்பெற்ற அறிவியல் கண்காட்சியைச் சங்கத் தலைவர் எஸ். நாகராஜ் தொடங்கி வைத்தார்.




### RC ஆலப்புழை — D 3211

ஆலப்புழை அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை மையம் 1.5 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. நகராட்சி தலைவர் தாமஸ் ஜோசப் தொடங்கி வைக்க TG சுரேஷ் மாத்யு திறந்து வைத்தார்.




### RC திருநெல்வேலி — D 3212

500 மாணவர்களுடன் டெங்கு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி மற்றும் சுகாதாரத் துறை ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வு மக்களிடையே ரோட்டரி குறித்த நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது.



# சேவைகள்



**RI மாவட்டம் 3231**

குடியாத்தம் உயர்நிலை பள்ளியில் ஸ்மைல்ஸ் திட்டத்தின் கீழ் மின் வழி கற்றல் கருவிகள் வழங்கப் பட்டன. DG K ஜவாரிலால் ஜெயின் இதைப் பள்ளி நிர்வாகிகளிடம் வழங்கினார். இதனால் சுமார் 400 மாணவர்கள் பயனடைவர்.



**RC சிலிகுரி மிட்டௌன் — D 3240**

RC பிர்டாமோட் மிட்டௌன் (D 3292) உடன் இணைந்து ரோட்டரியினர் நோபாளில் மைத்திரி திட்டத்தின் கீழ் ஆடைகளை வழங்கினர். சங்கத் தலைவர் ஆஷிஸ் குப்தா 2 சங்கத்திலிருந்து ரோட்டரியினருடன் இணைந்து பாட புத்தகங்கள், மருந்துகள், சுகாதாரப் பொருட்களைப் பள்ளி மாணவர்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் வழங்கினார்.



**RC தர்பங்கா — D 3250**

ஆதர்ஷ் மத்தியா வித்தியாலயாவில், ஹேப்பி ஸ்கூல்ஸ் திட்டம் நிறைவுப் பெற்றது. மாவட்ட நீதிபதி சந்திரசேகர் சிங் 4 புதுப்பிக்கப்பட்ட கழிவறைகள், குடிநீர் வசதி, நூலகம் முதலியவற்றைத் தொடங்கி விளையாட்டு சாதனங்களை ஊழியர்களிடம் வழங்கினார். மேலும் ஹெபடைடிஸ் பி -கான தடுப்பூசிகளும் மாணவர்களுக்குப் போடப்பட்டன. கடந்த சில மாதங்களாக மின்வழிக் கற்றல் கருவி, சுகாதார வசதி, நீர் வடிகட்டி, மற்றும் பள்ளிக் கட்டட மேம்பாட்டிற்கான பொருட்களை சங்கம் வழங்கியது.




**RC பாலிகஞ்ச் அப்டௌன் — D 3291**

யங் ஸ்டார் சங்கத்தின் கானசஸ்த்யா குழுவுடன் இணைந்து டெங்குவால் பாதிக்கப்பட்ட பிக்னிக் கார்டினில் கொசு வலைகள் வழங்கப்பட்டன. இது ரோட்டரிக்கு மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது.




**RC லும்பினி சித்தார்த்தா நகர் — D 3292**

மர்சாவரில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்காக மாபெரும் உணவு விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம் நடைப்பெற்றது. எல்லா சங்கங்களும் பங்கேற்ற இத்திட்டத்தில் 800 மக்கள் இலவச மருத்துவப் பரிசோதனையும் இலவச மருந்தும் பெற்று பயனடைந்தனர். சங்கத் தலைவர் சபித்ரி குருங் இத்திட்டத்திற்குத் தலைமையேற்றார்.

*ஒருங்கிணைப்பு : V முத்துக்குமரன்; வடிவமைப்பு : L குணசேகரன்*

LBW

# நூல் வெளியீட்டு விழா : ஒரு பார்வை

TCA *சீனிவாச ராகவன்*

கடந்த ஆண்டு நான் ஒரு புத்தகத்தை எழுதினேன். பதிப்பகத்தார், இந்த நூல் வெளியீட்டு விழா வழக்கமான மரபில் இருக்க வேண்டுமா எனக் கேட்டார். நான் அவை முழுக்க தேவையற்ற வியாபார தந்திரம் எனக் கூறி மறுத்து விட்டேன். இதைக் கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். அவை விற்பனையைத் தூண்டும். அதில் கலந்துகொள்ளும் மக்கள் பெரும்பாலும் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். விழாவைப் பார்ப்பதற்காக மட்டுமே அவர்கள் வருவார்கள். அங்கு வருபவர்களில் ஐந்தில் ஒருவர்தான் அந்த புத்தகத்தை வாங்குவார். 50 முதல் 75 பிரதிகள் வரை சிறப்பாக விற்பனையாகும். மற்றவர்கள் சாண்ட்விச், சமோசா, டீ எனச் சுவைத்துக் கொண்டிருப்பார்கள். ஆசிரியருடன் அறிமுகபடுத்திக் கொண்டபின் சிலர் விழா தொடங்கும் முன்பே வெளியேறிவிடுவார்கள். சிலர் நூலை வாங்காமலே கூட நழுவி விடுவார்கள். ஏனெனில் யார் வாங்குபவர்களை நினைவில் வைத்துக் கொள்வார்கள்?

> இன்றைய கணினி உலகில் இத்தகைய நூல் வெளியீட்டு விழாக்களை விட நன்கு எழுதிய விமர்சனங்களே ஒரு நூலின் வெற்றியை நிர்ணயிக்கின்றன.

இந்த விழாக்களின் பொருளாதாரம் சுவாரஸ்யமானது. ஒருமுறை டில்லியில் பன்னாட்டு இந்திய அறிவாற்றல் மையத்தில், ரூ.30,000 செலவில் 200 நபர்களை முன் வெளியீட்டு விழாவிற்கு அழைத்தனர். சிலநேரத்தில் நீங்கள் பிரபலமான ஆசிரியராக இருந்தால் பதிப்பகத்தார் உங்கள் நூல் வெளியீட்டிற்குப் பின் ரூ. 60,000 செலவில் மது விருந்தே வைத்திருப்பார். நீங்கள் மேலும் பிரபலமானவராக இருந்தால் ஒரு சிறு இரவு விருந்து கூட ஏற்பாடு செய்யப்படும். 50 பேர் கலந்து கொண்டு மது மற்றும் பல வகை உணவுகளுடன் அமர்க்களப்படும். ஒரு நூலை ரூ.500 கொடுத்து வாங்குவதை விட வரம்பற்ற ஸ்காட்ச் மதிப்பு மிக்கது எனக் கருதுகின்றனர். குறிப்பாக அந்த நூல் மறுநாளே பாதி விலைக்கு விற்கப்படலாம் அல்லது யாருக்கேனும் பரிசாக வழங்கப்படலாம்.

கடந்த ஏழு ஆண்டுகளில் நான் என் நண்பர்களால் நடத்தப்பட்ட மூன்று வெளியீட்டு விழாவில் மட்டுமே கலந்து கொண்டேன். அதன் பிறகு அந்த மூவரிடமும் எதற்காக அவர்கள் இந்த விழாவிற்கு ஒப்புக்கொண்டனர் எனக் கேட்டேன். அதில் இருவர் அதிகக் கூச்ச சுபாவமுள்ளவர்கள். அதற்கு அவர்கள் பதிப்பகத்தார்தான் இந்த விழாவிற்குக் கட்டாயப்படுத்தினர் என்றனர். மூன்று முறை மறுத்த ஜூலியஸ் சீஸரைப் போல நான் மறந்த பிறகு என் பதிப்பகத்தார் என்னை விட்டுவிட்டார்.

இது ஆசிரியருக்கு வழங்கப்படும் முன்தொகை சார்ந்தும் இருக்கும். எந்தளவு இந்த நூல் சந்தைப்படுத்தபடுகிறதோ அந்த அளவு முன்தொகை திருப்பப்படும். இந்த வெளியீட்டு விழா முன்தொகையை ஒட்டி அமையும். வெளியீட்டிற்குப் பிந்தைய விருந்து உயர்வாக அமைந்தால் முன்தொகையும் அதிகமாக இருக்கும். நிகழிடமும் அவ்வாறே அமையும். 5 நட்சத்திர விடுதியில் வெளியிட்டால் மிகப் பெரிய முன்தொகை வழங்கப்பட்டிருக்கும். கல்லூரி அரங்கத்தில் இருந்தால் முன்தொகை வழங்கப்படவில்லை என்பதொடு அந்த ஏழை எழுத்தாளரே தேநீருக்கும் திண்பண்டங்களுக்கும் செலவிடுவார் என்று பொருள்.

பிறகு நூலைப் பற்றி யாரைப் பேசவைப்பது எனப் பெரிய கலந்துரையாடல் நடைபெறும். ஒரு பயங்கர ரகசியத்தை சொல்லப்போகிறேன். ஒருவர் என்னிடம், ''இதுவரை நான் அந்த நூலைப் படித்ததே இல்லை, மேலோட்டமாகப் பார்த்து உட்தலைப்புகளை மட்டுமே படித்தேன்'' என்று கூறினார். இந்த வழக்கமான நடைமுறை கண்டு நான் வியந்திருக்கிறேன். பல கலந்துரையாடல்கள் நூலின் அருமையைப் பேசும்போது ஆசிரியர் கூற விரும்புவதை விட உலகைப் பற்றிய அவர்களின் கருத்துகளைப் பேசுவார்கள் என நினைக்கிறேன்.

இதை விட வேறொரு சிக்கலும் உள்ளது. கலந்துரையாடும்போதோ, விழாவில் கலந்துகொள்ளும் போதோ, அந்த நூல் மோசமானது எனக் கூற முடியுமா? அது திருமணத்தில் மணமகனைப் பார்த்து முட்டாளைப் போல இருக்கின்றாய் என்பது போலத்தானே இருக்கும்?

அதே நேரத்தில், பதிப்பாளர்களும், நூலாசிரியர்களும் நூலின் விமர்சனத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டும். ஏனெனில் இன்றைய கணினி உலகில் இத்தகைய நூல் வெளியீட்டு விழாக்களை விட நன்கு எழுதிய விமர்சனங்களே ஒரு நூலின் வெற்றியை நிர்ணயிக்கின்றன. ■

# துணுக்குச் செய்திகள்



## அலுவலகத்தில் ட்ரோன் கருவி

தைசே என்ற ஜப்பானிய நிறுவனம், அதிகமாக அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் உரிய நேரத்தில் வீட்டிற்குப் போக ட்ரோன் என்னும் கருவியை பயன்படுத்த திட்டமிடுகிறது. இந்த கருவி அலுவலகத்தில் பறந்து *ஆல்ட் லாங் சைன்* என்ற ஸ்காடிஷ் பாடலைப் பாடி ஊழியர்களை வீட்டிற்குச் செல்ல வற்புறுத்தும். ஜப்பான் சில வருடங்களாகவே, ஊழியர்களுக்கு உடல்நலக் குறைவை ஏற்படுத்தும் அதிகப் பணிநேரத்தைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறது. ஓசாகா பல்கலைக்கழகம் இப்படி பணிக்கு அடிமையானவர்கள், முடிக்காத வேலைகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று பணிச் சுமையைக் குறைக்க பரிந்துரை செய்வதுடன் பல பணியாளர்களை நியமிக்கவும் கருத்து தெரிவித்துள்ளது.



## ஸ்மார்ட் குளியலறை

நீங்கள் குளியலறைக்குள் செல்லும் முன், மிதமான வெப்பத்தில், குளியல் தொட்டியை நிரப்புதல், வெதுவெதுப்பாக கழிவறை இருக்கையை அமைத்தல், போன்றவை அமேசானின் *அலேக்சா* நிறுவப்பட்ட அலைபேசியில் கட்டளையிடலாம். கோஹலர் நிறுவனம் கழிவறையில் ஸ்மார்ட் மூடியைப் பொருத்தி நீங்கள் அதன் அருகே செல்லும் போதே, தானாகவே திறக்கும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் அதன் கணினி உதவிக் கருவிகளை லாஸ் வேகாஸில் உள்ள CES கண்காட்சியில் காட்சிப்படுத்தியது. உங்கள் கழிவறையை அதுவே சுத்தப்படுத்திக் கொள்ளும் கட்டளை கேலிக்குரியதாக இருக்கலாம். ஆனால் குரல் மூலம் இயக்குவதை வீடு மற்றும் வாழிடங்களில் கொண்டு வருவது, வாழும் இடத்தை குரல் மற்றும் சைகை வழிக் கட்டுப்படுத்துவதாக உருவாக்குவது வருங்காலத்தில் இயல்பானதாக மாறலாம்.

## தனிமை அமைச்சர்



இங்கிலாந்து அரசு தற்போது தனிமையையும், சமூகத்தில் தனிமையுடன் போராடுவதையும் கையாள அமைச்சர் ஒருவரைக் கொண்டுள்ளது. தற்போதைய விளையாட்டு மற்றும் குடியியல் சமூக அமைச்சர் ட்ரேசி க்ரௌச்சுடன் பிரிட்டிஷ் பிரதமர் தெரெசா மே இதைக் கூடுதல் பொறுப்பாக ஒப்படைத்துள்ளார். சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுவதை எதிர்த்து போராடிய லேபர் MP ஜோ காக்ஸ் அவர்களின் நினைவாக இத்துறை இயங்குகிறது. 9 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தனிமையாக உணர்வதாகவும் அதே சமயம் 200,000 முதியோர் ஒரு மாதத்திற்கும் மேலாக யாரிடமும் பேசாமல் இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ட்ரேசி இதை, தனிமைக்கான ஜோ காக்ஸ் ஆணையத்தின் ஆலோசனையுடன் நிறைவேற்றியும் மக்களை இணைக்கும் பணிக்கான நிதிகளைத் திரட்டியும் செயல்படுவார்.

## சென்னையின் ISO வீடு




சுரானா குடும்பத்தின் ISO சான்றுப்பெற்ற இல்லமான, 'சுதர்மா'விற்கு வரவேற்கிறோம். இங்கு எல்லா செயல்பாடுகளும் மிகத் திறமையாக செயல்படுவதுடன் ஒவ்வொன்றும் இறுதி வரை கவனத்துடன் பட்டியலிட்டும் உள்ளன. அவர்கள் சிறப்பான, தேவையின் அடிப்படையிலான சமையல், வீட்டுப் பராமரிப்பு மற்றும் வசதி மேலாண்மை சேவைகளை எல்லா நேரத்திலும் வழங்குவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். ISO வழிகாட்டுதலுக்கேற்ப ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் ஒவ்வொரு பணியை செய்வார்கள்; ஒவ்வொரு அறையும் ஒரு பெயரைப் பெற்றுள்ளது - சமையலறை அன்னலட்சுமி எனவும், உண்ணும் அறை த்ருப்தி என்றும், பூஜை அறை கேவல்யாதும் என்றும் குழந்தைகள் அறை *சிஷுகுடீர்* எனவும் பலவாறு பெயரிடப்பட்டுள்ளன. இக்குடும்பம் உடல்நலம் உள்ளிட்ட பலவற்றில் முன்னேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## பொங்கலைக் கொண்டாடிய கனடா பிரதமர்

நல்லிணக்க அடையாளமாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பொங்கல் விழவை குர்தா மற்றும் தமிழ் பாரம்பரியமான வேஷ்டி அணிந்து கொண்டாடினார். கனடா தமிழர்களுக்கு இனிய தை பொங்கல் நல்வாழ்த்துகள் என்று தன் முகநூலில் பதிவிட்டு வாழ்த்தியது 6 மணி நேரத்திற்குள் 21,000 லைக்குகளைப் பெற்றது. ஜனவரி 14ல் கனடா தமிழர்களுக்கு பொங்கல் வாழ்த்துக் கூறும் வீடியோவையும் அவர் பதிவிட்டார். டொரண்டோ மேயர் ஜான் டொரி, ட்ரூடோவுடன் இணைந்து பொங்கல் சமைத்தார்.

*ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப் பிரதீஷ்*

# Inspiration
# AROUND EVERY CORNER

## The ring that changed everything

Serving others is pretty much reflexive for Rotarians, whether it's spreading hope or orchestrating critical connections. When the husband of Lesley Barmania, a Rotarian from Canada, became seriously ill in Korea just after they attended the 2016 convention, fellow Rotarians put her in touch with In-Seok Kim, a Rotarian from Busan, who launched an emergency blood drive for her husband's rare type. The connection proved to be lifesaving.

**Find your inspiration at the Rotary Convention in Toronto.**
**Register today at riconvention.org.**





Rotary

TORONTO 2018

ROTARY CONVENTION
23-27 JUNE 2018
TORONTO, ONTARIO, CANADA